# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

சுடர் 32 கதிர் 319 புரட்டாதி 25ஆம் நாள் புதன்கிழமை 11 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20

பக்கங்கள்: 32+2


## அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக
# வெள்ளியன்று வடக்கில் முழுமையான அடைப்பு
### 19 அமைப்புகள் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 11

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வடமாகாணம் முழுவதும் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் இணைந்து கூட்டாக இந்த அடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன. அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் முன்னால் கவனவீர்ப்புப் போராட்டமும் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டம் தொடர்பில் 19 அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒப்பமிட்டு ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு சட்டரீதியான விடயம் என்பதைக் கடந்து விட்டது. நியாயத்தின் அடிப்படையில் அணுகப்பட வேண்டிய ஓர் விடயமாக ஆகிவிட்டது. ஓர் அரசியல் தீர்மானத்தின் ஊடாகத் தீர்க்கப்படவேண்டிய அடிப்படையான பிரச்சினைகளுள் ஒன்று என்ற பரிமாணத்தையும் அடைந்துவிட்டது.

12 ஆயிரம் முன்னாள் விடுதலைப் புலிகளை, குறுகியகாலத் தடுப்புக்குப் பிறகு, மீளவும் சமூகத்துடன் இணைய வழிவகை செய்த ஓர் அரச பொறிமுறையானது, வெறும் 132 பேர்களை மட்டும் தொடர்ந்தும் சிறைகளில் அடைத்திருப்பதானது எவ்வித சட்ட அர்த்தமும் இல்லாத செயற்பாடு.

எமது வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றப் பிரதிநிதிகள், அரசின் பங்காளிகளாகமாறி,

>> 29

## யாழ்ப்பாணத்துக்கும் வந்தன மலேரியா பரப்பும் நுளம்புகள்

யாழ்ப்பாணம், ஒக். 11

தலை மன்னார் பகுதியில் கடந்த ஆண்டு இனங்காணப்பட்ட மலேரியாவை பரப்பும் நுளம்புகள், யாழ்ப்பாணம் தொடருந்து நிலையச் சூழலில் உள்ள 19 கிணறுகளிலும் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தும் அவசர நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி க.நந்தகுமார் தெரிவித்தார்.

மலேரியாவை ஒழித்த நாடாக இலங்கை அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மன்னாரில் மலேரியாவைப் பரப்பும் நுளம்பு கடந்த ஆண்டு மீண்டும் கண்டறியப் பட்டிருந்தன. அதேவகையான நுளம்புகளே யாழ்ப்பாணத்திலும் கண்டறியப் பட்டுள்ளன.

“யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்தை அண்மித்த பகுதிகளில் காணப்படும் கிணறுகளை டெங்குக் கட்டுப்பாட்டுக்குச் சென்ற அதிகாரிகள் சோதனையிட்டனர்.

>> 29

## பிரபாகரனின் இறப்பால் துயரடைந்தாராம் ராகுல்

கொழும்பு, ஒக். 11

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரினது என்று தெரிவித்து இலங்கை அரசால் காட்டப்பட்ட சடலத்தைப் பார்த்துத் தானும் தனது சகோதரி பிரியங்கா வதேராவும் வேதனைப்பட்டார்கள் என்று தெரிவித்தார் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்

>> 29

## செஞ்சிலுவை அதிகாரிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவரையும், பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் மருத்துவர்கள் நேற்றுச் சந்தித்துள்ளனர். அவர்களது

>> 29

## புதிய அரசமைப்பு ஒருபோதும் இலங்கையை பிளவுபடுத்தாது
### உறுதியளிக்கின்றார் ஜே.வி.பி. தலைவர்

கொழும்பு, ஒக். 11

புதிய அரசமைப்பு ஒருபோதும் நாட்டைப் பிளவுபடுத்தாது. மகிந்த அணியினர் கூறும் கருத்துக்கள் அனைத்துமே பொய்யானவை.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்புத்

>> 29

## முதல் பெண் மாவீரர் மாலதியின் நினைவேந்தல் நேற்று
### மன்னார், முல்லைத்தீவில் கடைப்பிடிப்பு



முல்லைத்தீவு, ஒக்.11

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று மன்னாரிலும், முல்லைத்தீவிலும் நடைபெற்றன.

மன்னாரில், ஆண்

>> 29

## அமைச்சர் மனோ அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 11

சாட்சிகளின் தேவையைக் கருதி வழக்குகள் இடமாற்றப்படுவது ஏற்புடையதல்ல என்பதை ஏற்றுக் கொள்வதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்

>> 29

## மோ. சைக்கிள் விபத்தில் இளைஞன் பரிதாபச் சாவு
### அச்சுவேலியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்.11

மோட்டார் சைக்கிள் மின் கம்பத்தில் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் அச்சுவேலி தெற்கு நெருப்புமூட்டி பகுதியில் இடம்பெற்றது. நாவற்குழியைச் சேர்ந்த சஜீபன் (வயது -20) என்ற இளைஞன் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்

>> 29

## 54 கிலோ கஞ்சா மல்லாகத்தில் மாட்டியது

யாழ்ப்பாணம், ஒக்.11

மல்லாகம் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களின் அதிரடி நடவடிக்கையில் 54 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்

>> 29

## முக்கிய நாடுகளின் புலனாய்வு பிரிவுகள் எல்லாம் இலங்கையில்
### இப்படிச் சொல்கிறார் ஞானசார தேரர்

கொழும்பு, ஒக். 11

நாட்டினுள் இஸ்ரேலின் மொசாட் புலனாய்வுப் பிரிவு, இந்தியாவின் றோ புலனாய்வுப் பிரிவு, அமெரிக்காவின் சி.ஐ.ஏ. புலனாய்வுப் பிரிவு, சீனாவின் புலனாய்வுப் பிரிவு என்று முக்கியமான பலம்மிக்க நாடுகளின் புலனாய்வுப் பிரிவுகள் எல்லாம் இலங்கைக்குள் புகுந்துள்ளன. நாட்டில் பெரிய விளைவுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதாலேயே

>> 29

## வறுமைப்பட்ட மாணவர்கள்
# வகுப்புக்கு வந்தால் 100 ரூபா பணம்
### வ்ரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்த ஆராய்கிறது அரசு

கொழும்பு, ஒக். 11

வறுமை மற்றும் ஏனைய காரணங்களால் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாதந்தோறும் சிறப்புக் கொடுப்பனவு வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கொழும்பு அரசின் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். அடுத்த ஆண்டுக்கான நிதி

>> 29

### முச்சந்தி முரளி



அப்ப இனி படிப்பே ஒரு உழைப்புத்தான் பாருங்கோ!...

## நாமல் நேற்று திடீர்க் கைது

கொழும்பு, ஒக். 11

நீதிமன்ற உத்தரவை மீறி அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்திய குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட 6 பேர் நேற்றுக் கைது செய்

>> 29

see more news in newuthayan.com

## புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு
# ஆதரவு திரட்ட மைத்திரி களமிறங்குகிறார் இன்று

கொழும்பு, ஒக். 11

புதிய அரசமைப்புத் தொடர்பாக வெளியான இடைக்கால அறிக்கைக்கு எதிர்ப்புகள் வலுத்து வரும் நிலையில், புதிய அரசமைப்பு முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்புகளிடம் இருந்தும் ஆதரவு திரட்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேரடியாகக் களம் இறங்கவுள்ளார்.

இடைக்கால அறிக்கை தொடர்பில் எதிர்வரும் 30ஆம் திகதி நாடாளுமன்றில் (அரசமைப்பு நிர்ணய சபையில்) விவாதம் நடத்துவதற்கு முன்னதாக, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

>> 29

# இனிப்புக் கொடுத்த படையினரிடம் மக்கள் எதிர்பார்த்ததோ வேறு
### கேப்பாபிலவில் போராட்டக் களத்தில் நேற்றுச் சம்பவம்

முல்லைத்தீவு, ஒக்.11

கேப்பாபிலவில் நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு இனிப்புக் கொடுத்த படையினரிடம் அவர்கள் நேற்றுச் சரமாரியாகக் கேள்வியெழுப்பினர்.

இலங்கைப் படையினரின் 68ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கேப்பாபிலவில்

>> 29



## துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட

# பல்கலை. மாணவருக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.11

துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் இருவருக்கும் நீதி வழங்கக் கோரி நேற்று கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் குளப்பிட்டிப் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களான கஜன், சுலக்சன் உயிரிழந்தனர். 'அந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் கைது செய்யப்பட்டனர்.

மாணவர்களின் ஓராண்டு நினைவு நிகழ்வு சுன்னாகத்தில் நேற்று மாணவன் சுலக்சனின் இல்லத்தில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மாணவர்களின் கொலைக்கு நீதி வேண்டும் என்று வலியுறுத்தி கவனவீர்ப் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள், அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

"சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட பல்கல்லைக்கழக மாணவர்கள் இருவருக்கும் சட்ட ரீதியான நீதி இன்று வரை வழங்கப்படவில்லை." என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவித்தார்.

"அரச தலைவர் இந்த சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணைகள் துரிதமாக இடம்பெற்று அவர்களின் இழப்புக்கு நீதி வழங்கப்படும் என் உறுதியளித்திருந்தார்.

அவர்கள் இறந்து ஒருவருடம் ஆகிய போதிலும் சட்ட ரீதியாக அவர்களுக்கு நீதி வழங்கபடவில்லை.

உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு வீடுகள் மற்றும் அரச உத்தியோகம் போன்றன வழங்கப்படும் என கொழும்பு மீள் குடியேற்ற அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் மக்களுக்கு வழங்கப்படும் வீட்டுத் திட்டம் ஊடாக இழுபறி நிலையிலேயே அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இறந்த மாணவர்களுக்கு நீதியை வழங்குவதுடன் அவர்களின் குடும்பங்களுக்கு தேவையான உதவிகளை இலங்கை அரசு செய்ய வேண்டும்." என்று அவர் குறிப்பிட்டார்.

(ற-8)

## சைட்டத்துக்கு எதிரான ஊர்வலத்தில்

# மாணவர்களின் மீது நீர்த்தாரைப் பிரயோகம்

### 20 பேர் வரையானோர் கைது

கொழும்பு, ஒக்.11

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியைத் தடை செய்யக் கோரி நேற்று அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்களால் கொள்ளுப்பிட்டியில் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வலம் நடத்தியோர் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் ஒன்றரை மணித்தியாலம் கண்ணீர்ப்புகைத் தாக்குதலும் நீர்த்தாரைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பு மாநகர சபைக்கு முன்னால் ஆரம்பமான எதிர்ப்பு ஊர்வலம் காலி வீதியை பிற்பகல் மூன்று மணியளவில் வந்தடைந்தது. அங்கு குவிக்கப்பட்டிருந்த கலக தடுப்புப் பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் மாணவர்களைக் கலைந்து செல்லுமாறு கோரினர். ஆயினும் மாணவர்கள் தொடர்ந்து முன்னேற முற்பட்டமையால் சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேல் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அதில் பாதிக்கப்பட்ட 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும், சுமார் 20 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஊர்வலத்தால் கொழும்பு சுற்றுவட்டம், கொள்ளுப்பிட்டி, பொரளை சுற்றுவட்டம், காலி வீதி போன்ற பகுதிகளில் நேற்று மாலை கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது. வாகன நெரிசல் இரவு வரை நீடித்ததால் பொது மக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

அதேவேளை, மாணவர்கள் ஊர்வலம் நடத்தவிருந்தநிலையில் அரசதலைவர் செயலகம், அரச அலுவலகங்களுக்குள் அவர்கள் நுழைய கொழும்பு கோட்டை நீதிமன்று நேற்றுத் தடை உத்தரவு பிறப்பித்தது.

கொழும்பு கோட்டை பொலிஸார் முன்வைத்த கோரிக்கைக்கமைய அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர, தென்பிட்டிய சுகதானந்த மற்றும் வைத்திய பீடத்தின் மாணவர்கள் செயற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பிரியங்கர பெரேரா ஆகியோருக்கே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி சைட்டம் கல்லூரிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது சுகாதார அமைச்சின் அலுவலகத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மாணவர் செயற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத்தின் பிணைக் கோரிக்கை எதிர்வரும் 19ஆம் திகதிவரை கொழும்பு மேல் நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ற)

# நெடுந்தீவு பிரதேச மருத்துவமனை குறைபாடுகளை நீக்கக் கோரிக்கை

### பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

நெடுந்தீவு, ஒக்.11

நெடுந்தீவு பிரதேச மருத்துவமனையின் தீர்க்கப்படாத நீண்ட காலக் குறைபாடுகளை உரிய அதிகாரிகள் தலையிட்டுத் தீர்த்து வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பிரதேச மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டம் நெடுந்தீவு பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக காலை 10 மணியளவில் நடைபெற்றது.

நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படாமை, ஆபத்தான நிலமையில் நோயாளிகள் விடுதிகள், நோயாளர் காவு வண்டி வசதிகள் ஏற்படுத்தப்படாமை, மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் இல்லாமை, முறையானபிரேதஅறைஇல்லாமை போன்ற நீண்ட காலக் குறைகளை நிவர்த்தி செய்யக் கோரியே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊர்வலமாகச் சென்று பிரதேச செயலகத்தில் வைத்து யாழ்.மாவட்டச் செயலரிடம் கையளிப்பதற்காக மனுவைக் கையளித்தனர்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றும், இரண்டு வாரம் கடந்த நிலையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கடிதம் அனுப்பினோம். ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் எந்தப் பதிலும் கிடைக்கவில்ல. நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(ற-ரி2)

# மோட்டார் குண்டுகள் மீட்பு

மயிலிட்டி, ஒக்.11

வலி.வடக்கு, மயிலிட்டியில் ஒரு தொகை மோட்டார் குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

வெற்றுக் காணியில் அமைந்த பழைய கிணறு ஒன்றிலிருந்தே அவை மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சோதனை நடத்தினர். இதுவரை 20 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டன என்றும், இந்த எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் ஹலோரஸ்ட் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி2,26)

# பன்றிகளைக் கட்டுப்படுத்துமாறு கிளி. விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.11

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர்ப்புறம் மற்றும் அக்கராயன் பகுதிகளில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் பன்றிகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று விவசாய அமைப்புக்கள் மாவட்ட செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் சு.அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி நகரின் மத்தியில் மக்கள் அதிகமாகவுள்ள ஆனந்தபுரம் மற்றும் அக்கராயன் பகுதிகளில் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. அவை கூடு அமைக்கப்பட்டு நிலத்துக்கு சீமெந்து இடப்பட்டு வளர்க்கப்படவில்லை. அவை வெளியே விடப்பட்டு வளர்க்கப்படுவதால் அவை பயிர்களை நாசம் செய்கின்றன.

பன்றி இனமானது மிக வேகமாகப் பெருகக்கூடிய ஓர் இனம் இதனால் வரப்போகும் மாரிகாலத்துக்கு முன்னர் இவற்றைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பில் மாவட்டச் செயலர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

பண்றிகளை மக்கள் செறிந்து வாழும் பகுதிக்குள் வளர்க்க முடியாது. வெளியான பிரதேசத்தில் அடைப்பு நிலையில் நிலத்துக்கு சீமெந்து இடப்பட்டே வளர்க கப்பட வேண்டும். தொடர்புபட்ட சகல திணைக்களங்களும் இது தொடர்பில் உடன் கவனம் செலுத்த வேண்டும் என்று மாவட்டச் செயலர் பணித்தார்.

(ற-101)

# மிதிவெடியில் சிக்கி வளர்ப்பு மாடு காயம்

### மறவன்புலோவில் சம்பவம்



மேய்ச்சலுக்குச் சென்ற வளர்ப்பு மாடு மிதிவெடியில் சிக்கியது. அதன் ஒரு கால் மோசமாகச் சிதைந்தது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை மறவன்புலோவில் நடந்துள்ளது. மாட்டின் உரிமையாளரின் வீட்டின் பின்புறமே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மறவன்புலோ கிராமம் 1999ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரை படையினரின் பிடியில் உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட பகுதியாகும். பின்னர் மக்கள் மீள்குடியமர்ந்த வேளை அரச சார்பற்ற மனிதாபிமான கண்ணி வெடி அகற்றும் நிறுவனம் ஒன்று கண்ணிவெடி அகற்றும் பணியை இந்தப் பகுதிகளில் மேற்கொண்டது.

மக்கள் குடியமர்ந்துள்ள பகுதியில் மாடு மிதிவெடியில் சிக்கியுள்ளமை அந்தப் பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற-101)

# விபத்தில் ஒருவர் காயம்



வவுனியா, ஒக்.11

வவுனியா, புளியங்குளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

முச்சக்கர வண்டி அரச பேருந்தை முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றது .எதிரே வந்த தனியார் பேருந்துடன் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்கு உள்ளானது. முச்சக்கர வண்டிச் சாரதி காயமடைந்தார். அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ற-ரி2)



## கார் விபத்துக்குள்ளானதில் மூவர் சாவு, இருவர் காயம்

கொழும்பு, ஒக்.11
தெல்தெனியவில் நேற்று நடந்த வீதி விபத்தில் மூவர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்தனர்.
கார் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதால் விபத்து ஏற்பட்டுள்ளது.
சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் இருவர் பெண்கள்.
காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி4)

# சிங்கள பௌத்தரே இலங்கையை ஆளவேண்டும்

## இப்படிக் கூறுகின்றார் ஞானசாரர்

கொழும்பு,ஒக்.11
இது சிங்கள பௌத்த நாடு. இதை சிங்கள பௌத்தர்களே ஆட்சி செய்ய வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் பொது பல சேனா அமைப்பின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்தார்.
பொதுபல சேனா அமைப்பின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இன்று இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது என்று கூறி புதிய ஒரு அரசமைப்பைக் கொண்டு வர முயற்சி செய்கிறார்கள்.
அரசமைப்பு என்பது எமது சந்ததியினரின் எதிர்காலம். அதனை அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றத் தேவையில்லை.
இன்று இந்த நாட்டில் அதிகாரம் மிக்கவர்களாக முஸ்லிம் அமைச்சர்கள் உள்ளனர். கபீர் ஹாசீமுக்கு 75 நிறுவனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ரிஷாத் பதியுதீனுக்கு 40 க்கும் அதிகமான நிறுவனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆக அதிகாரத்தில் அவர்களே உள்ளனர். பிறகு ஏன் அதிகாரம் வழங்கக் கோருகிறார்கள்.
எமக்கு எந்தக் கட்சியும் அவசியமில்லை நாம் நாட்டு நலனுக்காக குரல் கொடுக்கிறோம்.
நாம் விரைவில் கபீர் , ரிஷாத், விக்னேஸ்வரன் உள்ளிட்ட அனைவரையும் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்க உள்ளோம் - என்றார். (ற-ரி4)

## மகளிர் சுயதொழில் உற்பத்தி பொருள் கண்காட்சி நேற்று

திருகோணமலை, ஒக்.11
மகளிர் சுயதொழில் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியும் விற்பனையும் திருகோணமலை பஸ் தரிப்பிடத்தில் நேற்று நடைபெற்றது.
இந்தக் கண்காட்சியும் விற்பனையும் திருகோணமலை மாவட்ட மகளிர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டது.



11 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சுயதொழில் உற்பத்திகளை காட்சிப்படுத்தும் விதத்தில் மாவட்டப் பெண்கள் செயலணி கண்காட்சிகளை நடத்தி வருகின்றது.
மாவட்ட அரச அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.
ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் வீதி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி மற்றும் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ற-ரி4,45)




தொழில்சார் உளவள நிலையம் சர்வதேச உளநல சுகாதார தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த மாபெரும் விழிப்புணர்வு ஊர்வலமும் மாநாடும் மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றன. அலுவலகங்களில் உளநலம் காப்போம் எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரிக்கு அருகில் இருந்து மாபெரும் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. தொழில்சார் உளவள நிலையத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான அருட்தந்தை போல் சற்குணநாயகம் அடிகளார் தலைமையில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. (ற-ரி4)

## முன்னாள் அமைச்சருக்கு எதிராக விசாரணை

கொழும்பு, ஒக்.11
முன்னாள் கலாசார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.பி ஏக்கநாயக்க மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மத்திய கலாசார நிதியத்துக்குச் சொந்தமான கப் ரக வாகனத்தை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பாக முறைப்பாடுகிடைத்துள்ளது என்றும், அது குறித்த விசாரணை இடம்பெறுகின்றது என்றும் நிதிமோசடி விசாரணைப் பிரிவு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் நேற்று அறிவித்துள்ளது.
2012 தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அந்த கப் ரக வாகனத்தை முன்னாள் அமைச்சர் ஏக்கநாயக்க முறைகேடாகப் பயன்படுத்தினார் என்று கூறப்படுகின்றது.
இதேவேளை முன்னாள் அமைச்சர் டி.பி ஏக்கநாயக்க முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கான ஆதரவுக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். (ற-ரி4)

# விசேட தேவையுடைய மாணவருக்கான விளையாட்டுப் போட்டிகள் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஒக்.11
பன்னாட்டு உளநல நாளை முன்னிட்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட உளநலப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த இந்த விளையாட்டுப் போட்டி கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை மைதானத்தில் நடைபெற்றது.
போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக நடுவண் சுகாதார அமைச்சின் உளநலப் பிரிவு பணிப்பாளர் மருத்துவர் திருமதி சந்திரமாயி டி சில்வாவும் சிறப்பு விருந்தினராக மூத்த உளநல மருத்துவ நிபுணர் மருத்துவர் நெய்ல் பெர்னான்டோவும் கலந்துகொண்டனர்.
விருந்தினர்கள் விசேட தேவையுடைய மாணவர்களின் மேலைத்தேய வாத்தியங்கள் இசையுடன் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.
ஒலிம்பிக் தீபத்தை கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் திருமதி மைதிலி சிவானந்தன் ஏற்றினார்.
போட்டிகளில் மாவட்டத்தைச் சேர்ந்த 21 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 500க்கு மேற்பட்ட விசேட தேவையுடைய மாணவர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு 20 வகையான போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என நடத்தப்பட்டன.
போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.
ஈ. பிளே கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனமும் கல்கிசை புலமைசார் குறைபாடுடையோர் சங்கம் ஆகியவை இணைந்து போட்டிகளை நடத்தினர் எனவும் கீஸ் ஸ்போட்ஸ் நிறுவனத்தால் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)







# தாய்வான் வங்கி மோசடி: பெரும்புள்ளிகள் தொடர்பு

### அரச சார்பற்ற நிறுவனமொன்றும் விசாரணை வளையத்துக்குள்

கொழும்பு, ஒக். 11

தாய்வானில் பிரபல வங்கியொன்றிலிருந்து பெருந் தொகைப் பணம் இணைய மோசடியூடாக திருடப்பட்டு இலங்கையிலுள்ள வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ள மோசடி தொடர்பில் பல திடுக்கிடும் தகவல்கள் கசிய ஆரம்பித்துள்ளன.

மோசடியுடன் தொடர்புடைய சந்தேகத்தில் லிட்றோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டிருந்தார். அரச சார்பற்ற நிறுவனமும் தொடர்புபட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனம் இந்தப் பணத்தின் ஒருபகுதியை தனது கணக்கில் வைப்பிலிட்டுக் கொண்டுள்ளது. விரைவில் அந்த நிறுவனம் விசாரணைக்கு உட்படுத்தப்படும் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வருடங்களாக வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையர் பலரின் வங்கியின் கணக்குகளிலேயே இந்தப் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. பன்னாட்டு நிதி மோசடி வலையமைப்பின் சில செயற்பாடுகள் இலங்கையிலும் முன்னெடுக்கப்படுவதாக இதன்மூலம் அம்பலமாகியுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிடுகின்றனர். (5)

# கைதாகிய நாமலின் செயலர் சிலமணி நேரத்தில் பிணையில்

### அபுதாபியில் இருந்து நாடு கடத்தப்பட்டவர்

கொழும்பு, ஒக். 11

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் கவர்ஸ்கோப் நிறுவனத்தின் பணிப்பாளர்களுள் ஒருவரும், அவரது செயலருமான படபொல ஆராச்சிலாகே ஓனெல்ல இரேசா சில்வா நேற்று அதிகாலை கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, அவரது பிணைக் கோரிக்கைக்கு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அவரை நீதிபதி பிணையில் விடுவித்தார்.



அபுதாபியிலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட அவர், கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ் தெரிவித்ததாவது, தனது சேவை பெறுநர் அபுதாபியில் பணிபுரிந்து வந்தார். அவர் பணிபுரிந்த நிறுவனத்திடமே அவரது கடவுச் சீட்டு இருந்தது. நிதிச்சலவை சட்டத்தின் கீழ் அவரைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டு வழக்கு ஆரம்பிக்கப்படும்போது அவரால் அதனாலேயே மன்றில் தோன்ற முடியாமல் இருந்தது. நுழைவிசைவு காலாவதியான பின்னர் அவரைப் பொலிஸார் நாடு கடத்தினர். அவருக்குப் பிணை வழங்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். சட்டமா அதிபர் திணைக்களம் பிணை வழங்கப்படுவதற்கு எதிர்ப்பு வெளியிடவில்லை.

5 லட்சம் ரூபா ரொக்கப் பிணை, 50 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக் கிழமை நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கையெழுத்திட வேண்டும் என்றும் அவர் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ள முடியாது என்றும் நிபந்தனை விதித்தது. (5,31)

### அமைச்சரவைக் கூட்டத்தில் கடும் அமளி!

# ஐ.தே.க. - சு.கட்சியின் அமைச்சர்களிடையே மூண்டது சொற்போர்

கொழும்பு, ஒக். 11

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களுக்கும் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது கடும் அமளிதுமளி ஏற்பட்டதாக அறியமுடிகின்றது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக் காலை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இந்த வாக்குவாதங்கள் அமைச்சர்களிடையே நடந்துள்ளன.

கண்டி அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப்பணிகள் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தின்போது நகர அபிவிருத்தி மெகா பொலிஸ் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, கிரமமாக திட்டமிடுவதன் மூலம் நெடுஞ்சாலை நிர்மாண செலவுகளைக் குறைக்கலாமென்று தெரிவித்தார்.

'குருநாகலில் இருந்து கலகெதர ஊடாக கட்டுகஸ்தோட்டை வரையான அதிவேக நெடுஞ்சாலையை நான்கு ஒழுங்கை பாதைகளாக மாற்றியிருந்தால் செலவு குறைந்திருக்கும். முறையான திட்டமிடல்களும், ஒப்பந்தங்களை உரியவர்களுக்கு வழங்குவதில் உள்ள குறைபாடுகளும் செலவுகள் அதிகரிக்கக் காரணம்' என்று அமைச்சர் சம்பிக்க குறிப்பிட்ட கையோடு நெடுஞ்சாலைகள் பற்றிய வாய்த்தர்க்கம் ஆரம்பமானது.

நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இது தொடர்பில் விளக்கங்களை வழங்கிக் கொண்டிருந்தபோது சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் கருத்துத் தெரிவிக்க முற்பட்டதால் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் கண்டி அதிவேக நெடுஞ்சாலைக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்படுகிறார் என்று சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் பேசத் தொடங்கினர். அமைச்சர் கிரியெல்லவுக்கு ஆதரவாக கண்டி மாவட்ட அமைச்சர்களான மலிக் சமரவிக்ரம, சரத் அமுனுகம, ரவூப் ஹக்கீம் ஆகியோர் கருத்துக்களை வெளியிட்டனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, மகிந்த அமரவீர, தயாசிறி ஜயசேகர ஆகியோர் தொடர்ந்தும் க்டுமையான கருத்துக்களை வெளியிட்டனர். ஆத்திரமுற்ற அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கடந்த தேர்தல்களில் வெற்றியைப் பெற்றுக் கொடுக்க முடியாதவர்கள் இப்போது வந்து அபிவிருத்தி பற்றிப் பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாதென சாடியுள்ளார்.

'உங்களுடைய குருநாகல் தொகுதியிலேயே உங்களுக்கு வாக்கு இல்லை. தெற்கில் கூட தோற்றீர்கள். உங்கள் கட்சிக்கு வாக்குகளைப் பெற்றுக்கொடுக்கக்கூட உங்களால் முடியவில்லை. நாங்கள் கண்டியில் வென்றோம். அரசமைக்க நாங்களும் முக்கிய பங்கை வகித்திருக்கிறோம்' என்று அமைச்சர் கிரியெல்ல கூறியதும் நிலைமை முற்றி அமைச்சரவையே அமளியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச தலைவர் மைத்திரியின் தலையீட்டினால் பின்னர் நிலைமை சுமுகமடைந்ததாக அறியமுடிகின்றது. (5)

### புறக்கோட்டையில் சுற்றிவளைப்பு

## 100 பரல்கள் தே. எண்ணெய் மீட்பு

கொழும்பு புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த உபயோகித்த தேங்காய் எண்ணெய் அடைக்கப்பட்டிருந்த 100 பரல்களையும், இரசாயனப் பொருள்களை அடைக்கும் 25 கொள்கலன்களில் நிரப்பப்படவிருந்த தேங்காய் எண்ணெய் பரல்களையும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் நேற்றுக் கைப்பற்றினர்.

பாவித்த தேங்காய் எண்ணெய் நுகர்வோரின் பாவனைக்கு வழங்காமல் வேறு பாவனைக்கே விற்கப்படுவதாக வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் அதிகாரிகளிடம் தெரிவித்தபோதும் அதற்கான எந்த ஆதாரங்களையும் சமர்ப்பிக்கவில்லையென சுற்றிவளைப்பில் ஈடுபட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (5,31)

### பிணைமுறி மோசடி விவகாரம்:

# சீறினார் மைத்திரி கபீர், மலிக் 'கப்சிப்'

### ஆணைக்குழுவில் இன்று முன்னிலையாவர்

கொழும்பு, ஒக். 11

மத்திய வங்கி பிணைமுறி மோசடியை விசாரிக்கும் ஆணைக்குழுவின் விசாரணைகளில் எதுவித தலையீடுகளையும் செய்யமுடியாதென அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.



இந்த விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் அதனை எதிர்கொண்டேயாக வேண்டுமென்றும் அதில் ச்மரசத்துக்கே இடமில்லையென்றும் அரச தலைவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியை விசாரிக்கும் ஆணைக்குழுவில் முன்னிலையாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களான மலிக் சமரவிக்ரம, கபீர் ஹாசீம் ஆகியோர் நேற்றுக் காலை அரச தலைவரைச் சந்தித்துப் பேசினர்.

அரச தலைவரின் இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பால் நேற்றுக் காலை 8 மணிக்கு நடைபெறவிருந்த அமைச்சரவைக் கூட்டமும் முற்பகல் 10 மணிக்கு பிற்போடப்பட்டது.

நேற்றையதினம் விசாரணை ஆணைக்குழுவில் இரு அமைச்சர்களையும் முன்னிலையாகுமாறு கேட்கப்பட்டிருந்தபோதும் அமைச்சரவைக் கூட்டத்தைக் காரணங்காட்டி இன்று புதன்கிழமை ஆணைக்குழு முன் தோன்றுவதற்கு அவர்கள் முன்னறிவித்தல் கொடுத்திருந்தனர்.

இந்தப் பின்னணியில் நேற்றுக் காலை அரச தலைவரைச் சந்திக்க முன்னர் அமைச்சர்களான மலிக் சமரவிக்ரம மற்றும் கபீர் ஹாசீம் ஆகியோர் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

அரச தலைவரைச் சந்தித்து நிலைமைகளை விளக்கிய இந்த அமைச்சர்கள் பிணைமுறி விவகாரத்தில் தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதை எடுத்துக்கூறியிருப்பதாக அறியமுடிகின்றது.

அமைச்சர்களின் இந்தக் கருத்துகளை மிகவும் நிதானமாகக் கேட்டறிந்த மைத்திரி பிணைமுறி விவகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்நோக்கியே ஆகவேண்டும் எனவும், அதில் நிவாரணத்தையோ சலுகைகளையோ தம்மால் வழங்க முடியாதென்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (5)

# முன்னாள் அமைச்சர் ரவியின் வீட்டுக்கு மருமகன் வாடகை செலுத்தியது தெரியாது

### ஆணைக்குழு முன்னிலையில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் மகேந்திரன் தெரிவிப்பு

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வசித்த வீட்டுக்கு எனது மருமகன் அர்ஜுன் அலோசியஸ் வாடகை செலுத்தியதாக கூறப்படும் விடயத்தை இந்த ஆணைக்குழு சாட்சிப் பதிவின் இடையே கேள்விப்பட்டேன். இது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்தார்.

பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள அரச தலைவர் ஆணைக்குழு முன்னிலையில் நேற்று எட்டாவது நாளாகவும் சாட்சியமளித்தபோது, சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் தப்புல டி லிவேரா குறுக்கு விசாரணை முன்னெடுத்தார்.

பிணை முறி ஏலத்துக்கு முன்னர் அரசவங்கிகளின் பிரதானிகளுடன் அமைச்சர் ரவி கருணாநாயக்க நடத்தியதாக கூறப்படும் கலந்துரையாடல் தொடர்பில் மகேந்திரனிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அவ்வாறான கலந்துரையாடல் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று பதிலளித்தார்.

அரசுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள, வழமையாகக் கையாளப்படும் நேரடி வைப்பு முறையை நிறுத்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை உபகுழு கூட்டத்தில் ஆலோசனை வழங்கியதாக அர்ஜுன மகேந்திரன் ஏற்கனவே கூறியதைச் சுட்டிக்காட்டி, தலைமை அமைச்சரின் கோரிக்கைக்கு அமைவாகவா நேரடி வைப்பு முறைமையை தவிர்த்தீர்கள் என்று மகேந்திரனிடம் நேற்றுக் கேள்வி எழுப்பப்பட்டது. அது மட்டும் காரணமல்ல. அப்போதைய கள நிலவரத்தையும் ஆராய்ந்தே முடிவெடுக்கப்பட்டதாகக் கூறினார். (5,31)

# அமைச்சரை விமர்சித்த தொழிற்சங்கவாதிக்கு எதிராக விசாரணை

யாழ்ப்பாணம், ஒக்.11

பொது இடத்தில் அமைச்சரை தவறாக விமர்சித்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்களின் சங்கத் தலைவருக்கு எதிராக விசாரணை நடத்தப்படும் என சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

தாபன விதிக் கோவையின் படி அமைச்சர்களை பொது இடத்தில் விமர்சித்தல், ஊடகங்களுக்கு தகவல் கொடுத்தல் போன்ற விடயங்கள் தவறு.

அவ்வாறு ஊடங்கங்களுக்கு தகவல் கொடுக்கும் அதிகாரம் அமைச்சின் சில அதிகாரிகளுக்கு மட்டுமே உள்ளது.

அண்மையில் பொது சுகாதார பரிசோதகர்களின் சங்கத் தலைவர் , பொது இடத்தில் முன்னாள் சுகாதார அமைச்சரைப் பற்றி விமர்சித்துள்ளார்.

தவறான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளார். இது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக விசாரணை நடத்தப்படுகின்றது என்றார். (ய-ரி)

# பொன்நகர் இந்தியன் வீடுகளில் வெடிப்பு: மழைநீரும் உள்ளே!

## 74 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஒக்.11

கிளிநொச்சி பொன்நகர் மீள்குடியேற்றக் கிராமத்தில் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் 75 வீடுகள் அமைக்கப்பட்டன. எனினும் இந்த வீடுகள் முறையாக அமைக்கப்படவில்லை. மழைபெய்யும் போது தாவாரங்களுடாக மழைநீர் வீட்டுக்குள் வருகின்றது. சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டும் வருகின்றன என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தாழ்வாரங்கள் சுவருடன் ஒட்டியதாகவே அமைக்கப்பட்டுள்ளன. இந்தவீடுகள் அமைக்கப்பட்டு ஐந்து வருடங்களே ஆன நிலையில் மக்கள் குடியிருக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டது பொன்நகர் கிராமம்.


மீள்குடியமர்வின் பின்னர் இப்பகுதியில் காணியற்றவர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. இந்தியன் வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகளும் வழங்கப்பட்டன. 72 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன.


இருப்பினும் இந்த வீடுகள் முறைப்படி அமைக்கப்படவில்லை. சுவர்களில் வெடிப்புகள் ஏற்படுகின்றன. மழைநீர்வீட்டுக்குள் செல்கின்றது. வீட்டுக்கூரை சுவர்களில் நேரடியாக பொறித்து விடப்பட்டுள்ளது. சுவர்களில் வெடிப்புகள் தோன்றுவதால் மக்கள் பயத்துடன் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இதற்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர் இதுதொடர்பாக கரைச்சி பிரதேச செயலாளரிடம் கேட்டபோது:

மாவட்ட ரீதியில் ஆரம்பத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன. தற்போது பொன்நகர் கிராமத்திலுள்ள வீடுகளுக்கும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்தவருடம் திருத்த வீடுகளுக்கான நிதி வருகின்ற போது இவர்களுக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ய-6)







# தண்டனை முடிந்தும் விடுவிக்கப்படாத அரசியல் கைதிகள்

## அமைச்சர் சுவாமிநாதன் அசட்டை?

யாழ்ப்பாணம், ஒக்.11

முல்லைத்தீவைச் சேர்ந்த மூன்று அரசியல் கைதிகள் 15 வருட தண்டனைக் காலம் முடிந்த நிலையில் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. மாலைதீவு அரசால் 15 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டவர்களே இவ்வாறு இன்னமும் விடுவிக்கப்படாமல் உள்ளனர்.

அவர்களை விடுவிக்குமாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனிடம்கோரிக்கை விடுத்து 3 மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் இன்றுவரை அவர் பதிலளிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 2007ஆம் ஆண்டு மேமாதம் 18ஆம் திகதி அன்று மாலைதீவுக் கடற்பிரதேசத்தில் வைத்து சந்தேகத்தின் அடிப்படையில் இலங்கையின் வடக்கு பகுதி இளைஞர்கள் மூவர் மாலைதீவு அரசால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டு அந்நாட்டு நீதிமன்றினால் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையை இலங்கைச் சிறையில் அனுபவிக்கலாம் என கூறி அவர்கள் இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டனர். ஓர் ஆண்டு சிறைத் தண்டனை என்பது தொடர்ச்சியாக 8 மாதங்களும் 10 நாள்களுமே ஆகும். இதுவே இருநாடுகளினதும் நடைமுறை. இவர்களின் 15 ஆண்டு தண்டனைக்காலம் கடந்த மேயுடன் நிறைவு பெற்று விட்டது. அவர்களை விடுவிக்குமாறு பெற்றோர் என்னிடம் கோரிக்கை விடுத்தனர். நான் இதனைக் கடந்த ஜூலை மாதம் 2ஆம் திகதி சிறைச்சாலைகள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். சட்டமா அதிபர் மற்றும் சிறைச்சாலை ஆணையாளருடன் கலந்து பேசி விரைவில் பதிலளிப்பதாக அமைச்சர் அன்று தெரிவித்திருந்தார். ஆனால் மூன்று மாதங்கள் கடந்து விட்டன. இன்றுவரை அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. எனது கோரிக்கைக்கு அமைச்சரிடம் இருந்து பதிலும் கிடைக்கவில்லை என்றார். (ய-101)

# நீரிழிவு தினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம்.ஒக்.11

பன்னாட்டு நீரிழிவு தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, சித்திரப் போட்டிகள் நடைபெறவுள்ளன என்று யாழ்ப்பாண போதனா மருத்துவமனை நிபுணர் எம்.அரவிந்தன் தெரிவித்தார்.

கட்டுரைப் போட்டி கனிஸ்ட, இடைநிலை, சிரேஷ்ட வயதுப் பிரிவுகளில் நடைபெறும்.

மூன்று பிரிவினரும் 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' எனும் தலைப்பில் முறையே 250, 500, 1000 சொற்களை உடைய ஆக்கங்களை சுயமாகப் படைக்க வேண்டும்.

சித்திரப் போட்டியானது மூன்று பிரிவுகளில் ஏ3 சித்திரத்தாளில் விரும்பிய வர்ண வகைகளை பயன்படுத்தி வரையமுடியும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பியவர்கள் தங்களின் சுய விபரங்களைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலமாக நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ் போதனா மருத்துவமனை எனும் முகவரிக்கு நவம்பர் 10ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பி வைக்க வேண்டும் என்றார். (ய)

# நிரந்தர நியமனம்: தொண்டராசிரியர்களால் மேன்முறையீடுகள்

நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட தொண்டராசிரியர்களால் இதுவரைக்கும் 4 முறைப்பாடுகளும், 17 மேன்மூறையீடுகளும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் தொண்டரடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்களில் 182 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இது தொடர்பான பெயர்ப் பட்டியல் கொழும்பு கல்வி அமைச்சினால் மாகாணக் கல்வி அமைச்சிற்கு கடந்தவாரம் அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வாறு அனுப்பப்பட்ட பட்டியலை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஊடகங்கள் வாயிலாக பகிரங்கப்படுத்தினார்.

இதுதொடர்பான முறையீடுகள் இருப்பின் அதனைக் கல்வி அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வருமாறும் கோரியிருந்தார். இதன்பிரகாரம் நேற்றுமாலை வரையில் 4 முறைப்பாடுகளும், 17 மேன்முறையீடுகளும் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ய-101)

# சிறுவர் இல்லப் பிரச்சினைகளை உடனுக்குடன் அறிவிக்கவேண்டும்

## ஆணையாளர் தி.விஸ்வரூபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஒக்.11

வடக்கு மாகாண சிறுவர் இல்லங்களில் நடைபெறும் பிரச்சினைகள் தொடர்பாக உடனடியாக சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை திணைக்களத்திற்கு அறியத்தர வேண்டும். காலம் தாழ்த்துகின்றபோது பிரச்சினைகள் பெரிதாகும் என்று சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர் இல்லங்களில் சிறியளவில் தோன்றும் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றைச் சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டும். சிறிய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் காலப் போக்கில் அது வன்முறையாக மாறுகின்றன. அவ்வாறு வன்முறைகள் உருவாகும் போது, அவை பொலிஸ் முறைப்பாடாக மாறுகின்றன. அதன் பின்னர் அது நீதிமன்றம்வரை செல்கின்றன.

இந்த நிலைமையினால் பிள்ளைகளின் வாழ்க்கை முறை பாதிப்படைகின்றது. சிறுவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே ஏற்படும் சிறிய பிரச்சினைகளை இனம்கண்டு தீர்ப்பது முறையாகும். இதுதவிர பிரச்சினைகள் வன்முறையாக மாறும்போது பொலிஸ் முறைப்பாட்டைப் பதிவு செய்ய வேண்டும்.

அதேவேளை மாவட்டச் சிறுவர் திணைக்கள நன்னடத்தைத் திணைக்களத்துக்கும் அறியத் தரவேண்டும். காலம் தாமதிக்காமல் இதனை உரியவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் அது பொலிஸ் மற்றும் நீதிமன்றம் வரை செல்லும் நிலை ஏற்படும் - என்றார். (ய-ரி)

# ஆங்கிலக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.11

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் தொடர்பாடலுக்கான பேச்சு ஆங்கிலமொழி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும் .

இக்கற்கை நெறி மூன்று மாதங்களைக் கொண்டது. அனைத்து வகுப்புகளும் கொக்குவிலில் உள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திலும், தலைமன்னார் வீதியில் உள்ள கற்கை நிலையத்திலும் நடைபெறும். விண்ணப்பதாரிகள் கற்கை நிலையங்களில் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (ய)

வடக்கில் பெரும் முதலீட்டுத் திட்டங்களை எதிர்பார்த்தே காணிகளை வழங்குகிறோம்

# அக்கராயன் கரும்புத்தோட்டக் காணியும் அப்படித்தான்

## முதலமைச்சரின் செயலாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 11
பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மூலமே வடக்கின் அபிவிருத்தி இலக்கை அடைய முடியும். முதலீடு செய்ய முன்வரும் எம்மவர்களை நாம் வரவேற்கவேண்டும். பெரும் முதலீட்டுத் திட்டங்களை எதிர்பார்த்து சில நிறுவனங்களுக்கு ஏற்கனவே அரச காணிகளை வழங்கி இருக்கின்றோம். அது போன்றே அக்கராயனில் 204 ஏக்கர் கரும்புத் தோட்டமும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சரின் ஊடகச் செயலாளர் ஆ.சுந்தரலிங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கரும்புத் தோட்டக் காணியை முன்னாள் போராளிகளுக்கும், உள்ளூர் செய்கையாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அவ்வாறிருந்தும் முதலமைச்சர் அதனை முன்னர் குத்தகைக்கு பெற்றிருந்தவரிடமே வழங்கியுள்ளார்.

இதுதொடர்பில் முன்னாள் போராளிகளும், உள்ளூர் விவசாயிகளும் கவலை தெரிவித்த செய்தி உதயனில் கடந்த 3ஆம் திகதி வெளியாகியிருந்தது.

இதுதொடர்பில் சுந்தரலிங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அக்கராயனில் 204 ஏக்கர் கரும்புத்தோட்டம் 1964ஆம் ஆண்டிலிருந்து நிறுவனம் ஒன்றுக்கு 40 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டு கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. நிறுவனத்தால் சக்கரை உற்பத்தியும் சிறப்பாகச் செய்யப்பட்டு வந்தது. நாட்டின் சூழ்நிலை காரணமாக குத்தகை புதுப்பிக்கப்படவில்லை. 2009ஆம் ஆண்டில் இராணுவத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்வரை குறித்த காணியில் பெரிய அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டு வந்தன.

பின்னர் காணியை இராணுவத்தினர் கையேற்றனர். இராணுவம் 2016இல் வெளியேறியவுடன் குத்தகைக்குப் பெற்ற குறித்த நிறுவனம் மீண்டும் கரும்புத் தொழிலை ஆரம்பிப்பதற்கு அனுமதி கோரியது.

1965இல் இருந்து குறித்த காணியில் செய்த அபிவிருத்தி முதலீடுகளைக் கருத்தில்கொண்டு சில கட்டுப்பாடுகளுக்கு அமைய அதேநிறுவனத்திற்கு மீண்டும் குத்தகையைப் புதுப்பித்து வழங்க அனுமதிக்கப்பட்டது.

கரும்புச் செய்கை தவிர, கால்நடை விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணி பாவிக்கப்படவேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஏற்று குறித்த நிறுவனம் அபிவிருத்திகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அங்கு, விவசாய கால்நடைப் பண்ணை ஆரம்பித்து இயக்கப்படுகின்றது. 45 நல்லினப் பசுக்கள் உள்ளன. சிறந்த விவசாயப் பயிற்சிப் பாடசாலை உருவாக்குதல், இரசாயனம் சேர்க்கப்படாத உணவுப் பொருள் உற்பத்தி, இரண்டு வருடங்களில் பால் பதனிட்டு விற்பனை செய்தல் மற்றும் பால்பொருள்கள் உற்பத்தி செய்யும் திட்டம் ஆகிய திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. நன்னீர் மீன்வளர்ப்புக்கும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது 27 தொழிலாளர்கள் நாளாந்தம் வேலை புரிகின்றனர். 100 பேருக்கும் மேலும் வேலைவாய்ப்பு வழங்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் உற்பத்தி பொருள் விற்பனையின் ஊடாக 60 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். இதன்மூலமாக 200 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் கொடுத்தல், நவீன தொழில்நுட்பங்களை உருவாக்குதல், பிரதேச வளர்ச்சியை ஏற்படுத்துதல், பால் அல்லது பால்பொருள்களின் தேவையின் குறிப்பிடத்தக்க அளவைப் பூர்த்திசெய்தல், மற்றும் போசாக்கான உணவு கிடைத்தல் என்பன உறுதி செய்யப்படும்.

காணியை அதே குத்தலைக்காரருக்கு வழங்குவதே நீதி. குத்தகைகார நிறுவனம் தமிழருக்குரியது. இந்தக் காணியை காணியற்ற மக்களுக்கு கொடுப்பது நியாயமற்ற செயல். வேறு ஒருவரால் முதலிட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட நிலத்தை'கபளீகரம் செய்யும் செயற்பாடானது எதிர்காலத்தில் முதலீட்டாளர்கள் தமது குத்தகையைப் புதுப்பிக்காமல் முதலீடுகளைத் திரும்பப் பெற்றுச்செல்லும் நிலையை ஏற்படுத்தலாம்.

அக்கராயன் கரும்புத் தோட்ட நிறுவனக்காரர்கள் காணியைக் கைவிட்டு ஓடிப்போகவில்லை. அவர்கள் இராணுவம் ஆக்கிரமிக்க முன்னரும், விடுவித்த பின்னரும் காணியின் அபிவிருத்தியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர். இதுவரை பெரியமுதலீட்டைச் செய்துள்ளனர். முன்னாள் போராளிகளும், உள்ளூர் விவசாயிகளும் இதனால் கவலைப்பட எதுவும் இல்லை.

முன்னாள் போராளிகளுக்குத் திருவையாற்றில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முதல்வர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

காணி தேவைப்படும் முன்னாள் போராளிகள் பிரதேச செயலர் ஊடாக மாகாணக் காணிஆணையாளருக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள் - என்றுள்ளது. (ய)

# தென்னைகளை வளர்த்தெடுக்க உதவித் திட்டம்

## மரம் ஒன்றுக்கு பசளை மானியம் 100 ரூபா





யாழ்ப்பாணம்.ஒக்.11
வடக்கு மாகாணத்தில் மானிய உதவிகள் மூலம் தெங்கு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தேங்காயின் விலை நாளுக்கு நாள் கிடுகிடுவென உயர்ந்துசெல்கிறது. உள்ளூர்ச் சந்தைகளில் தேங்காய்க்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஏற்றுமதிப் பொருளாகவும் காணப்படுகிறது. எனவே எதிர்காலத்தில் தேங்காயின் விலையில் சரிவை எதிர்பார்க்க முடியாது. இதன்மூலம் 'உற்பத்தியாளர்கள் சிறந்த வருமானத்தை ஈட்ட முடியும்.

வடக்கு மாகாணத்தில் தென்னைப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டுவோருக்கு அதிகளவு மானிய உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் தே. வைகுந்தன் தெரிவித்தார்.

குறிப்பாக மரம் ஒன்றின் பசளைக்காக 100 ரூபா மானியமாக வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

தென்னைச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக தென்னம் கன்றுகள், சேதனப்பசளை, ஊடு பயிர்ச்செய்கை போன்றவற்றுக்கு மானியங்களை வழங்கி வருகின்றோம். இதற்காகக் கிராமங்கள் தோறும் சங்கங்களை அமைத்து வருகின்றோம். யாழ்ப்பாணத்தில் 333 சங்கங்களை அமைத்துள்ளோம். இவற்றுக்கான பதிவுகளை பெருந்தோட்ட அமைச்சின் கீழ் மேற்கொண்டு வருகின்றோம்.

வீட்டுத் தோட்டம் முதல் 10 ஏக்கர் வரையான பயிர்ச் செய்கைக்கு மானியங்களை வழங்கி வருகின்றோம்.

ஒரு தென்னை மரத்துக்கான சேதனப் பசளைக்கான மானியம் 100 ரூபா. 600 தென்னம் கன்றுகள் வரைக்கும் 60 ஆயிரம்ரூபா வரையில் வழங்குகின்றோம். தென்னை மரங்களை நடும்போது 25 அடிக்கு ஒரு மரம் என்ற ரீதியில் நடவேண்டும். அந்த இடைவெளியில் ஊடு பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கும் மானியம் வழங்கி வருகிறோம். இதற்கு ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாவரை மானியம் வழங்குகின்றோம். ஊடு பயிர்களாக முருங்கை, தேசி,மாதுளை பயிரிடலாம். மானியங்களைப் பெறுவதற்கு, தென்னைமரம் வைத்திருப்பவர்கள் எமது சபையிலும், சங்கங்களிலும் பதிவுசெய்ய வேண்டும். நடப்பு வருடத்திற்கான மானியத் திட்டம் நிறைவடைந்துள்ளது.

காணிகளை நேரில் சென்று பார்வையிட்டு பயனாளிகளை உறுதிப்படுத்தியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் 300 பேர் மானியத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான காசோலைகள் எதிர்வரும் 26ஆம் திகதி வழங்கப்படும்.

தொடர்ச்சியாக ஏனைய மாவட்டங்களுக்கும் மானியம் வழங்கப்படும். அதிக மானியங்களை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம். ஆனால் பயனாளிகள் குறைவாகவே உள்ளனர்.

தென்னைப் பயிர்ச் செய்கையை புதிதாக ஆரம்பிப்பவர்களும் இந்த மானியங்களைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்றார். (ய-ரி)

## கற்கைநெறிக்கு நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், ஒக்.11
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் வணிகமானி (வெளிவாரி) 2014, 15ஆம் ஆண்டு பட்டக் கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 13ஆம், 14ஆம், 15ஆம் திகதி திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையதில் நடைபெறும் என பேராசிரியர் பா.நிமலதாசன் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பிதழ் கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் 021 222 3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். (ய-ரி)

## கவிதைத் தெகுப்பு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.11
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் கவிஞர் முகமது அஸ்கரின், 'விரியப் போராடும் அரும்புகள்' என்ற கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. மொழிபெயர்ப்புக் கற்கை இணைப்பாளரான கலாநிதி ச.க.கண்ணதாஸ் தலைமையில் விழா நடைபெறும். முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக கலைப்பீட பீடாதிபதி காலாநிதி க.சுதாகர், மதிப்புறு விருந்தினர்களாக பேராசிரியர் தி.வேல்நம்பி, ஜே.பி. ஜெயதேவன், சி.ஶ்ரீபற்குணராசா, திருமதி துஸ்யந்தி மிகுந்தன், கலாநிதி அ. ரவிராஜ், கலாநிதி அ. அற்புதராசா, எஸ்.எஸ். உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்வர். (ய)

# தொழிற்பயிற்சி நிலைய போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.10
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி நிலைய போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெல்டர், வெதுப்பக உற்பத்தியாளர், சமையலாளர், முன்பள்ளி ஆசிரியர், கட்டடநிர்மாண உதவியாளர், விவசாய இயந்திர உபகரண திருத்துனர், படகு இயந்திரம் திருத்துனர், பெண்கள், சிறுவர் ஆடை வடிவமைப்பாளர், நீர்க்குழாய் பொருத்துனர், அழகுக் கலை வல்லுனர், கணணிப்படவரைஞர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், அறை ஊழியர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளுக்கு 18-45 குறையாமலும், க.பொ.த. சாதாரண தரத்தில் 6பாட சித்தியும் இருக்க வேண்டும். 3ஆம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும். அத்துடன் குறைந்தது 1 வருட அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிப்பவர்கள் தங்களது சுய விவரக்கோவையையும், சான்றிதழ் பிரதிகளையும் உதவிபணிப்பாளர், இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபை, 4ம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல12, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ய)

# இளைஞர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு சமூகப் பிறழ்வுகளைக் களையவேண்டும்

## அவைத்தலைவர் சிவஞானம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

சனசமூக நிலையங்களில் இளைஞர்கள் கூட்டாக செயற்படுகின்றனர். அதுபோன்று சமூகப் பிறழ்வுகளைக் கட்டுப்படுத்தும் விடயத்திலும் இணைந்து செயற்படவேண்டும் என வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சனசமூக நிலையங்களில் இளைஞர்கள் கூட்டாகச் செயற்படுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

எனினும், எமது பிரதேசத்தின் ஒருபகுதி இளைஞர்கள் வழிதவறிப் போகின்றனர். இதுமிகவும் கவலை தரும் விடயமாக இருக்கின்றது.

மது மற்றும் போதைப்பொருள்கள் எமது சமூகத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. இதனால் சில இளைஞர்கள் வழிதவறிப் போகின்றார்கள். சமூகத்துக்குப் பெரும்பாதிப்பு ஏற்படுகின்றது. சனசமூக நிலையங்களில் இளைஞர்கள் கூட்டாக ஒற்றுமையாக செயல்படுகிறார்கள் இது வரவேற்கத்தக்கது. இளைஞர்கள் கூட்டிணைந்து கைதடியைப் போதை பொருள், மதுப்பாவனை இல்லாத கிராமமாக உருவாக்கவேண்டும்.

இவ்வாறு செயல்படுவது ஏனையவர்களுக்கும் முன்மாதிரியாக அமையும். ஒவ்வொரு கிராமங்களிலும் போதைப்பொருள், மதுப்பாவனையை இல்லாமல் செய்வதன்மூலம்சமூகப்பிறழ்வுகளில்விடுபடலாம். இதற்கு கைதடி இளை ஞர்கள் முன்மாதிரியாக செயற்படவேண்டும் - என்றார். (ய-8)

# நீதிபுரம் மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

பிரான்ஸ் தமிழர்களுக்கு உதவும் அமைப்பினால் மாங்குளம் நீதிபுரம் கிராம மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி அமைப்பிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய முதற் கட்டமாக 25 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் புத்தகப்பை களும் வழங்கப்பட்டன.

வலி.வடக்கு மீள்குடியமர் வுச் செயலரும், வலி.வடக்குப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் எஸ்.சஜீவன் இவற்றை வழங்கி வைத்தார்.

இந்தக் கிராமம் போரினால் பாதிக்கப்பட்டது. வறுமை காரணமாக பாடசாலை மாணவர்கள் சிரமப்பட்டு வந்தனர். புலம் பெயர்தமிழர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மாலை நேரவகுப்புகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ய)

**பதவி வெற்றிடம்**

யாழில் பிரசித்தி பெற்ற நிறுவனம் ஒன்றில் முகாமையாளர் பதவி வெற்றிடமாக உள்ளது.

**தகைமைகள்**

**1.க.பொ உயர்தரம் சித்தியடைந்தவர்கள் 2.25 வயதிற்குட்பட்டவர்கள்**
**3.அடிப்படைக் கணினி அறிவுடையவர்கள். 4.அடிப்படை ஆங்கில அறிவு**
தகுதியுடையவர்கள் உடனடியாகத் நேரில் சமுகம் தரவும்.

**Winstar Job Bank, 106, Palaly road Thirunalvely,Jaffna.**
**021300 4641**

**யா/ கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை**
**சுன்னாகம்**
**பழையமாணவர் சங்க பொதுக்கூட்டம்**

திகதி : 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப 9.00 மணி
இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

மேற்குறித்த கூட்டத்திற்கு சமுகம் அளித்து பாடசாலை வளர்ச்சிக்கு ஆதரவு வழங்குமாறு வேண்டுகின்றேன்

சி.சிவராஜன்
அதிபர் / பழையமாணவர் சங்கத்தலைவர்

## போதையில் சாரத்தியம் 2 மாதக் கடூழியச் சிறை

சாரதி அனுமதிப்பத்திரமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் 2 மாத கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து ஊர்காவற்துறை நீதிவான் மன்ற நீதிவான் நேற்று ஏ.எம்.எம்.றியாழ் தீர்ப்பளித்தார். வழக்கு விசாரணைகளில் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, அவருக்கு 2 மாதக் கடூழிய சிறைத் தண்டனையும், ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 மாதக் கடூழிய சிறைத்தண்டனையும், 10 ஆயிரம் ரூபா ஆபராதமும் வித்திக்கப்பட்டது. (37)

## தங்கக்குடை மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.11

மானிப்பாய் மருதடி விநாயகரின் அடகு வைக்கப்பட்டிருந்த தங்கக் குடை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல வருடங்களுக்குப் பின்னர் 2015ஆம் ஆண்டு மருதடி ஆலயத்தின் கும்பாபிசேகம் நடைபெற்றது. அதன் பின்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் கண்காணிப்பின் கீழ் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது.

இந்த நிலையில் மேற்படி நிர்வாகத்துக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கைத் தொடர்ந்து கடந்த ஜூலை மாதம் 13ஆம்திகதி 5பேர் கொண்ட பெறுநர் குழு நீதிமன்றால் நியமிக்கப்பட்டது. இவர்கள் பொதுமக்களின் நிதியுதவி யுடன் அடகு வைக்கப்பட்டிருக்கும் விநாயகரின் தங்க நகைகளை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ய-ரி)

## பண்டத்தரிப்பு பொதுச் சந்தை சுற்றாடலில் மரக்கறி விற்கத் தடா

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்புப் பொதுச் சந்தையில் இருந்து 500 மீற்றர் தூரம் வரை உள்ள வர்த்தக நிலையங்களில் மரக்கறி வகைகள் விற்பனை செய்வது வலி.தென் மேற்குப் பிரதேச சபையால் தடை செய்யப்பட்டுள்ளது. குறித்த பிரதேச சபையின் கீழுள்ள பண்டத்தரிப்பு உப அலுவலகப் பணியாளர்கள் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பண்டதரிப்பு பொதுச் சந்தையைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்களில் மரக்கறி வகைகள் விற்கப்படுவதால் சந்தை வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது, நாளாந்தம் வாடகை செலுத்தி சந்தைக்குள் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் இதனால் பாதிப்படைகின்றனர் என்று வலி.தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகத்துக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனை அடுத்து உப அலுவலகத்தின் அதிகாரிகள் பிரதேச சபையின் சட்டத்திட்டங்களுக்கு அமைவாகப் பொதுச் சந்தையில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டத்தில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடி மரக்கறி வகைகளின் விற்பனையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையால் சந்தை வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் எனவும் முன்னர் மதியம் ஒரு மணி வரை இயங்கிய மரக்கறிச் சந்தை தற்பொழுது இரவு 7 மணிவரை இயங்குகின்றது. வேலைக்குச் சென்று வீடு திரும்புவோர் இந்தச் சந்தையால் மிகவும் பயனடைகின்றனர் என வும் தெரிவிக்கப்பட்டது. (ரி ,115)

**முதல் முறையாக நெய்யுடன் போத்தலில் அடைக்கப்பட்ட விளக்கேற்றும் றோயல் நெய் விளக்கு**

நெய் விளக்கு ஏற்றினால் சகல செல்வமும் குடும்ப மகிழ்ச்சியும் பெருகி குலம் தழைக்கும் என்பதும், மண்ணினால் செய்த விளக்கில் தீபம் ஏற்றினால் வீரிய விருத்தி அளிக்கும் என்பதும் எமது இந்து சமயத்தின் ஐதீகம்.

உங்கள் வாழ்வில் சகல நலனும் பெருகிட இதோ உங்களிற்காக **"போத்தலில் அடைக்கப்பட்ட சுத்தமான விளக்கேற்றும் நெய்யுடன்"** றோயல் நெய் விளக்கினை மகிழ்ச்சியுடன் அறிமுகம் செய்கின்றோம்.

Packed by :
Royal Industry®
Colombo - 13

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப்பூங்கா®
இல. 288 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 2567

## மருத்துவமனை கட்டடத்துக்கு அடிக்கல் நடுகை

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அமைக்கப்படவுள்ள மூன்றுமாடி குணமாக்கல் சிகிச்சைப் பிரிவு கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்றுமாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

30 மில்லியன் ரூபா செலவில் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் சி.குமரவேள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய-9)

### மாணவர்களைத் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில்

# சிறுவர் இல்ல மேற்பார்வையாளரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

கிளிநொச்சி, ஒக.11

கிளிநொச்சியில் உள்ள மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்ற மாணவர்கள் சிலர் மோசமாகத் துன்புறுத்தப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டதை அடுத்து கைது செய்யப்பட்ட சிறுவர் இல்ல மேற்பார்வையாளரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் உள்ள சிறுவர் இல்லத்தில் தங்கி நின்று கல்வி கற்ற 5 மாணவர்கள் இல்ல மேற்பார்வையாளர்களால் தாக்கப்பட்டனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. அனுமதியின்றி இளநீர் பறிக்க முற்பட்ட இந்தச் சிறுவர்கள் மின்சார வயர்களால் தாக்கப்பட்டனர் என்பதே குற்றச்சாட்டு.

தாக்குதலுக்கு இலக்கான சிறுவர்கள் பாடசாலைக்கு அனுப்பப்படாமல் இல்லத்தில் தடுத்துவைக்கப்பட்டனர் என்றும், அங்கிருந்து வீட்டுக்கு அழைத்துவரப்பட்ட கந்தர்மடத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் வழங்கிய தகவலையடுத்து விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது என்றும் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டை அடுத்து எஞ்சிய மாணவர்களும் இல்லத்தில் இருந்து மீட்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இதுதொடர்பான வழக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சிறுவர்களை தாக்கினார் எனக் கூறப்படும் நபரைக் கைது செய்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

அத்துடன் குறித்த சிறுவர் இல்லம் தொடர்பாக ஆராய்ந்து விரிவான அறிக்கையை மன்றில் முற்படுத்துமாறு சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுக்கும் நீதிமன்று கட்டளையிட்டது சிறுவர் இல்லத்தில் வைத்துத் தாக்கப்பட்டனர் எனக் கூறப்படும் சிறுவர்கள் மூவர் பெற்றோருடன் செல்வதற்கு விருப்பம் தெரிவித்ததை அடுத்து அவர்கள் பெற்றோருடன் இணைக்கப்பட்டனர். மற்றைய சிறுவர்கள் கிளிநொச்சியில் உள்ள வேறு ஒரு காப்பகத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெற்றோர்கள் அவர்களைப் பொறுப்பெடுக்கும் பட்சத்தில் அவர்களும் பெற்றோருடன் இணைக்கப்படவுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-ய-6)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 607 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 10.10.2017
வெற்றி இலக்கங்கள்
09 21 27 48 J
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 11,724,060/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 200
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 10.10.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 75,000,000/-
S 37 46 52 64
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 41
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.10.10
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 61,457,615/-
வெற்றி இலக்கங்கள்
27 35 62 68 E
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 10.10.2017
வெற்றி வாரம் 2196
வர்ணம் நீலம்
சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
11 20 27 38
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,505,144/=
2017.10.13ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி (ராசு) செல்வரட்ணம்



தோற்றம் 25.02.1944
மறைவு 10.10.2017

சண்முகம்வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் "உமாஅகம்", வதிரிமேற்கு, வதிரியை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி அன்னலட்சுமி செல்வரட்ணம் நேற்று (10.10.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற செல்லையா செல்வரட்ணம் அவர்களின் அன்புத் துணைவியும் பரமேஸ்வரி, பரமராஜா, பாலச்சந்திரன் (கனடா), இந்திராணி, இதயராணி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் அன்னராணி, யோகரஞ்சனி (ஜேர்மன்), கமலக் கண்ணன் (சுவிஸ்), ரமணன் (லண்டன்), அமரர் உமாபாலன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ரதிமணி, சதாசிவம் (ஜேர்மன்), ரதீஸ்வரி (சுவிஸ்), சிராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அகல்யா, அஜந்தன் (சுவிஸ்), அனுசியா (ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), காவியா (ஜேர்மன்), உமாரோஷன் (ஜேர்மன்), சறோமி (ஜேர்மன்), ஹன்ஷா (சுவிஸ்), ரிஷா (சுவிஸ்), றபிஷா (சுவிஸ்), வெஸ்லி பிரஷாந் (ஸ்ரீலங்காஇன்சூரன்ஸ், நெல்லியடி), டனீஸ் (மு/குரவில் மகா வித்தியாலயம்), டிலுகஷிகா (சுவிஸ்) ஆகியோரின்பேர்த்தியும் சபீனா, ஸ்ரீபனி, ஹர்ஷான்ராகேஸ், டிலான்யசோன், யூலியானா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2017) வியாழக்கிழமை பி.ப . 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 220 8260 — தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி.வள்ளிப்பிள்ளை கந்தையா

வரணி இயற்றாலை, வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளிப்பிள்ளை கந்தையா 09-10-2017 திங்கள்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வியும், செல்லப்பா கந்தையாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, முருகேசு அவர்களின் சகோதரியும், வரதலட்சுமி, சின்னராசா (நோர்வே), வேலாயுதபிள்ளை(ஜேர்மனி), தேவசேனாதிபதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆறுமுகம், யோகம்மா, சியாமிளா, பத்மாதேவி ஆகியோரின் மாமனாரும், ஜீவாகரன் (நோர்வே), ஊர்மிளா(பிரான்ஸ்), பிரியங்கன்(கமநல அபிவிருத்தி உத்தியோத்தர் - பளை), கிருசாந்தன், மகினுசா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 11-10-2017 புதன்கிழமை பி.ப 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி இயற்றாலை,
வரணி.

தகவல்
குடும்பத்தினர்
0777 111 306

## மரண அறிவித்தல்

### திருமதி பிலோமினா சிங்கராயர்



நாராந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா சிங்கராயர் (பூமணி - இளைப்பாறிய ஆசிரியை) நேற்று (10.10.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - எலிசபெத் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - வெரோணிக்கா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை சிங்கராயரின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிறில் மற்றும் திருமதி வல்துறுத்தம்மா, செல்வி ஜேட்றூட் ஆகியோரின் சகோதரியும், கெலன், சேவியர் ஆகியோரின் மைத்துனியும், கார்மெலா (இளைப்பாறிய ஆசிரியை திருக்குடும்ப கன்னியர்மடம்), சியாமளா (இளைப்பாறிய ஆசிரியை வத்தளை), ஜீனோ (கமநல அபிவிருத்தி திணைக்களம் - கொழும்பு), அனபெலா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவராஜா, குயின்ரன், றோகினி, ரெரன்ஸ் ஆகியோரின் மாமியும், பசில், பஸ்ரியன், பேட்றண்ட், பிறயன், சறண், பிராங்கா, மிஸ்ரிக்கா, தபித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அற்றியேலின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.10.2017) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுண்டுக்குளி புனித யூவானியார் தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக நாரந்தனை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24/8, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

021 222 4055


## முல்லைத்தீவில் வறுமையால்

# அரபு நாடுகளுக்கு படையெடுக்கும் தாய்மார்

## குழந்தைகள் பரிதவிப்பு

முல்லைத்தீவு, ஒக்.11

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமையைப் பயன்படுத்திப் பெண்களை மத்தியகிழக்கு நாடுகளுக்கு அனுப்பிவைக்கும் செயற்பாடுகள் அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இளம்பெண்கள் முதல் இளம்தாய்மார் வரை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களின் வார்த்தைகளுக்கு மயங்கி வருகின்றனர். குழந்தை கனை விட்டுவிட்டு விமானம் ஏறுகின்றனர். பிள்ளைகள் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தாயின் பராமரிப்பற்ற பாதுகாப்பற்ற குழந்தைகளின் எண்ணிக்கை மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றது என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுதொடர்பில் தெரியவருவதாவது: வெளிநாடு செல்லும் இளம் தாய்மார் தமது சிறு குழந்தைகளைத் தமது பெற்றோர் அல்லது உறவினர்களிடம் விட்டுச் செல்கின்றனர். குறிப்பாக 8 வயதுக்கும் குறைந்த சிறுவர்களே இவ்வாறு விட்டுச்செல்லப்படுகின்றனர். இதனால் சிறார்கள் மீது சரியான கரிசனை காட்டப்படாத நிலைமையும் ஏற்படுகின்றது. 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை வைத்திருக்கும் தாய் ஒருவர் பணிப்பெண்ணாகச் செல்ல முடியாது எனச் சட்டம் உள்ளது. பிரதேச செயலாளர்களின் சான்றிதழ் பெற்றிருந்தால் மட்டுமே பணிப் பெண்களுக்கான நுழைவிசைவு வழங்கும் நடைமுறையும் உள்ளது. இருப்பினும் இந்த நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுவதில்லை. சிறு குழந்தைகளின் தாய்மார்கள் பணிப்பெண்களாக அனுப்பப்படுகின்றனர். ஆனால் இது எவ்வாறு சாத்தியமாகின்றது எனப் புரியவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களையுடை தாய்மார் 30பேர் பிரதேச செயலாளர்களுக்குத் தெரியாமல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு முகவர்களால் திருட்டுத்தனமாக அனுப்பப்பட்ட பெண்கள் தொடர்பான விவரங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கோரினோம். இருப்பினும் எந்தவிதமான நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. தொடர்ந்தும் இது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது என மாவட்டச் செயலாளர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ய-101)

## மானிப்பாயில் பட்டப்பகலில் தங்கச் சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

மானிப்பாய் பிரதேசத்தில் பட்டப்பகலில் பெண்ணொருவரின் தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக் கிழமை இடம் பெற்றது.

குறித்த பெண் காலை பத்துமணியளவில் சுதுமலை அம்மன் கோவிலுக்கு சென்றுவிட்டுத் திரும்பியுள்ளார்.

மானிப்பாய் பட்டினசபை வீதியால் அவர் வந்து கொண்டிருந்தார். அவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் வந்தனர்.

அந்தப் பெண் அணிந்திருந்த சுமார் 2லட்சம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். வீட்டுக்கு அருகாமையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கனடாவில் வசிக்கும் மேற்படி பெண் மானிப்பாயில் தனது உறவினர் வீட்டில் தங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது. சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ய-115)


## மரண அறிவித்தல்

### சிவபாலசுப்ரமணியம் குகன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.10.1990 | 10.10.2017 |



தொண்டமனாறைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலசுப்ரமணியம் குகன் (நாதஸ்வரம்) நேற்று (10.10.2017) செவ்வாய்க்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாலசுப்ரமணியம் (தவில் வித்துவான்), மற்றும் மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கோவிந்தராஜா மற்றும் சாந்தி ஆகியோரின் பெறாமகனும் தெட்ஷணாமூர்த்தி, துளசிபரன், செல்வகுமாரி, ரேவதி, மேகலா, சிந்து ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2017) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் மயிலியதனை, தொண்டமனாறு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: தெட்ஷணாமூர்த்தி, துளசிபரன் (தவில்)

077 078 2877

# அரச பணியாளர் ஐவரில் ஒருவருக்கு மனநோய்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு.ஒக்.11



அரச நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களில் ஐவரில் ஒருவர் மன நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அழுத்கம மொரகல்லவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"ஒவ்வொரு வருடத்திலும் ஒக்டோபர் 10 ஆம் திகதி உலக மனநல தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. நாம் சுமார் 25 வருடங்களாக இந்தத் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளையும் புதிய வேலைத்திட்டங்களையும் ஆரம்பித்துள்ளோம்.

சுகாதார அமைச்சில் மனநல நோய் தொடர்பில் பிரத்தியேக பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் நோக்கினால் அரச பணியாளர்கள் ஐவரில் ஒருவருக்கு மனநோய் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. வீட்டில் காணப்படும் பிரச்சினைகளும், தொழில் செய்யும் இடத்தில் காணப்படும் பிரச்சினைகளுமே இதற்கு காரணம் எனவும் ஆய்வுகளில் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

மனநல நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. குழப்பத்தால் ஏற்படும் மன உளைச்சலே இதற்குக் காரணமாகும் என்பதோடு எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கவனத்திற் கொள்ளவேண்டியது எமது கடமையாகும் - என்றார். (ற-ரி4)




உலக மனநல தினத்தை முன்னிட்டு திருகோணமலை பொது வைத்தியசாலை உளநலப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட நடை பவனியும் வீதி நாடகமும் நேற்றுத் திருகோணமலையில் நடைபெற்றன. நடைபவனியில் பொது மக்களை தெளிவூட்டும் வீதி நாடகமும் காண்பிக்கப்பட்டதுடன் உளநலம் பாதிக்கப்பட்டவர்களை அழைத்து வருமாறும் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. திருகோணமலை பொது வைத்தியசாலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தநடைபவனி நீதிமன்ற வீதியினூடாகச் சென்று தபால் கந்தோர் ஊடாக திருகோணமலை பிரதான பஸ் தரிப்பிடத்தைச் சென்றடைந்து மீண்டும் பீஸ் வீதியூடாக மருத்துவமனையை வந்தடைந்தது. (ற-ரி4,45)

# மருத்துவமனை கட்டட கட்டுமானத்தை நிறுத்துமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஒக்.11

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையால் அன்வர் முன்பள்ளிக் காணியில்அமைக்கப்பட்டு வரும் கட்டட கட்டுமானத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்வர் முன்பள்ளி சுனாமியால் அழிக்கப்பட்டதையடுத்து 2005ம் ஆண்டு தனியார் ஒருவரால் அன்வர் பாலர் பாடசாலைக்கு இந்தக் காணி அன்பளிப்புச் செய்யப்பட்டு அன்வர் முன்பள்ளி இயங்குகின்றது. சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.



தற்போது வைத்தியசாலை நிர்வாகம் இந்தக் காணியில் அமைக்கப்பட்ட முன்பள்ளிக்குரிய மலசல கூடத்தையும் உடைத்து அகற்றிவிட்டு கட்டடத்தை அமைக்கின்து என்று தெரிவித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்பாட்டம் நடை பெற்ற இடத்துக்குவந்த இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கட்டடப்பணிகள் உடனடியாக நிறுத்தப்படும் என்று உறுதியளித்தார். (ற-ரி4)

## முதியோர் விழிப்புணர்வு நிகழ்வு

வவுனியா, ஒக்.11

வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் நேற்று முதியோர் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி பா.கமலேஸ்வரி தலைமையில் மாவட்ட சமூக சேவை அலுவலகத்தால் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் இன்தமிழ் இனியன் செ.ஶ்ரீநிவாசன் மூத்தோரை இளைய தலைமுறையினர் செவிமடுக்க வேண்டும், உற்றுக் கேட்க வேண்டும் என்ற வகையில் ' கூரைஇல்லா வீடும் மூத்தோர் இல்லா வாழ்வும் 'என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். நிகழ்வில் வவுனியா நகர முதியோர் சங்க தலைவர் தா.சலசலோசன் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் க.உதயகுமார் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். கே.வசந்தன் பிரதி அதிபர் ,ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (ற-ரி4)

## மறியல் நீடிப்பு

வடமராட்சி, ஒக்.11

வடமராட்சி, துன்னாலையில் திருட்டுக்கள் மற்றும் வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. திருட்டுக்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் 46 பேர் கைது செய்யப்பட்டு 38 பேர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-ரி2,26)

## சிகரெட்டுடன் சீனர்கள் கைது

கொழும்பு,ஒக்.11

சட்டவிரோதமான முறையில் சிகரெட்டுக்களைக் கொண்டு வந்த குற்றச்சாட்டில் சீனர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 355 சிகரெட் பொதிகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

## அக்மீமன தேரருக்கு பிணை

கொழும்பு. ஒக்.11

கல்கிஸ்ஸ பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்டமையால் கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அக்மீமன தயாரத்ன தேரர் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச புகலிட கோரிக்கையாளர்களுக்கான பிரிவின் அனுமதியுடன் கல்கிஸ்ஸ பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டமையால் அண்மையில் அவர் கைது செய்யபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ற-ரி4)

# தொகுதி முறையால் அபிவிருத்தி ஏற்படும்

## மஹ்ரூப் எம்.பி. தெரிவிப்பு

திருகோணமலை,ஒக்.11

திருகோணமலை மாவட்டத்தை எதிர்காலத்தில் வரையறுக்கப்பட்ட அபிவிருத்திக்கு இட்டு செல்ல வேண்டும் என்றால் வட்டாரத் தொகுதி முறையால் மாத்திரமே இட்டுசெல்ல முடியும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

முள்ளிப்பொத்தானையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது மாவட்டத்தில் மூவின மக்களும் ஒற்றுமையுடன் சினேகபூர்வமாக ஒரே தாய் மக்கள் போன்று வாழ்கின்றனர். எமது நாட்டின் அரச தலைவர் மைத்திபால சிறிசேன வட்டாரத் தொகுதி முறையைக் கொண்டு வந்துள்ளார். எமது மாவட்டம் மூன்று பிரிவுகளால் பிரிந்து உள்ளதால் எம்முடைய மக்களுடை நீண்ட நாள் அபிலாசைகள் இதன் மூலம் நிவர்த்தி செய்யப்படக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. எமது மக்கள் பல வருடங்கள் வாக்களித்து வெறும் கையைப் பார்த்தவர்களாகக் காணப்பட்டார்கள். இனிமேலும் அவ்வாறு நடைபெற இடமளிக்கக் கூடாது. எம்முடைய மக்கள் கடந்த 30 வருடங்கள் நடைபெற்ற போரில் சொத்து, சுகம், காணி, உடைமைகளை இழந்துள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் அபிவிருத்தி விடயத்தில் விவசாயிகள் பங்களிப்பை வழங்கவேண்டும். நாம் அபிவிருத்தியில் இணைந்து செயற்படல் மற்றும் விவசாயத்தை திட்டமிட்டு ஆரம்பித்தல் என்பவற்றின் மூலம் நஞ்சற்ற நாடு எனும் செயற்றிட்டத்தை மேலும் வலுவுள்ளதாக மாற்ற முடியும் - என்றார்.

மாவட்ட அரச அதிபர், முன்னாள காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி, பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி4,45)

## மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மலையகத்தில் துண்டறிக்கை

ஹற்றன், ஒக்.11

மலையக மக்களின் உயிர் வாழும் உரிமைக்கான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் மலையகத்தில் நேற்று துண்டறிக்கைகள் மற்றும் தபாலட்டைகளில் கையெழுத்து பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

ஹற்றன் நகரில் பிரதான பேருந்து தரிப்பு நிலையத்துக்கு அருகில் துண்டு அறிக்கை விநியோகிக்கும் நடவடிக்கை, தோட்ட தொழிலாளர்களின் காணி உரிமை மற்றும் வேறு பல உரிமைகள், தொடர்பில் மக்களின் கருத்துகளை பதிவு செய்து அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்கு அனுப்பும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

காணி உரிமையை உறுதி செய்தல், பெருந்தோட்டத்துறையிலுள்ள அரச சொத்துகளை விற்பனை செய்வதை உடனே நிறுத்து, தேயிலைப் பயிர்ச் செய்கைக்காக 'கிளைபொசெட்' தடையை அகற்ற வேண்டாம், தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளத்தை 1000 ரூபாவாக உயர்த்து போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மக்களுக்குத் தெளிவூட்டும் துண்டு அறிக்கை விநியோக நடவடிக்கை ஹற்றன் பேருந்துத் தரிப்பு மத்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு முழு நகரத்திலும் உள்ள கடைகள் மற்றும் பாதசாரிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ற-ரி4)



# யாராலும் எந்த அச்சுறுத்தலும் இல்லை பாதுகாப்புக்கு ஏன் அதிக நிதி ஒதுக்கீடு?

## கேள்வி எழுப்புகிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, ஒக். 11
போர் மற்றும் அன்னிய நாடுகளால் அச்சுறுத்தல் இல்லை. ஆனாலும் அரசு அமெரிக்காவில் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்றது. வரிகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுத்தருவதாகத் தெரிவித்த அரசு அடுத்த ஆண்டும் பாதுகாப்புக்காகவே அதிக நிதி ஒதுக்கியுள்ளது. இவ்வாறு முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வரிகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுத்தருவதாகத் தெரிவித்த அரசு அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலும் பாதுகாப்புக்காகவே அதிக நிதி ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளது. சாதாரண மக்களுக்கு விதிக்கப்படும் மறைமுகவரியைக் குறைத்துத் தனவந்தர்களுக்காக விதிக்கப்படும் நேரடிவரியை அதிகரிப்பதாகத் தெரிவித்த போதும் அரசு தொடர்ந்து தனவந்தர்களுக்குச் சலுகைகளை வழங்கும் வகையிலே செயற்படுகின்றது.
நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையில் நவீன ஆயுதங்கள் கொள்வனவு செய்ய எந்தத் தேவையும் இல்லை. இந்த நிதியைக் கொண்டு நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அரசு தனவந்தர்களின் தேவைக்கும் நிறுவனங்களின் தேவைக்கும் ஏற்றவகையிலே செயற்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பொறுத்துக்கொண்டு இருக்கமுடியாது. நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அரசின் மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக மேற்கொள்ளும் எமது கருத்துக்களுக்கு அரசு செவிசாய்க்காவிட்டால் அவர்களுக்கு எதிரான மாற்றுவழியைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதற்கு மக்களுடன் இணைந்து வீதியில் இறங்குவதுதான் ஒரே வழியாகும். அரசே இந்த நிலைக்கு வழிசமைகின்றது - என்றார். (5.31)

# இலங்கையின் வனஅடர்த்தியை அதிகரிக்க மரநடுகைத் திட்டம்

## சுற்றாடல் அமைச்சின் செயலர் அனுர திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11
இலங்கையின் வன அடர்த்தியை 2018ஆம் ஆண்டளவில் 32 சதவீதம் வரை அதிகரிக்கும் இலக்கை அடையும் நோக்குடன் அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலர் அனுர திசாநாயக்க தெரிவித்தார்.
'வனரோபா' தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதம் 'வனரோபா' தேசிய மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் இந்த ஆண்டும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
முக்கியத்துவமுள்ள சூழல் தொகுதிகளைப் பாதுகாத்தல் அதனுடன் தொடர்புடைய வன வளர்ப்பின் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக் குடியேற்றங்களுக்கு அண்மித்ததாக மரவிதானங்களைத் தயாரிப்பதற்கு உதவும் மரங்களை வளர்ப்பதன் ஊடாக நாம் வாழக்கூடிய சூழலின் பசுமை நிலையை அதிகரிக்கலாம். அதன் பலாபலன்கள் மக்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தல், அரிப்புக்குள்ளான நிலப்பிரதேசங்களைச் சிறப்பு மரநடுகைத் திட்டங்களின் மூலம் மீள்நிலைப்படுத்துதல் போன்ற வினைத்திறன் மிக்கதான வனவளர்ப்பில் ஈடுபடுவதற்கு மக்களை ஊக்குவிப்பது ஆகிய செயற்பாடுகள் இந்த நிகழ்ச்சியின் நோக்கங்களாகும்.
மலையுச்சிகள், அதியுயர் நீர் உற்பத்திப் பிரதேசங்கள், அரிப்புக்குள்ளான ஏனைய நிலப்பகுதிகள் மற்றும் கடற்கரையோர வலயங்களுடன் தொடர்புடையதாகப் பசுமை நிலையை விருத்தி செய்யக்கூடிய வகையில் மரநடுகைகளை மேற்கொள்வதற்கும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.
முப்படையினரதும் சிவில் பாதுகாப்புப் பிரிவினரதும் நேரடிப் பங்குப்பற்றுதலுடன் வினைத்திறன் மிக்க மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது. இந்தப் பகுதிகளில் காணப்படுகின்ற வன வளர்ப்புக்குப் பொருத்தமான நிலப்பகுதிகளிலும், இந்தப் பணிகளுக்கென பயன்படுத்தப்பட்டு தற்சமயம் அரிப்புக்குள்ளாகக்கூடிய நிலையிலுள்ள நிலப்பகுதிகளிலும் தமது பிரதேசத்துக்குத் தனித்துவமுள்ள மற்றும் காலநிலை வலயத்துக்குப் பொருத்தமான மரக்கன்றுகளை நடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும் - என்றார்.
(5.31)

# சட்டமா அதிபர் திணைக்களம் தமிழ்ப் பகுதி நீதிமன்றங்களை அவமதிக்கின்றதா?

## தமிழ் சிவில் சமூக அமையம் கேள்வி எழுப்புகின்றது

அரச சாட்சிகளுக்குப் பாதுகாப்பில்லை என்ற போர்வையில் வழக்குகளை இடம் மாற்றுவது தமிழ்ப் பகுதிகளில் இயங்கும் நீதிமன்றங்களை அவமதிப்பதாகும். இவ்வாறு தமிழ்ச் சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்த அமைப்பினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
தமிழ் அரசியல்க் கைதிகள் மூவருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்க் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அவர்களுக்கு எதிரான வழக்குகள் வவுனியா மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்தது. கடந்த மாதம் அநுராதபுரத்திற்கு சட்டமா அதிபரால் மாற்றப்பட்டுள்ளன. இதற்கு எதிராக அந்தக் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அவர்களின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது.
இவர்களுக்கு எதிராகச் சாட்சி அளிக்க அடையாளம் காணப்பட்டோர் தமக்கு வவுனியாவில் பாதுகாப்பு இல்லை எனக் கருதுவதாலேயே அநுராதபுரத்திற்கு வழக்கு மாற்றப்பட்டதாகச் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். இந்த விளக்கம் அடிப்படைகளற்றது.

> அரச சாட்சிகளுக்கு வவுனியாவில் பாதுகாப்புக் கரிசனை உள்ளது என்பது நம்பமுடியாத ஒரு நொண்டிச்சாட்டு. வடக்கு-கிழக்கில் அரசியல் கைதிகளின் வழக்குகள் இடம்பெறக் கூடாது எனச் சட்டமா அதிபர் திணைக்களம் கருதுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

போர் முடிவடைந்து எட்டு வருடங்கள் கடந்த நிலையில் வவுனியாவில் அரச சாட்சிகளை அச்சுறுத்தலுக்குள்ளாக்குவது யார் என்பதைச் சட்டமா அதிபர் தெளிவுபடுத்த வேண்டும். அரச சாட்சிகளுக்கு வவுனியாவில் பாதுகாப்புக் கரிசனை உள்ளது என்பது நம்பமுடியாத ஒரு நொண்டிச்சாட்டு. வடக்கு-கிழக்கில் அரசியல் கைதிகளின் வழக்குகள் இடம்பெறக் கூடாது எனச் சட்டமா அதிபர் திணைக்களம் கருதுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.
வவுனியாவில் வழக்கை நடத்தப் பாதுகாப்பில்லை என்ற நிலைப்பாடு ஒரு நாடு ஒரே சட்டம் என்ற முழக்கத்தை நகைப்புக்குரியதாக்குகின்றது. இந்த நாட்டின் தமிழ்க் குடிமக்கள் மட்டுமல்ல தமிழ்ப் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களும் இரண்டாம் தரமாகக் கணிக்கப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகின்றது.
சட்டமா அதிபருக்குக் குற்றவியல் வழக்குகளை நடத்துவதில் உள்ள தற்துணிவு அதிகாரங்கள் எல்லைகள் அற்றவை அல்ல. சட்டமா அதிபர் திணைக்களம் சட்டத்தின் ஆட்சியையும் வடக்கு - கிழக்கில் நீதிமன்றங்களின் சுயாதீனத்தையும் உறுதிப்படுத்தும் பொறுப்புடையவர்கள். உடனடியாக வவுனியாவிற்கு இவ்வழக்குகளை மீள இடம் மாற்றுமாறு தமிழ்ச் சிவில் சமூக அமையம் சட்டமா அதிபரை இந்த விடயம் தொடர்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.
அனைத்து அரசியல்க் கைதிகளும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படும் எனும் பொதுவான நிலைப்பாட்டை தமிழ்ச் சிவில் சமூக அமையம் மீள வலியுறுத்துகின்றது என்றுள்ளது. (5)

# 'விக்' கழன்றது நிறுத்தப்பட்டது திருமணப் பேச்சு

கொழும்பு, ஒக். 11
மணமகனின் போலியான தலைமுடி (விக்) வீழ்ந்ததால் திருமணம் நிறுத்தப்பட்ட சம்பவம் அம்பாறை மாவட்டத்தின் மா ஓயா பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. மணமகன் இல்லத்தாரும், மணமகள் இல்லத்தாரும் இணைந்து திருமணப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.
திருமணப் பேச்சுக்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் கலாசார முறைப்படி மணமகன் எதிர்கால மாமனாரின் காலில் வீழ்ந்தபோது, அவரது தலையிலிருந்து தலைமுடி (விக்) வீழ்ந்தது. மணப் பெண் வீட்டார் திருமணப்பேச்சை முறித்துக் கொண்டு வெளியேறியுள்ளனர். (5)

# உணவிலும் விசம் அரசியலிலும் விசம்

## அதை நீக்கவே இப்போது நடவடிக்கை

## தமிழரசுவின் செயலர் துரைராசசிங்கம் தெரிவிப்பு

இயற்கையை அனுசரிக்காமல் வேறு பாதைக்குச் சென்ற விவசாயத்தைத் தற்போது மீண்டும் இயற்கையை நோக்கியதாக மாற்றுகின்ற நிலமையை எந்தளவுக்கு நாங்கள் அனுசரிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோமோ, அதேபோன்று விசம் கலந்த நம்முடைய நாட்டின் அரசியலை விசமற்ற அரசியலாக ஆக்குகின்ற செயற்பாட்டிலும் அனுசரிப்பை மேற்கொள்ள வேண்டும். அதனடிப்படையில் நல்லாட்சி மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகவும், ரணில் தலைமை அமைச்சராகவும் கொண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த ஆட்சியிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினராகிய நாங்களும் சேர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பொதுச்செயலரும், முன்னாள் விவசாய அமைச்சருமான கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.
உணவுஉற்பத்திஆண்டுத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தால் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்புத் தற்போது உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனைச் சரியான, காத்திரமான முறையிலே செயற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மிகச் சிறந்த அரசியற் தலைவர்களிடையேயும், மிகச் சிறந்த எண்ணம்கொண்ட பொதுமக்களிடையேயும் இருக்கின்றது. இராவண பலய என்ற அமைப்புத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனது தேசியப் பட்டியலில் ஒரு தேரரை நியமிக்கலாம் என்று சொல்லியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் முன்நகர்வு என்பது தற்போது தென்னிலங்கையைச் சென்றடைந்திருக்கின்றது.
பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத ஒரே நாட்டிலே அதிகாரங்கள் பரந்து, பகிர்ந்து கொள்வதற்குச் சிறுபான்மை மக்கள் தயாராக இருக்கின்றார்கள். இந்த நாட்டின் அடிப்படைத் தத்துவத்தை எந்த விதத்திலும் தகர்த்தெறிய மாட்டார்கள். ஒரே நாட்டுக்குள்ளே வாழ்வதற்குச் சம்மதித்திருக்கின்றார்கள். அதற்கேற்ற வகையிலே நீதியான முறையிலே இறங்கி வந்திருக்கின்றார்கள் என்ற செய்தி தென்னிலங்கைக்குச் சென்றிருக்கின்றது. அதனைத் தாங்க முடியாத இராவண பலய போன்ற அமைப்புகள் இதனைக் குழப்புவதற்காக அவ்வாறான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. இது தொடர்பாக மக்கள் மிகவும் தெளிவாகவே உள்ளார்கள்.
துட்டகைமுனு மன்னன் காட்டிய சிறந்த பண்பு அதற்குப் பின்பு எமது நாட்டிலே வந்த தலைவர்கள் எவராலும் பின்பற்றப்படவில்லை. எல்லாளன் மன்னன் எதிரியாக இருந்தாலும் அவனை வென்ற துட்டகைமுனு, எல்லாள மன்னனுக்கு ஒரு சிலையை நிறுவி அதற்கேற்ற மரியாதையைக் கொடுத்தான். அத்தகு பண்பு இந்த நாட்டில் எந்தத் தலைவர்களுக்கும் இன்னும் வரவில்லை. இந்த நாடு சுதந்திரம்பெற வேண்டும் என்பதற்காகத் தமிழ், சிங்கள அரசியற் தலைவர்கள் ஒன்றாகச் சேர்ந்து செயற்பட்டு வந்தார்கள். சுதந்திரத்தின் பின்பு இதனைச் சரியான முறையில் கடைப்பிடிக்காததன் காரணமாக நாம் இன்று இந்தத் துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றோம்.
வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்ற மக்கள் நாட்டின் இயற்கையான அரசியல் எது என்பதை அடையாளம் கண்டிருக்கின்றார்கள். அந்த அடையாளத்தின் அடிப்படையில் இந்த நாட்டின் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான விடயத்தைச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த இயற்கை நிலமையை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த வளமுள்ள நாடு தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டிலே இயற்கையான நிலமையைப் பின்பற்றாததுதான் வெளிநாடுகளில் இருந்து உணவை இறக்குமதி செய்வதற்கான மூல காரணம் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (5)



உலக மனநல ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு, அதன் சின்னம், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அணிவிக்கப்பட்டது.
அரசதலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை மனநல ஆரோக்கிய சேவை செயற்பாட்டு வலையமைப்பின் பணிப்பாளர் சுனில் நாணயக்காரவால் இந்தச் சின்னம் அரச தலைவருக்கு அணிவிக்கப்பட்டது. (ரி4)

## மைத்திரி- ரணிலின்

# வாக்குறுதியை நம்ப வேண்டாம்

### மகாநாயக்கரை கோருகிறார் கம்மன்பில

கொழும்பு, ஒக். 11
புதிய அரசியலமைப்புத் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் வழங்கியுள்ள வாக்குறுதிகளை நம்ப வேண்டாம் என்று மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரரிடம், மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரியுள்ளார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பில் பௌத்த மதத்தின் நிலை தொடர்பாக அரச தலைவரும், தலைமை அமைச்சரும் வழங்கியுள்ள உத்தரவாதம் குறித்து மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் தெரிவித்துள்ள கருத்து ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.
இலங்கையின் ஒற்றையாட்சி முறைக்கு பாதிப்பை ஏற்படுத்தும், பௌத்த மதத்துக்கான முன்னுரிமையை அகற்றுவதற்குமான அரசியல் நிகழ்ச்சி நிரலை மல்வத்த பீடத்தின் மகாநாயக்க மனதில் கொள்ள வேண்டும்.
இனரீதியாக நாட்டைப் பிரிக்கும் அரசின் திட்டத்தை மகாநாயக்கர் ஆய்வு செய்ய வேண்டும் - என்றார். (5)

## லிட்றோ காஸ் நிறுவனத் தலைவர் விளக்கமறியலில்

கொழும்பு, ஒக். 11
லிட்றோ காஸ் நிறுவனத்தின் தலைவர் சாலில முனசிங்கவை இன்று வரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தாய்வான் வங்கி ஒன்றில் இருந்து சட்டவிரோதமாக 1.1 மில்லியன் அமெரிக்க டொலரை, இலங்கையில் உள்ள தனது தனிப்பட்ட வங்கிக்கணக்குக்கு மாற்றிய குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.
இவர், முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினாலேயே லிட்றோ காஸ் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.
2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன, சாலிலா முனசிங்கவைத் தலைவராகக் கொண்ட புதிய ஜனநாயக முன்னணியின் அன்னம் சின்னத்திலேயே பொதுவேட்பாளராகப் போட்டியிட்டிருந்தார்.
2009ஆம் ஆண்டு புதிய ஜனநாயக முன்னணியை உருவாக்கிய சாலிலா முனசிங்கவின் அன்னம் சின்னத்திலேயே 2010ஆம் ஆண்டு சரத் பொன்சேகாவும் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வைக்க முயற்சி

### மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர

கொழும்பு, ஒக். 11
போர்க்குற்றங்கள் தொடர்பாக வன்னிக் களமுனையில் நிலைகொண்டிருந்த இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினரைப் பொறுப்புக்கூற வைக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர தெரிவித்துள்ளார்.
பொறுப்புக்கூறல் விவகாரங்களுக்குத் தீர்வுகாண இராணுவம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகத்துக்கு விளக்கமளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வன்னிப் போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற அடிப்படையில், சண்டையிடும் படைப்பிரிவுகள் தண்டிக்கப்பட்டுள்ளன.
படைப்பிரிவுகளுக்குத் தலைமை தாங்கிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் திரும்பத் திரும்ப அமெரிக்க நுழைவிசைவு மறுக்கப்பட்டுள்ளது.
59ஆவது டிவிசனுக்குத் தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேக்கு ஆஸ்திரேலியா நுழைவிசைவு வழங்க மறுத்துள்ளது - என்றார். (5)

## அரசமைப்புத் தொடர்பில் ஆராய உலமா சபை குழு நியமிப்பு

### ஹிஸ்புல்லாஹ் வரவேற்பு

கொழும்பு, ஒக். 11
புதிய அரசமைப்பில் வட-கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறான தீர்வுக்ள் வழங்கப்பட வேண்டும். முஸ்லிம்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆராய்வதற்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபைக் குழுவை நியமித்துள்ளமை ஆரோக்கியமான செயற்பாடாகும். இவ்வாறு மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.
காத்தான்குடியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
போரினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அரசியல் ரீதியாக நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். ஒரு சமூகத்துக்கு வழங்கப்படும் தீர்வு மற்றைய சமூகத்துக்குப் பாதிப்பாக அமையுமாயின் அதற்கு எம்மால் ஆதரவளிக்க முடியாது.
வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது. முஸ்லிம் தலைமைகள் இந்த விடயத்தில் பொடுபோக்காகவே உள்ளனர்.
வடக்கு- கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை, வட-கிழக்கு இணைப்புப் பற்றி பேசினால் தமிழ் - முஸ்லிம் உறவு பாதிக்கப்படும், போன்ற தோரணையில் முஸ்லிம் தலைமைகள் பேசினால் முஸ்லிம்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.
இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை புத்திஜீவிகள் மற்றும் உலமாக்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளமை மிகவும் ஆரோக்கியமான செயற்பாடாகும். மக்கள் என்ன விரும்புகின்றார்களோ அதனைத் தீர்வுக்கான முன்மொழிவுகளாக மேற்படி குழு அறிவிக்க வேண்டும்.
சமூக, அரசியல் பிரச்சினைகளின்போது முஸ்லிம் தலைமைகளை ஒன்றிணைந்து வழிகாட்டுகின்ற ஜம்இய்யதுல் உலமா வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பில் முஸ்லிம் மக்களின் வேணவாக்கள் குறித்துச் சரியான முறையில் எடுத்துரைக்க வேண்டும் -என்றார். (5)

## அரசியல் கைதிகள் விவகாரம் விரைவில் முடிவுக்கு வரவேண்டும்

### கிழக்கு முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11
தமிழ் அரசியல்க் கைதிகள் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டங்களை முன்னெடுப்பதும், அவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்படுவதும் வாடிக்கையாகியுள்ளது. இது முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தை அரசு மனிதாபிமான ரீதியில் நோக்கி அவர்களின் விடுதலைக்கான நியாயமான தீர்வை வழங்கவேண்டும்.
போர் முடிந்து 8 ஆண்டுகள் முடிந்துள்ளது.
அரசியல் கைதிகளின் விடுதலை, மீள்குடியேற்றம் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் உள்பட பல விடயங்கள் தொடர்பில் இதுவரை எவ்விதமான தீர்க்கமான தீர்வுகளும் வழங்கப்படவில்லை.
நாட்டில் மீண்டும் போர் ஏற்படாமல் அனைத்து சமூகங்களும் புரிந்துணர்வுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும் என்பதே அனைவரது ஆசையாகும்.
அதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருவது வரவேற்கத்தக்கது என்றபோதிலும் தமிழ் அரசியல்க் கைதிகளுக்கான விடுதலையை மனிதாபிமான ரீதியில் அரசு வழங்க முன்வரும் பட்சத்தில் அது அரசின் பெரிய நல்லிணக்க சமிக்ஞையாக சிறுபான்மை சமூகம் மற்றும் பன்னாட்டுச் சமூகத்தால் பார்க்கப்படும் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும், விசாரணைகள் இன்றியும் தம்மீதான தண்டனைக் காலத்துக்கு அதிகமாகவும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சிறுபான்மையினர் மத்தியில் மேலும் அரசு மீதான நம்பிக்கையை வலுப்படுத்த உதவும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.
தமது பிள்ளையைப் பிரிந்து, தந்தையைப் பிரிந்து, கணவனைப் பிரிந்து மற்றும் சகோதரரைப் பிரிந்து உறவுகள்படும் வேதனை மனிதாபிமான ரீதியில் நோக்கப்பட வேண்டும் என்பதை அரசின் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்துக்கு பொறுப்பாக இருக்கின்ற அமைச்சர் மனோகணேசன் போன்றோர் அரசுக்கு வலியுறுத்த வேண்டும். நாட்டில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால் அது மக்கள் மனங்களூடாகவே கட்டியெழுப்பப்பட வேண்டும்.
நம்பிக்கையிழ்ந்த மக்கள் மனங்களில் நாம் நல்லிணக்கத்தை விதைக்க முடியாது.
ஆகவே பாதிக்கப்பட்ட மக்கள் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாகத் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் நியாயமான தீர்வொன்று வழங்கப்பட்டு சிறுபான்மை மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கை விதைக்கப்படுவதன் ஊடாக மாத்திரமே நல்லிணக்கத்தை வளர்க்க முடியும் - என்றார். (5)



## மாணவிக்கு கிடைத்த அதிர்ஷ்டம்

கொழும்பு, ஒக். 11
கடும் வறுமையிலும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்த நிலையில், அந்த மாணவியை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அழைத்துப் பாராட்டியுள்ளார். மாத்தளை மாவட்டத்தின் கலேவெல கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயிலும் துலஞ்சலி மதுமாலி பிரேமரத்ன என்ற மாணவிக்கே இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.
மாணவி கற்கும் திக்கல ஆரம்பப் பாடசாலை 1972ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. துலஞ்சலியே முதன்முறையாக அந்தப் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.
மாணவியின் தந்தை சிறு நீரக நோயினால் உயிரிழந்துள்ள நிலையில் அவரது தாயார் கூலி வேலை செய்து குடும்பத்தை பராமரிக்கின்றார். உடனடியாக, சிறுநீரக நோய் நிவாரண நிதியை மாணவியின் உயர்தரக் கல்வி வரை வழங்குமாறு அரச தலைவர் உத்தரவிட்டுள்ளார். (5)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பொது வாக்கெடுப்பு யதார்த்தம்

நாடுகடந்ததமிழீழஅரசுஅறிக்கைஒன்றைவிடுத்திருக்கிறது. அதில், இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஈழ மற்றும் புலம்பெயர்நாடுகளில்தமிழர்கள்மத்தியில்கருத்துக்கணிப்பு ஒன்றுநடத்தப்பட வேண்டும் என்கிற பரப்புரையைத் தான் தீவிரமாக முன்னெடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஸ்பெய்ன் நாட்டின் கட்டலோனியா மாநிலம் மற்றும் ஈராக்கின் குர்திஷ் மாநிலம் என்பவை தத்தமது நாடுகளில் இருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தன. இதனை அடுத்தே ''கருத்துக்கணிப்புக்காக வாக்களி'' என்ற முழக்கத்துடன்நாடுகடந்ததமிழீழஅரசும்பரப்புரையை ஆரம்பிக்க உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அழிவுக்குப்பின்னர்உருவாக்கப்பட்டது இந்தநாடுகடந்ததமிழீழ அரசு. அமெரிக்காவைத் தளமாகக் கொண்டவரான வி.ருத்திரகுமாரன் இதன் தலைமை அமைச்சராக இருக்கின்றார்.

ஸ்பெய்ன்நாட்டில்இருந்துபிரிந்துசென்றுதனிநாடாகப்போவதாக அண்மையில் கருத்துக் கணிப்பு மூலம் அந்த நாட்டின் ஒருமாநிலமானகட்டலோனியாஅறிவித்தது. இந்தவாக்கெடுப்பு ஸ்பெய்னின் நாட்டின் அரசமைப்புக்கு முரணானது என்று ஸ்பெய்ன் அரசும், அந்த நாட்டு உயர் நீதிமன்றமும் அறிவித்ததைஅடுத்து பொலிஸார்வாக்களிப்பைக்குழப்பிய பின்னரும், வாக்களித்த 44 சதவீத மக்களில் 92 சதவீதத்தினர் பிரிந்து செல்வதற்கு ஆதரவாகவே வாக்களித்தனர்.

அதேபோன்று, ஈராக்கின் குர்திஷ் மாநிலத்தைச் சேர்ந்த மக்களும் சுய வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் தமது விருப்பமான பிரிந்துசெல்லும்உரிமையைநிலைநாட்ட ஆதரவு தெரிவித்து வாக்களித்துள்ளனர். இந்த இரு வாக்கெடுப்புக்களுமே பன்னாட்டுமட்டத்தில்ஏற்றுக்கொள்ளப்பட்டவையல்ல. இரண்டுமே விடுதலை விரும்பிகளான மக்களால் தமது விருப்பத்தை வெளிப்படுத்தும் வகையில் அவர்களாலேயே நடத்தப்பட்ட வாக்கெடுப்புக்கள்தான்.

விடுதலை விரும்பிகளான மக்களுக்கு உற்சாகத்தைத் தரக்கூடிய இந்த இரு வாக்கெடுப்பு முடிவுகளின் பின்னரே, அது போன்றதொரு கருத்துக்கணிப்புக்கான முனைப்பை நாடு கடந்த தமிழீழ அரசும் எடுத்துள்ளது. தனிநாடாகப் பிரிந்து செல்வதா இல்லையா என்ற நேரடியான கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்று பதிலளிப்பதன் மூலமே கட்டலோனியா மற்றும் குர்திஷ் மக்கள் தமது கருத்தை வெளிப்படுத்தினர். ஆனால், நாடுகடந்ததமிழீழ அரசின்பரப்புரைஎன்பது, அத்தகைய ஒரு கருத்துக்கணிப்புக்கு வசதியான காலம் கனியும் வரையும் விடுதலை வேட்கையைத்தூண்டி வைத்திருக்கும் ஒரு முயற்சியே என்று அது தெரிவித்துள்ளது.

''இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வாகத்தமிழீழத்தனியரசுஉட்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவுகள் தமிழீழ மக்களின் முன் வைக்கப்பட்டு, அவற்றினிடையே பொதுவாக்கெடுப்பின் மூலம் மக்கள் வெளிப்படுத்தும் ஜனநாயக முடிவுக்கு ஏற்ப அரசியற்தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு அனைத்துலக ஆதரவைத்திரட்டும் பணியை இந்த அரசியற்பரப்புரை இயக்கம் மேற்கொள்ளும்'' என்று நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் அலுவலகம் விடுத்த அறிக்கை கூறுகின்றது.

''அண்மையில்நடைபெற்றுமுடிந்தகுர்திஸ், கட்டலோனியா பொதுமக்கள்வாக்கெடுப்புகள் ஈழத்தமிழர்களுக்கு ஒருதெளிவான செய்தியைத் தெரிவிக்கின்றன. விடுதலைக்கு அவாவும் மக்களே அதற்கான பொறிமுறையையும் கையிலெடுத்து தமது சுதந்திர வேட்கையை முன்னோக்கித் தள்ளவேண்டும் என்பதே அந்தச் செய்தியாகும். உலக அரசியல், நீதியின் அச்சில் சுழல்வதில்லை. மாறாக நலன்களின் அச்சிலேயே சுழல்கிறது. ஈழத் தமிழ் மக்களுக்கு வாய்ப்பான ஓர் அரசியற்சூழல் வரும் போது ஒரு பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கான வாய்ப்பும் எமக்குக் கிடைக்கும். அதுவரை எமது சுதந்திர வேட்கையை உலகுக்கு முரசறைந்து கொண்டிருப்பது அவசியமானதாகும்'' என்றுதனது நோக்கத்தையும் தெளிவுபடுத்தியுள்ளது அறிக்கை.

ஒற்றையாட்சியை விட்டுக்கொடுக்கமாட்டோம், பௌத்தத்துக்கு முன்னுரிமை, அதிகாரங்களை வழங்கிவிட்டு அதனை மறு பக்கத்தால் திரும்பப் பெறுவதற்கான வசதி, வடக்கு கிழக்கை இணைக்க மறுப்பது என்று கொழும்பு அரசு, தீர்வு முயற்சியில்நேர்மையற்றுஇருக்கும்நிலையில்இத்தகையமுன்னெடுப்புக்கள்தவிர்க்கமுடியாதவை என்பதுதான்யதார்த்தம்.



# நுனிப்புல் மேய்ந்துவிட்டு அ… ஆசிரியர் சங்கங்கள் மீது …

தான் சொன்னது என்னவென்று முழுமையாக ஆராய்ந்து பாராமல் நுனிப்புல் மேய்ந்துவிட்டு அறிக்கை வெ… அமைச்சர் க. சிவநேசன். வடக்கு மாகாணப்பாடசாலைகளின்பின்னடைவிற்குகாரணங்கள்இருந்தாலும்சமச்… படசாலைகள் இடையே சமச்சீரான ஆளணிப் பேணுகையை உறுதிப்படுத்த மாகாணக் கல்வி அமைச்சு க… தொடர்பில் உதயன் பத்திரிகையில் செய்தி வெளியானதை அடுத்து ஆசிரியர் சங்கங்கள் அதற்குக் கண்டனம் … ஒன்றை உதய்ன் பத்திரிகைக்கும் அனுப்பி வைத்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ள விடயங்கள் அ…

பொதுச் செயலாளர்,
இலங்கை ஆசிரியர் சங்கம்.
அன்புடையீர்,

கடந்த 06.10.2017 அன்று வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த, பாடசாலைகளுக்கிடையேயான சமச்சீரற்ற வளப்பங்கீடு சம்பந்தமான பிரேரணை மீதான விவாதத்தின் போது, நான் மிகுந்த ஆதங்கத்துடன் தெரிவித்திருந்த கருத்துக்களின் ஒரு பகுதி மட்டும் அரைகுறையாக, எனது யோசனைகள், தீர்வு எனும் தலைப்பில், எனது எண்ணத்திற்கு முற்றிலும் பாதகமான முறையில் பத்திரிகை ஒன்றில் ஓரிரு தினங்களாக செய்திகள் வெளிவந்துகொண்டிருப்பதையிட்டு எனது கவலையையும் கண்டனத்தையும் பதிவு செய்ய முதலில் விரும்புகிறேன்.

குறிப்பிட்ட பத்திரிகை இவ்வாறான, உள் நோக்கத்துடனான செய்திகளை வெளியிட்டு வருவதில் எனக்கு ஆச்சரியமெதுவுமில்லை. பத்திரிகைத் துறையின் மாண்புகளை மலினப்படுத்தி, முழுமையான தகவல்களை வெளியிடாமல், தமக்குத் தேவையான விதத்தில் குறிப்பிட்ட பகுதி வசனங்களை பொறுக்கி செய்தியாக்கி தமது காழ்ப்புணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பண்புகளை இன்றும் நாம் பத்திரிகைத் துறையில் இடையிடையே பார்த்துக் கொண்டுதான் உள்ளோம்.

ஆனால் எனக்கு ஆச்சரியமான விடயம் என்னவெனில், இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்போன்றஅமைப்புகள்கூடமாகாணசபையில்விவாதிக்கப்படும் விடயங்களை முழுமையாக அறிய முற்படாமல், அதற்குரிய ஆவணங்களை பெற்றுக்கொள்ளும் முயற்சிகளையும் மேற்கொள்ளாமல், அரைகுறைபத்திரிகைச்செய்திகளைநுனிப்புல் மேய்ந்துவிட்டு அறிக்கை விடுவதன் மூலம் தங்கள் இருப்புக்களை வெளிப்படுத்த முயல்வதுதான்.

ஆசிரியர் சங்கங்கள் ஆசிரியர் நலன்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதில் எனக்கு எதுவித கருத்து வேறுபாடும் கிடையாது. அதற்காக வட மாகாணத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகவுள்ள வன்னி நிலப்பரப்பில் காணப்படும் கல்வித்துறையின் வீழ்ச்சியை நிவர்த்தி செய்ய நாம் எடுக்கும் நடைமுறைச் சாத்தியமான முயற்சிகளை அறியாமல் எம்மீது மறுதலையான விமர்சனங்களை முன்வைப்பது அழகல்ல. எனது உரையை முழுமையாக கேட்டிருந்தால் பாடசாலைகள் மூடப்பட வேண்டும் என்ற அர்த்தத்திலே நான் அங்கு உரையாற்றவில்லை என்பது தெரிந்திருக்கும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்திருந்த செய்திக் குறிப்பில் "வடக்கு மாகாணத்தில் கல்வி வீழ்ச்சி என்பது மாகாண சபை உருவாகிய பின்னர் ஏற்பட்ட நிலைமையே. இதனை நாம் இதுவரை வெளிப்படுத்தவில்லை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனது கருத்துக்களை, பிரச்சினைக்கான தீர்வு என்றும், யோசனை என்றும் அடிப்படை ஆதாரங்களின்றி செய்தி வெளியிட்ட பத்திரிகையோ தனது ஆசிரியர் தலையங்கத்தில், "வளச்சமச்சீரின்மைக்கு தெற்கைச் சேர்ந்த அரசியல் கட்சிகளும் ஆளுநரின் தலையீடுமே காரணம் என்றும், வடக்கு மாகாண சபையை தமிழர்கள் முற்றுமுழுதாக பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னரும் கூட பிரச்சினையைத் தீர்க்க வினைத்திறனான வழிவகையை அவர்களால் காண முடியாததற்கு அரசியல்தான் காரணம்" என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆசிரியர்களை இடம் மாற்றினால் அவர்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி உடனடியாகவே தமது இடமாற்றத்தை திரும்பப் பெறுகிறார்கள் என்பதே எனது கருத்துக்களின் அடிப்படை என்பதனையும் அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் வெளியிட்டிருந்த பத்திரிகைக் குறிப்பின் பிரகாரம், இரண்டு வருட காலத்திற்கு முன்பு வடக்கு மாகாண அவைத்தலைவருடனும், மாகாண சபை உறுப்பினர்களுடனும் முன்வைத்த விடயங்கள் நிறைவேற்றப்பட வில்லை எனில் இவ்வளவு காலமும் அதைப் பற்றிய எதுவித மாற்று நடவடிக்கைகளும் எடுக்காது மௌனமாக இருந்ததன் காரணம்தான் என்ன?

வடக்கு மாகாணசபையின் உறுப்பினராக பதவியேற்ற காலம்முதல் வன்னிப் பிரதேசத்தின் கல்வித்துறையின் மீள் எழுச்சிக்கு தேவையான, நடைமுறைச் சாத்தியமான, அதே நேரத்தில் மிகவும் இறுக்கமான முறையில் பேணப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றி கல்விக்குழுக் கூட்டத்திலும், நேரடியாக முதல்வரிடமும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருபவன் நான்.

ஆனாலும் அரசியல்வாதிகளினதும், அதிகாரிகளினதும் அதிபர் ஆசிரியர்களின் பக்கச் சார்பான, மாணவர்களின் எதிர்காலம் கருதாத நடவடிக்கைகளால் சிறிய அளவில்கூட, வளப்பங்கீட்டில் முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை.

அதீத ஜனநாயகப் பண்பு, அடிப்படை மனித உரிமை விவகாரங்களை முன்னிறுத்தி, ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திக்க மாகாணசபையில் முன்னெடுக்கப்படும் சகல விடயங்களும் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது செய்திக் குறிப்பில் குறிப்பிட்டிருந்தபடி, சீருடை கழற்றிய படைத்தரப்பு ஆளுநரின் காலத்தில் கல்வி நிலை மேம்பட்டிருந்ததாக கூறப்படுவதன் பூரணமான அர்த்தம்தான் என்ன?

மிக அண்மையில்கூட புதிதாக நியமனம் பெற்ற 500 ற்கும் அதிகமான ஆசிரியர்களில் 150 பேர் வரையிலும் உடனடியாக தமது வதிவிடத்திற்கு அருகாமையிலான நகர்ப்புறங்களுக்கு, தவறினால் A தர வீதிகளுக்கு அண்மையான பாடசாலைகளுக்கு இடம் மாற்ற உத்தரவு வாங்கியுள்ளார்கள்.

இத்தனைக்கும் மத்தியிலும் சில ஆசிரியர்கள் தூர இடங்களில் இருந்து வந்து மிகவும் கஷ்டப் பிரதேசங்களிலே கடமையாற்றுவதையும் எங்களால் மறுக்க முடியாது.

நியமனங்களைப் பெறும்போது பின்தங்கிய பகுதிகளில் கடமையாற்றுவதற்காக ஒத்துக்கொண்டு நியமனங்களைப் பெறும் ஆசிரியர்கள் உடனடியாக இடமாற்றம் பெறுகிறார்கள் என்றால் இது யார் தவறு?

புதிதாக நியமனம் பெற்று வரும் ஆசிரியர்களால் தமது பகுதிப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும். தமது பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வி கிடைக்கும் என்று எதிர்பார்த்து காலாதிகாலமாக ஏமாற்றப்படும் மக்க…

## அப்படியே! அது அப்ப…

கடந்த 6ஆம் திகதி நடந்த வடக்கு மாகாண சபையின் அமர்வில் பாடசாலைகளுக்கு இடையேயான சமச்சீரற்ற வளப் பங்கீடு தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் அமைச்சர் சிவநேசன் உரையாற்றுவதற்கு முன்பின்னாகப் பேசியவர்களின் விவரங்கள் உட்பட அப்படியே இங்கு வெளியாகின்றது. தான் ஆதங்கத்துடன் பேசிய கருத்துக்களின் ஒரு பகுதி மட்டுமே அரைகுறையாகப் பிரசுரிக்கப்பட்டன என்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு எழுதிய பதில் கடிதத்தில் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். அதனால் அவரது உரையின் முன்னும் பின்னுமாக உரையாற்றியவர்களின் உரைகள் உட்பட அப்படியே வரிக்கு வரி இங்கு வெளியாகின்றது.

"கல்வி அபிவிருத்தி சார்பாக வடக்கு மாகாணப் பாடசாலைகளின் பின்னடைவுக்கு காரணங்கள் இருந்தாலும் சமச்சீரற்ற ஆளணிப் பங்கீடு என்பதும் மிக முக்கிய காரணியாகும். எனவே பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகள் இடையே சமச்சீரான ஆளணிப் பேணுகையை உறுதிப்படுத்த மாகாணக் கல்வி அமைச்சு காத்திரமான நடவடிக்கையை எடுக்க வேண்டும்" இதுவே உறுப்பினர் சு. லிங்கநாதன் முன்வைத்த பிரேரணை.

அதன் மீது உரையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்ததாவது:

"எமது மாவட்டத்தின் பின் தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்து அங்கு கல்வி நிலையை உயர்த்த நாம் மாகாணக் கல்வி அமைச்சிடம் கோரிக்கைகளை விடுத்து வருகின்றோம். ஆனால் அவ்வாறான இடங்களுக்கு நியமனம் பெற்று வரும் ஆசிரியர்கள் நியமனம் பெறும் தினத்தன்றே அரசியல் செல்வாக்குகளை வைத்து உடனடியாக இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகின்றனர். இதனால் எமது பிள்ளைகள் சிறந்த கல்வி இல்லாது நடுத் தெருவில் நிற்கின்றனர்.

அண்மையில் கூட கொக்கிளாயில் உள்ள பாடசாலைக்கு ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் கையொப்பத்தை இட்டுவிட்டு பாடசாலைக்கு கடமையை ஏற்க வந்த பேருந்திலேயே திரும்பிச் சென்றுவிட்டார். பின்னர் பார்த்தால் அந்த ஆசிரியர் அரசியல் ஆதரவுடன் பூநகரிப் பகுதியில் உள்ள பாடசாலையில் கற்பித்து வருகின்றார்.

இவ்வாறுதான் எமது மாகாணத்தின் ஆசிரியர் நியமனங்கள் காணப்படுகின்றன. இதனால் பாதிக்கப்படுவது பின்தங்கிய பகுதிகளில் வாழும் மாணவர்களே" என்றார்.

அதன் பின்னர் பேசிய வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன்தெரிவித்ததாவது: (பதிவுசெய்யப்பட்டகாணொலியில் இருந்து வரிக்கு வரி அப்படியே கேட்டு எழுதப்பட்டது. அதில் உள்ள விளக்கமின்மை, தவறுகளுக்கு உதயன் பொறுப்பல்ல)

# றிக்கைகள் விடக்கூடாது
# வடக்கு அமைச்சர் சீற்றம்

ரியிடுகின்றன ஆசிரியர் சங்கங்கள் என்று சீறிச் சினந்திருக்கிறார் வடக்கு மாகாண விவசாய சீரற்ற ஆளணிப்பங்கீடு என்பதும் மிக முக்கிய காரணியாகும். எனவே பின்தங்கிய கிராமப்புறப் த்திரமான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்ற பிரேரணையின் மீது ஆற்றிய உரை தரிவித்தமைக்குக் கண்டனம் தெரிவித்துப் பதில் அனுப்பியிருக்கிறார் அமைச்சர். அதன் பிரதி ப்படியே தரப்படுகின்றன.

ளுக்கு அவர்களின் பிரதிநிதிகளாக நாம் கூறக்கூடியது தான் என்ன?

மாவட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப வெட்டுப்புள்ளி களை அறிமுகப்படுத்தி, பின்தங்கிய மாவட்டங்களின் வளப்பற்றாக்குறையை அந்தந்த மாவட்ட பரீட்சார்த்திக ளைக் கொண்டே நிரப்புங்கள் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினாலும் அவை கணக்கில் எடுக்கப்படா மல் இருப்பது எவருடைய நலன்களைப் பாதுகாக்க?

அடிப்படை உரிமைகள் எனும் பெயரிலும், ஆசிரியர் நலன்களைக்காக்கிறோம் என்ற பெயரிலும் பின்தங்கிய பகுதிகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களின் அடிப் படை உரிமைகளை நீங்கள் உதாசீனம் செய்கின்றீர்கள் என்பது உங்களுக்குப் புரியவில்லையா?

எனது மாவட்டத்தில் உள்ள ஆசிரியர் சமூகத்துடன் நான் மிகவும் நெருக்கமான, ஐக்கியப்பட்ட முறையில் செயல் பட்டு வருபவன் என்பதை எனது மாவட்டத்தின் கல்விச் சமூகம் நன்கு அறியும். அவர்களின் ஆதங்கங்களையும் பெற்றோரின் கவலைகளையும் வெளிப்படுத்தி நான் ஆற்றிய உரையில் தவறைக் கண்டுள்ள நீங்கள் மாகாண சபையில் நான் ஆற்றிய உரையின் முழுப் பகு தியினையும் வாசித்து ஆராய்ந்து அறிய வேண்டும் என் பது எனது விருப்பமாகும்.

எத்தனை ஆசிரியர்களை நியமித்தாலும், அவர்கள் ஒரு எல்லைக்கு அப்பால் நகர்கிறார்கள் இல்லை, தூர இடங்க ளுக்கு செல்கிறார்கள் இல்லை, குடும்பத்தோடு இருந்து பணிபுரிய விரும்புகிறார்கள் என்றால், அவர்கள் ஏன் பின்தங்கிய மாவட்டங்களைக் காட்டி நியமனங்களைப் பெற்றுக்கொண்டு அந்த மாவட்டங்களின் மாணவர்க ளுக்கு துரோகமிழைக்கிறார்கள். இது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு முறைதானா?

எனது மாவட்டத்தில் ஏராளமான பாடசாலைகள் ஆசிரி யர் இன்றி அல்லாடுகின்றன. வசதியுள்ள பெற்றோர்கள் விரக்தியால் தமது பிள்ளைகளின் கல்விக்கு நகர்ப் புறங் களை நாடுகிறார்கள். வசதியற்ற மாணவர்கள் கல்விய றிவே இல்லாமல் ஆறாம் ஆண்டுக்கு வந்து சேர்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம், ஆசிரியர் சங்கங்களும்கூட நடை முறைச் சாத்தியமான தீர்வினை முன்மொழியலாம் என் பதே எனது எதிர்பார்ப்பாகும். வன்னியில் பின்தங்கிய மாவட்டங்களின், வலயங்களின் ஆளணி வளப் பங்கீட் டில் நியாயமான விதிமுறைகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் எந்த எல்லைக்கும் சென்று எனது ஒத்துழைப் பைத் தர தயாராகவுள்ளேன். இவ்விடயம் நான் பிரதி நிதித்துவப்படுத்தும் முல்லைத்தீவு மாவட்ட பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் நன்கு அறிந்த விடயம். நீங்க ளும் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன்.

06.10.2017ல் நா0ன் ஆற்றிய உரையில் முழுவடிவம் கிடைக்கப்பெற்றதும், அதன் பிரதியை தங்கள் அமைப் புக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பேன் என்பத னையும் இத்தால் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

க. சிவநேசன்,
மாகாண சபை உறுப்பினர்
வடக்கு மாகாணம்.
10.10.2017

பிரதி: பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழ் ஆசிரியர்

## ஓயே.....!

"நான் நினைக்கின்றேன் இது ஒரு நீண்ட காலமாக இருக்கின்ற பிரச்சினை. இந்தச் சமச்சீரான நியமனங்கள் என்பது, அது சாத்தியப்படும் என்பதிலே, நான் நினைக் கின்றேன் நூற்றுக்கணக்கான பிரேரணைகள் இங்கே கொண்டுவரப்பட்டு அவை, அனேகமானவை கிடப் பிலே கிடக்கின்ற சூழ்நிலைதான் இருக்கின்றது. இந்த விடயம் நாம் பல இடங்களில் கூறிய போதிலும்கூட, நியமனம் பெற்ற அன்றே அவர்கள் வந்து 125 பேர் ட்ரான்ஸ்பராகிச் செல்ல முடியும் என்றால், அதாவது அங்கே, ஏற்கனவே, எங்கெங்கே வெற்றிடங்கள் இருக் கின்றன, எங்கெங்கே நியமிக்க வேண்டும் என்கிற தக வல்களை எல்லாம் எடுத்த பின்னர் நியமிக்கப்பட்ட 125 பேரை வேறு இடத்திற்கு மாற்றுவது என்பது, இது தான் எதிர்காலத்தில் நடக்கும் என்று நான் நினைக் கின்றேன். ஆனால் இதற்கு ஒரேயொரு தீர்வு இருக்கின் றது, என்னவென்றால், நான் நினைக்கின்றேன், இந்த கிராமப்புறங்களிலே, பின்தங்கிய பிரதேசங்க ளிலே இருக்கின்ற பாடசாலைகள் எல்லாவற்றையும் மூடி விட்டு நகரப் பகுதியிலே அல்லது அவர்கள், இந்த ஆசி ரியர்கள் வந்து கற்பிக்கக்கூடிய பிரதேசங்களிலே இருக் கின்ற பாடசாலைகளை மட்டும் சிறப்பாக நடத்துவதைத் தவிர, நான் நினைக்கவில்லை இது ஒரு தீர்வுக்கு வரும் என்று, எனக்குச் சாத்தியப்பாடு இல்லை என்றுதான் தோன்றுகின்றது என்று நான் கருதுகின்றேன் " என் றார்.

அவரை அடுத்துக் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் இ.ஜெயசேகரம் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளை இனம் கண்டு அவற்றை அபிவிருத்தி செய்யுங்கள். மேலும் பாடசாலைகளில் விடுதி வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுங்கள். அவ்வாறு அந்தப் பாடசாலை களில் வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுத்தால் தாமாக ஆசிரியர்கள் வருவார்கள் என்றார்.

இந்த விவாதம் தொடர்பில் 07.10.2017 அன்று உதயன் வெளியிட்ட செய்தி வருமாறு:

**ஆசிரியர்களை சமச்சீராகப் பங்கீடு செய்வதிலுள்ள சிக்கலுக்குத் தீர்வாக வடக்கு விவசாய அமைச்சரின் அதிர்ச்சியளிக்கும் யோசனை**

யாழ்ப்பாணம்,ஒக்.7

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை சமச்சீராக நியமிப்பதி லுள்ள பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் அதிர்ச்சி தரும் யோசனையை முன்வைத்துள்ளார்.

"வடக்கு மாகாணத்தில் பின்தங்கிய கிராமப்புற பாட சாலைகள் அனைத்தையும் மூடிவிட்டு, அந்த பகுதி மாணவர்களை நகரப்புற பாடசாலைகளில் கற்க ஏதுவான வழிகளை மாகாண கல்வி அமைச்சு செய் யவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அவரின் இந்த யோசனையின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் தற்போது இயங்கும் 967 மாகாணப் பாடசாலைகளில் 446வரையான பாடசா லைகள் மூடப்படவேண்டும் எனக் கல்வி அதிகாரி கள் சுட்டிக்காட்டினர்.

வடக்கு மாகாண சபையின் 107ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமை யில் நேற்று நடைபெற்றது. அமர்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், "கல்வி அபிவி ருத்தி சார்பாக வடக்கு மாகாண பாடசாலைகளின் பின்னடைவுக்கு பல காரணங்கள் இருந்தாலும் சமச் சீரற்ற ஆளணிப் பங்கீடும் அதற்கு மிக முக்கிய கார ணியாகும்.

எனவே பின்தங்கிய கிராமப்புற பாடசாலைகளுக்கு இடையே சமச்சீரான ஆளணியைப் பேணுவதை உறுதிப்படுத்த மாகாண கல்வி அமைச்சு காத்திர மான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என பிரே ரணை ஒன்றை முன்மொழிந் தார்.

இந்தப் பிரேரணை மீது கருத்துத் தெரிவிக்கும் போதே வடக்கு மாகாண விவசாய அமைச்சர் மேற் கண்ட யோசனையை முன்வைத்தார்.

"வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் நியமனத்தை சமச் சீராக நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமில்லை. நியமனம் பெற்ற அன்றைய தினமே சில ஆசிரியர் கள் தமக்கு வேண்டிய இடங்களுக்கு இடமாற்றத்தை பெற்றுச் செல்கின்றனர். இவ்வாறான நிலையில் நாம் எப்படி சமச்சீரான நியமனத்தை வழங்க முடி யும்.

எனவே கிராமப்புற பாடசாலைகளை மூடிவிட்டு நக ரப்புற பாடசாலைகள் அல்லது ஆசிரியர்கள் பணி யாற்றக் கூடிய பாடசாலைகளை தெரிந்து நாம் அபி விருத்தி செய்வதே சிறந்த தீர்வாக இருக்கும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்தார். (வ–8)

# இருப்பதே ஒன்றுதான் என்ற பின்னர் அடிப் புல் என்ன நுனிப் புல் என்ன?

ஆசிரியர் சங்கத்துக்கு அமைச்சர் க.சிவநேசன் எழுதிய பதில் கடிதத்தில், விவாதத்தின் போது தான் மிகுந்த ஆதங்கத்துடன் தெரிவித்திருந்த கருத்துக்களின் ஒரு பகுதி மட்டும் அரைகுறையாக, தனது யோசனைகள், தீர்வு எனும் தலைப்பில், தனது எண்ணத்திற்கு முற்றிலும் பாதகமான முறையில் பத்திரிகை ஒன்றில் ஓரிரு தினங்களாக செய்திகள் வெளி வந்துகொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்.

1. இந்தச் செய்தியை வெளியிட்டது உதயன் பத்திரிகையே! வேறு எந்த ஊடகமும் இல்லை என்பதால் அமைச்சர் அதனை நேரடியாகவே குறிப்பிட்டிருக்கலாம். அவருடைய கருத்தை பகுதியாகவோ அல்லது அரைகுறையாகவோ உதயன் வெளியிடவில்லை. திட்ட மிட்டு எழுதி வைக்கப்பட்டு வாசிக்கப்படும் (இந்த விடயத்தில் முதலமைச்சரைப் பாராட் டியே ஆகவேண்டும்) எந்தவொரு பேச்சையும் அப்படியே வெளியிட முடியாது என்பதை அமைச்சரின் பேச்சை அப்படியே இங்கே வாசிக்கும் அனைத்து வாசகர்களும் புரிந்து கொள்ள முடியும்.

குண்டக்க, மண்டக்க என்று பேசப்படும் பேச்சின் அடிப்படைக் கருத்தையே பத்திரிகைச் செய்தியாக வெளியிடமுடியும். பத்திரிகைகளைத் தொடர்ந்து படிப்பவர்களுக்கு அது நன்கு புரியும். அதையே உதயன் செய்தான்.

2. அடுத்து தனது யோசனைகள், தீர்வு என்ற தலைப்பில் தனது எண்ணத்திற்கு முற்றிலும் பாதகமான முறையில் செய்தி வெளியிடப்படுவதாக அமைச்சர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். அவர் சொன்னது இந்தப் பிரச்சினைக்கான தீர்வு என்று அவரேதான் தனது பேச்சில் தெளி வாகக் குறிப்பிடுகிறார். அவர் சொன்ன தீர்வை அவரது தீர்வு எனச் சொன்னதில் உதயன் என்ன தவறு செய்தது என்பதை அமைச்சர் தெளிவுபடுத்தினால் நல்லது (அவரது உரை யைப் போன்று அல்லாமல் தெளிவான உரைநடையில்). அமைச்சர் தான் சொன்னதைத் தீர்வு என்று குறிப்பிட்டாலும் அது மற்றையவர்களால் ஓர் தீர்வாக ஏற்றுக்கொள்ளப்படும் வரைக்கும் அது தீர்வுக்கான யோசனை மட்டுமே! அதனாலேயே அமைச்சரின் யோசனை என்று உதயன் குறிப்பிட்டது. அதிலும் தவறு ஏதும் இல்லை.

3. குறிப்பிட்ட பத்திரிகை இவ்வாறான உள் நோக்கத்துடனான செய்திகளை வெளியிட்டு வருவதில் எனக்கு ஆச்சரியமெதுவுமில்லை. பத்திரிகைத் துறையின் மாண்புகளை மலி னப்படுத்தி, முழுமையான தகவல்களை வெளியிடாமல், தமக்குத் தேவையான விதத்தில் குறிப்பிட்ட பகுதி வசனங்களை பொறுக்கி செய்தியாக்கி தமது காழ்ப்புணர்ச்சிகளை வெளிப் படுத்தும் பண்புகளை இன்றும் நாம் பத்திரிகைத் துறையில் இடையிடையே பார்த்துக் கொண்டுதான் உள்ளோம் என்று பொங்கிச் சரிந்திருக்கிறார் அமைச்சர்.

அமைச்சரின் பேச்சை உள்ளது உள்ளபடிதான் உதயன் வெளியிட்டது. அதனை நிரூபிப்ப தற்காகத்தான் அமைச்சரின் பேச்சுக்கு முன்னும் பின்னும் பேசப்பட்ட விடயங்கள் உட்பட அச்சொட்டாக அப்படியே எல்லா விடயங்களும் இங்கு மீள வெளியிடப்பட்டுள்ளன. உண் மையை, உள்ளது உள்ளபடி வெளியிடுவது உள்நோக்கம் கொண்டது என்றால் உதயன் அதனை மீண்டும் மீண்டும் எப்போதும் செய்துகொண்டேதான் இருக்கும். அதில் மாற்றம் எதுவும் இருக்காது. ஏனெனில் உண்மையைச் சொல்லவேண்டும் என்பதுதான் உதயன் பத்திரிகையின் உள்நோக்கமே!

4. உதயன் தனக்குத் தேவையானவற்றை மட்டும் பொறுக்கி எடுத்து செய்தியாக்கியிருக்கி றது என்றும் குற்றஞ்சாட்டியிருக்கிறார் அமைச்சர். அப்படி அவரது உரைக்குள் பொறுக்கி எடுப்பதற்கு ஒன்றும் முத்துக்களாகக் கொட்டிக் கிடக்கவில்லை. உளறல்களைத் தவிர்த்து விட்டு அவர் சொல்லவந்த கருத்தை மட்டுமே உதயன் அச்சொட்டாக வெளிப்படுத்தியிருக்கி றது என்பதை அவரது உரையை முழுமையாக வாசிக்கும் எந்தவொரு வாசகனும் புரிந்து கொள்வான். ஞாபகத்திறன் கொண்ட மாகாண சபை உறுப்பினர்களும் உணர்ந்துகொள் வார்கள்.

உதயன் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தும் அளவுக்கு அமைச்சர் என்ன சாதித்தார் என் பதையும் அவர்தான் மக்களுக்கும் உதயன் பத்திரிகைக்கும் தெளிவுபடுத்த வேண்டும். அமைச்சர் ஆனதற்குப் பின்னராவது எதையாவது சாதித்திருந்தால் அதைக்கூட அவர் வெளிப்படுத்தலாம்.

5. தனது உரையை முழுமையாக ஆராய்ந்து பார்க்காமல் நுனிப்புல் மேய்ந்து அறிக்கை விடுத்திருப்பதாக ஆசிரியர் சங்கங்களை வேறு சாடியிருக்கிறார் அமைச்சர். ஆசிரியர் சங் கங்கள் அல்ல வேறு எந்தச் சங்கமாக இருந்தாலும் மக்களாக இருந்தாலும் அவரது முழு உரையையும் வாசித்து அறியக்கூடிய உண்மை என்பது உதயன் எழுதியதுதான் அதற்கு மேலான உண்மை எதுவும் அவரது உரையில் கிடையாது என்கிறபோது, ஆசிரியர் சங் கங்களைக் கடிந்துகொள்வதற்கு அமைச்சருக்கு என்ன இருக்கிறது...! உள்ளே இருப்பது ஒன்றே ஒன்றுதான் என்றான பின்னர் அதில் நுனிப் புல் என்ன அடிப்புல் என்ன. இருப்ப தைத்தானே பார்க்கவும், படிக்கவும், மேயவும் முடியும்.

6. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டிருந்த பத்திரிகைக் குறிப்பின் பிரகாரம், இரண்டு வருட காலத்திற்கு முன்பு வடக்கு மாகாண அவைத்தலைவருடனும், மாகாண சபை உறுப்பினர்களுடனும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை எனில் இவ்வளவு காலமும் அதை பற்றிய எதுவித மாற்று நடவடிக்கைகளும் எடுக்காது மௌனமாக இருந்ததன் காரணம்தான் என்ன? என்று வேறு கேள்வி எழுப்பியிருக்கிறார் அமைச்சர்.

அந்தச் சங்கம் தெளிவாகச் சொல்லியபடி முட்டாள்தனமான யோசனைகளை முன்வைக்கக் கூடியவர்கள் இருப்பதனால்தான் இரண்டு வருட காலமாகியும் சுட்டிக்காட்டப்பட்ட விடயங் கள் எதுவும் நடைபெறவில்லை என்று வரிகளுக்கு இடையே சொல்லாமல் சொல்லிய விட யங்களைப் புரிந்துகொள்ளும் திறனை அமைச்சர் வளர்த்துக் கொள்வது அவரது எதிர்கால அரசியலுக்கு உதவக்கூடும்.

7. அதீத ஜனநாயக பண்பு, அடிப்படை மனித உரிமை விவகாரங்களை முன்னிறுத்தி, ஆளணி பற்றாக்குறையை நிவர்த்திக்க மாகாணசபையில் முன்னெடுக்கப்படும் சகல விட யங்களும் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் அதீத ஜனநாயகப் பண்பு என்று எதைக் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை. ஆயுத, குற்றப் பின்னணியைக் கொண்ட ஒரு அமைப்பின் உறுப்பினரான அவருக்கு ஜன நாயகப் பண்புகள் வேண்டுமானால் அதீதமானவையாகத் தோன்றலாம். ஆனால், ஜன நாயகம் என்பதில் அதீதம் குறைவு என்று ஒன்றில்லை. ஜனநாயகம் ஜனநாயகம்தான் எப்போதும். வன்னியில் தமிழ் மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்களிலும் போர்க் குற்றங்களிலும் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் இலங்கை இராணுவத்தினரு டன் சேர்ந்து ஒட்டுக்குழுவாக இயங்கிய ஓர் அமைப்பின் உறுப்பினர் என்ற வகையில் மனித உரிமைகளை ஆசிரியர் சங்கங்கள் முன்னிறுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கக்கூடும். ஆனால், அந்த உரிமைகளுக்காகத்தான் தமிழ்ச் சமூகம் கடந்த பல தசாப் தங்களாகப் போராடி வருகின்றது என்பதை அமைச்சருக்கு ஞாபகமூட்ட உதயன் கடமைப் பட்டுள்ளான்.

– ஆசிரியர்

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
28 . 08 . 2000

மறைவு
28 . 08 . 2017

### செல்வன் ஜெயசாந்தி டினேஸ்

(யா/சென்யோன்ஸ் கல்லூரி 2019 உ.த வர்த்தகப் பிரிவு மாணவனும் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும்)



அன்னையவள் பெற்றெடுத்து அன்போடு வளர்த்துன்னை - ஆளாக்கினாள்
ஆண்டுகள் பதினேழு கடக்க முன்னே அவசரமாய் நீ - எங்கு சென்றாய்
இறைவன் தந்த முத்து என்று உன்னை இன்புறவே - வளர்த்து வந்தோம்
ஈசன் உன்னை விரைவில் கடலுக்குள் அழைப்பான்
என்று கனவிலும் நாம் நினைக்க வில்லை
உனதருமை அப்பாவும் உலகை விட்டு வேளையுடன் - சென்றுவிட்டார்
ஊரவர் கதறியழ உற்றவர்கள் பதறியழ நீ - எங்கையா சென்று விட்டாய்
எம்விதி இப்படியோ என்று ஏங்கித் தவிக்கின்றோம் - எல்லாம் அவன் செயலே
ஏணிப்படியேறி ஏற்றமுடன் எம்மைக் காத்திடுவாய்- என்று எண்ணியிருந்தோம்
ஐயகோ நாம் என்ன செய்வோம் எப்படியுன்னை - மீள அழைத்திட முடியும்
ஒருவனே எமக்கு இறைவன் தந்த சொத்து என்று - உன்னை வளர்த்து வந்தோம்
ஓடிச்சென்று விட்டாயே இறைவனிடம் நொடிப்பொழுதில்
நாம் என்ன செய்ய முடியும்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கடந்த 28.08.2017 திங்கட்கிழமையன்று இறைபதமடைந்த எமதருமைப் புதல்வன் ஜெயசாந்தி டினேஸ் அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதலளித்து இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் தொலைபேசிவாயிலாகவும் கடிதம் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
21 . 02 . 2000

இறப்பு
28 . 08 . 2017

### செல்வன் சின்னத்தம்பி நாகசுலோஜன்



சித்தர்கள் உதித்த மண்ணில் அன்னை மடியில் நீயிருந்து உதித்தாய்
நான் இட்டேனே பெயர் நாகசுலோஜன் என்று பெயரிட்ட நாளில் இருந்து
பாலகனாய் நீ தவழும் காலத்தில் என் கரத்தால் ஆகாயம்
நோக்கி வீசி ஏந்திடும் பொழுது நீ பயத்துடன் சிரிக்கும் சிரிப்பு என்
உள்ளத்தை விட்டு இன்னும் நீங்கவில்லை
வளர்ந்து நீ கல்வி கற்கும் போது நான் சொல்லும் வார்த்தையைத் தட்டாது
ஓம் மாமா ஓம் மாமா என்று நீ சொல்லும்
வார்த்தையைக் கேட்டு அதையும் நான் நம்பிட்டேன்
அடிக்கடி தொலைபேசி மூலமாய் உனக்கு புத்திகள் உரைக்கும் வேளை
ஓம் மாமா ஓம் மாமா என்று நீ கூறுவது என்னுள்ளத்தில் உறைந்து கிடக்கிறது
நீ தண்ணீரில் தத்தளிக்கும் காட்சி என் ஞானத் திரையில் ஒரு கணம் காட்டி
நான் அதை மறக்கும் முன்னே
உன் செய்தி என் காதில் விழுந்தது உன் விதியே சதி செய்து விட்டது
விதியை வெல்ல யாரால் தான் முடியும் இப்பொழுது நீ என் கண்முன்னே
நிற்கின்றாய். சிரிக்கின்றாய் நீ சிரிக்கும் அந்தக்காட்சி என்னால் மறக்க முடியாது
நீ உன் குடும்பத்தில் மீண்டும் பிறப்பாய் என்று எனக்கு உரைத்ததை எண்ணி
உன் மழலை முகத்தைக் காண ஆவலுடன் காத்திருக்கின்றேன்
அன்புடன் உன் மாமா

அம்பிகை அம்பிகை தாசானந்த சுவாமி
குடும்பத்தினர்.

## 40 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### ராமு கந்தசாமி



பிறப்பு
05.01.1932

இறப்பு
02.10.1977

உங்கள் மறைவால்
வாடும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
19, யாழ்.வீதி,
யாழ்ப்பாணம்.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 . 01 . 1981

மறைவு
18 . 10 . 2011

### செல்லத்துரை வினோகரன்

திதி: சஷ்டி

நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கி
ஆண்டுகள் ஆறு சென்றாலும்
எம்மைவிட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இடைக்குறிச்சி,
வரணி.

குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

### செல்வன் கோணேஸ்வரன் பிரவீன் (குட்டி)



அன்னை மடியில்
18.11.1997

ஆண்டவன் அடியில்
28.08.2017

கனவுகள் பல சுமந்தோம்
அது பகல் கனவாய் போனதடா
நிலைகுலைந்து நிற்கின்றோம்
நீ எமைப் பிரிந்து சென்றதேனோ
நீ கடைக்கு வருவாய் என்று காத்திருந்த வேளையிலே
நீ கடல் அலைக்கு இரையானாய் என்ற செய்தி கேட்டதா

நாங்கள் கண்ணுறங்கும் நேரத்திலும் உன்முகமே தெரியுதடா
அன்பு மகனே என் ஆசைக் குட்டியனே
உன் ஆத்மா சாந்தியடைய அத்தியடி ஆனைமுகனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

எமது அன்பு மகனின் திடீர் மரணச் செய்தி கேட்டவுடன் ஓடோடி வைத்தியாசலைக்கு வந்து எமக்கு ஆறுதல் கூறியோர் மற்றும் எமது இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரி யையில் பங்குபற்றியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுகும் பத்தி ரிகை மூலமும், துண்டுப்பிரசுரம் மூலமும் மலர்வளையங்கள் வைத்தும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலமும் அஞ்சலி மற்றும் அனுதாபம் தெரிவித்த வர்களுக்கும் 09.10.2017 கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அந்தியேட்டி நிகழ்வில் பங்குபற்றியவர்க்ளுக்கும் பலவழிகளில் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவி-னர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதோடு இன்று (11.10.2017) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் (TCT மண்டபம்) நடைபெறும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறம் மதியபோசன நிகழ்விலும் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

N.கோணேஸ்வரன் (சிவா)
55/3,அம்பலவாணர் வீதி,
அத்தியடி யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


**வியாழன் கிரகத்தின் 'யுரோபா' நிலவு**

வியாழன் கிரகத்தின் மிகவும் குளிரான 'யுரோபா' என்ற நிலவில் தண்ணீர் இருப்பதற்கான கூடுதல் ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அந்த நிலவில் இருந்து விண்வெளியில் பெருமளவு தண்ணீர் கொட்டுவதாகவும், அதை நுண்ணுயிர் ஆய்வுக்கு உட்படுத்தலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்கு தண்ணீர் இருப்பதாக 'டெலஸ்கோப்' கருவியைப் பயன்படுத்தி நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மூன்று ஆண்டுகளுக்கு முன்பே தண்ணீர் இருப்பதை முதலில் பார்த்ததாகவும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தண்ணீர் கொட்டும் பகுதிக்குள் விண்கலத்தைச் செலுத்தி அதன் மாதிரிகளைச் சேகரித்து வந்து அதிலுள்ள உயிர்த்தன்மை குறித்து ஆய்வு நடத்த முடியும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

'யுரோபா' நிலவின் மேல் ஓட்டின் அடிப்பகுதியில் கடல் போன்று பெருமளவு தண்ணீர் வளம் இருப்பதாகவும், அது உயிர் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் என்றும் நம்பப்படுகிறது.

# பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை தனதாக்கினார் அமெ. வல்லுநர் ரிச்சர்ட்



வொஷிங்டன், ஒக். 11
பொருளாதாரத்துடன் உளவியலை ஒருங்கிணைத்த அமெரிக்க வல்லுநர் தாலருக்கு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவீடனைச் சேர்ந்த விஞ்ஞானி அல்பிரட் நோபல் நினைவாக பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு வருடம்தோறும் நோபல் பரிசு வழுங்கப்படுகிறது. இதுவரை மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி ஆகிய துறைகளுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டது அமெரிக்காவைச் சேர்ந்த ரிச்சர்ட் ஹெச் தாலர் இந்த விருதை வென்றார்.

பொருளாதாரத்துக்கான முடிவுகளை உளவியலுடன் ஒருங்கிணைத்து எப்படித் தீர்வு காண்பது தொடர்பான ஆய்வினை மேற்கொண்டமைக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# அமெரிக்காவில் நிலநடுக்கம்



வொஷிங்டன், ஒக். 11
அமெரிக்காவின் அலஸ்கா மாகாணத்தில் மேற்கு கடற்கரையோரப் பகுதியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவில் 6.6 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது என்று அமெரிக்கப் புவியியல்சார் ஆய்வு மையம் தெரிவித்தது. வழக்கத்தை விட அதிக கொந்தளிப்புடன் கடல் காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (ம)



# ரொஹிங்யர்கள் வருகை மிகையாக அதிகரித்தது

டாக்கா, ஒக். 11
மியன்மாரில் இருந்து பங்களாதேஷ் நோக்கி, அகதிகளாகச் செல்லும் ரொஹிங்யர்களின் தொகை மிகையாக் அதிகரித்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதன்படி இதுவரை சுமார் 5 லட்சத்து 50ஆயிரம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்றுள்ளனர் என்று அறியமுடிகிறது.

பௌத்த நாடான மியன்மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவுக்கும், மியன்மார் அரச படைக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. இதையடுத்து மியன்மாரில் அப்பாவி ரொஹிங்ய இஸ்லாமியர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். இதனால் லட்சக்கணக்கான ரொஹிங்யர்கள் மியன்மாரை விட்டு வெளியேறியுள்ளனர். சுமார் 5 லட்சத்து 50 ஆயிரம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குள் சென்றுள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பங்களாதேஷுன் தலைமை அமைச்சர் ஷேக் ஹசீனா, ரொஹிங்யர்களை தொடர்ந்தும் ஆதரிப்பதற்குத் தயார் என்று அண்மையில் தெரிவித்திருந்தார். இதையடுத்தே பங்களாதேஷுக்குள் செல்லும் ரொஹிங்யர்களின் எண்ணிக்கை மிகையாக அதிகரித்துள்ளது என்று சொல்லப்படுகிறது. (ம)



# டெக்சாஸில் துப்பாக்கிச் சூடு

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் லப்போக் நகரில் டெக்சாஸ் பல்கலைக்கழகம் உள்ளது. பல்கலைக்கழக வளாகத்திற்குள் பொலிஸ் நிலையமும் உள்ளது. மாணவர்கள் போதைப் பொருள் பயன்படுத்துகின்றனர் என்று கிடைத்த தகவலையடுத்து அவர்களின் அறைகளை நேற்றுமுன்தினம் பொலிஸார் சோதனையிட்டனர். ஒரு அறையில் போதைப் பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த அறையில் இருந்த மாணவன் திடீரென நடத்திய துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் பொலிஸார் ஒருவர் உயிரிழந்தார். (ம)



அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில், சான் பிரான்சிஸ்கோ நகரில் கடும் காட்டுத் தீ தற்போது ஏற்பட்டுள்ளது. நூற்றுக் கணக்கான ஹெக்டயர் காட்டுப் பகுதிகள் தீக்கிரையாகியுள்ளன. சுமார் 200 வீடுகள், சுமார் 500 வன விலங்குகள் ஆகியனவும் தீக்கிரையாகியுள்ளன. தீயை அணைக்கும் பணியில் சுமார் 50 உலங்கு வானூர்திகள், 70 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)



# அமெரிக்காவின் முதல்பெண் நான்தான் என்கிறார் இவானா



"அமெரிக்காவின் முதல் பெண். நான்தான்" என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்பின் முதல் மனைவி இவானா. அமெரிக்காவில் அதிபரின் மனைவிக்கு முதல் பெண்மணி என்ற அந்தஸ்து கிடைக்கும். தற்போது ட்ரம்ப் அதிபராகப் பதவி வகிக்கிறார். அவருக்கு 3 மனைவிகள். மூன்றாவது மனைவியான மெலனியா ட்ரம்புடன் தற்போது வாழ்ந்து வருகிறார். இவருக்கு அமெரிக்காவின் முதல் பெண்மணி என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ட்ரம்பின் முதல் மனைவி இவானா எதிர்ப்புத் தெரிவித்து போர்க்கொடி உயர்த்தியுள்ளார். சமீபத்தில் இவர் தான் எழுதிய 'ரெய்சிங் ட்ரம்ப்' (ட்ரம்பின் எழுச்சி) என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து ஒரு செய்தி நிறுவனத்துக்கு அளித்த செவ்வியில், "நான்தான் ட்ரம்பின் முதல் மனைவி. எனவே நான்தானே அமெரிக்காவின் முதல் பெண்மணி" என்று தெரிவித்துள்ளார். (ம)

நினைவலைகள்

18 ஆம் மாத 2 ஆம் ஆண்டு



பிறப்பு 07.12.1938
இறப்பு 09.04.2016
பிறப்பு 15.01.1943
இறப்பு 03.10.2015

திருநாவுக்கரசு இராசரத்தினம்
(விஜிதா அரிசி ஆலை தாவடி)
திதி: திருதியை

இராசரத்தினம் யோகம்மா
திதி: சஷ்டி

அறுகுபோல் வேர்கொண்ட
அழியாத பாசக் குன்றே!
உறவுக்காய் வாழ்ந்தாயம்மா!
மறவாத நிலைத்த அன்பில் வாடுகிறோம்
நிலவாக நிற்கும் தாயே!
நினைவலைகள் சேரட்டும் உங்கள் பாசத்தில்

இல.47, குளப்பிட்டி சந்தி,
ஆனைக்கோட்டை றோட்,
கொக்குவில்.

உங்கள் பாசத்தில்
குடும்பத்தினர்.

# ரக்கா பெருநகரில் மீண்டும் தாக்குதல்



டமஸ்கஸ், ஒக். 11
சிரியாவின் ரக்கா நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தாக்குதல்களை அரச படைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் பிடியில் உள்ள சிரியாவின் ரக்கா நகரின் பெரும் பகுதி, அதாவது 90 சதவீதமான பகுதி சிரிய அரசின் கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டன. தமது இருப்பைத் தக்கவைப்பதற்காக மக்களை மனிதக் கேடயங்களாக ஆயுததாரிகள் பயன்படுத்தியதால் தமது தாக்குதல்களை அரச தரப்பு நிறுத்தி வைத்திருந்தது. இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் தாக்குதல்களை மீண்டும் ஆரம்பித்துள்ளது சிரிய அரச தரப்பு. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடுபட்டுள்ள நிலையில், ரக்கா நகரை மீட்பதற்கான போருக்கு அமெரிக்கா கூடுதல் உதவிகளைச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# ட்ரம்பின் சர்ச்சைக்குரிய நகர்வுகளால் மூன்றாம் உலகப்போர் ஏற்படும் நிலை



வொஷிங்டன், ஒக். 11
அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் சர்ச்சைக்குரிய கருத்துகளாலும், நகர்வுகளாலும் மூன்றாம் உலகப் போர் மூளும் ஆபத்து உள்ளது என்று குடியரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் பாப் கார்கர் தெரிவித்தார். ட்ரம்பின் கட்சியைச் சேர்ந்த அவர் ட்ரம்புக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளமை மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், 'வடகொரியாவை முற்றிலும் அழித்து விடுவேன், அந்த நாட்டுடன் அமைதிப் பேச்சு நடத்துவதற்கு வாய்ப்பில்லை, இராணுவ நடவடிக்கை மட்டுமே ஒரே தீர்வு' என்று ருவிற்றரில் அவ்வப்போது கருத்துகளைப் பதிவிட்டு வருகிறார். அவரின் கருத்துக்களை அமெரிக்காவின் ஆளும் கட்சியான குடியரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் பாப் கார்கர் கண்டித்துள்ளார்.

'நியூயோர்க்டைம்ஸ்' நாளிதழுக்கு அளித்த செவ்வியில், "பயிற்சி அதிபர் போல ட்ரம்ப் செயற்படுகிறார். ரியாலிட்டி ஷோவில் பேசுவது போல சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டு வருகிறார். வடகொரியா குறித்த அவரது சர்ச்சைக் கருத்துகளால் 3ஆம் உலகப் போர் மூளும் அபாயம் உள்ளது" என்று மேலும் தெரிவித்தார். (ம)




புதன் பொய்கை



வெற்றி பெறுவது எப்படி என்று யோசிப்பதைவிட தோல்வி அடைந்தது எப்படி என்று யோசித்துப் பார். நீ கண்டிப்பாக வெற்றி பெறுவாய்.

மல்லிகா

# சுகந்தரும் சுயம்வரம்



வாழ்க்கை வாழ்வதற்கே என்று எம் முன்னோர்கள் அழகுறக் கூறியுள்ளனர். ஆனால், வாழ்க்கை பற்றிய புரிதல்கள் இன்றி எத்தனையோகுடும்பங்கள் இன்று சின்னாபின்னமடைந்து நீதிமன்றங்களில் நிரம்பிவழிவதைக்காணமுடிகிறது. இதற்குப்புரிந்துணர்வற்ற திருமண பந்தங்களே அடிப்படைக்காரணம். இந்த அவலத்தைத் தவிர்ப்பதற்குப் பண்டைக்காலத்தில் சுயம்வரம் என்ற திருமண பந்தம் கைகொடுத்தது. இது சுகமான இல்லறத்திற்கு அடித்தளம் இட்டது.

## சுயம்வரம்

தமிழ் இலக்கியம் காந்தர்வம்முதல்சுயம்வரம்ஈறாக எண்வகைத் திருமணம் பற்றிக் கூறுகின்றது. இதில் சுயம்வரம் என்பது, ஒரு பெண் தனக்கான மணமகனைத் தானே சுயமாகத் தேர்ந்தெடுப்பதாகும். இது மன்னர்மற்றும்செல்வந்தர் குடும்பங்களில் பெருவழக்காய் இருந்தது. தன் மகளுக்குத் தக்க மணமகனைத் தேடும் முயற்சியில் மன்னன் எல்லா நாட்டு அரசரையும்ஒருசபையில்கூட்டி, தன் மகள் விரும்புபவனுக்கு மணமுடித்துக் கொடுத்தலே சுயம்வரம் ஆகும். இதனை தன் வரிப்பு எனவும் அழைப்பர். அதாவது, தனக்கானகணவனை ஒரு பெண் தானே வரித்துக்கொள்ளல் எனப்பொருள்படும்.

இந்த சுயம்வர முறை இளவரசிகள் தங்களுக்கு விருப்பமானவர்களைத் தேர்வு செய்துகொள்ளமட்டும் பயன்படுத்திய ஒரு முறையாகப்பலபழங் கதைகள் உள்ளன. இந்தக் கதைகளிலுள்ளபடி சுயம்வரம் என்பது, இளவரசியின் தோழியானவள் ஒவ்வோர்அரசராக, அவர்களின்வீரச்செயல்கள், பண்பு, குலப்பெருமை, மாண்பு முதலியகுணங்களைஒவ்வொன்றாகஎடுத்துரைப்பாள். இவற்றில் மணமகளைக் கவரும் ஒருவனுக்கு அவள் மாலையிட்டுமணமகனைத்தேர்வுசெய்வாள். நளவெண்பா, மகாபாரதம், இராமாயணம் போன்ற இலக்கியங்களில் சுயம்வரக்காட்சிகள்இடம்பெற்றிருக்கின்றன. இவற்றின்படி நளவெண்பாவில் தமயந்தி, காத்திருந்த தேவர்களையெல்லாம் விட்டுவிட்டு தன் அறிவுக்கூர்மையால்நளனை இனங்கண்டும்இராமாயணத்தில் வில்லினை ஒடித்தும் மகாபாரதத்தில் தன் வில்வித்தையால் திரௌபதியை அருச்சுனனும் உடற்பலத்தால் தன் உடன்பிறந்தோருக்கான மணமக்களை பிற அரசரிடமிருந்து மீட்டு வீஷ்மரும்தமக்கேற்றஇணைகளையோ, தம் சார்ந்தோருக்கான இணைகளையோ தேடிக்கொண்டனர்.

> தமிழ் இலக்கியம் காந்தர்வம் முதல் சுயம்வரம் ஈறாக எண்வகைத் திருமணம் பற்றிக் கூறுகின்றது. இதில் சுயம்வரம் என்பது, ஒரு பெண் தனக்கான மணமகனைத் தானே சுயமாகத் தேர்ந்தெடுப்பதாகும். இது மன்னர் மற்றும் செல்வந்தர் குடும்பங்களில் பெருவழக்காய் இருந்தது

## நளன் - தமயந்தி

நளவெண்பா அற்புதமான காதல் காட்சிகள் நிரம்பிய இலக்கியச் சித்திரம். இது சோழர் காலத்துச் சிற்றிலக்கியமாகும். இதனைப் புகழேந்திப் புலவர் இயற்றினார். பாட்டுடைத் தலைவர்களாக நளனும்தமயந்தியும்வருகின்றனர். நளன் நிடத நாட்டு அரசன். தமயந்தி விதர்ப்ப நாட்டு அரசனான வீமராசனின் அருமைப் புதல்வி. ஒருநாள் நளன் தன் அரண்மனைத் தோட்டத்தில் சில அன்னப் பறவைகளைக் கண்டான். அவற்றில் ஒல்றைப் பிடித்து அவன் மகிழ்ந்த போது, அச்சத்தால் அப்பறவை நடுங்கியது. இதனைக் கண்ட நளன், "அஞ்ச வேண்டாம்"என்றுஅப்பட்சிக்குஆறுதல் மொழிகூறியதும்தைரியமடைந்தஅது, தமயந்தியின் குணநலன்கள் மற்றும் அழகினைஅவனிடம்வர்ணித்தது. அத்துடன், "நீங்கள் என்னை விட்டுவிடுவீர்களானால் நான் தமயந்தியிடம் சென்று உங்களையே மணம் செய்துகொள்ளும் அளவிற்கு உங்களது குணநலன்களை வர்ணிப்பேன்" என்று கூறியது. நளனும்அப்பறவையை விட்டுவிட்டான்.பறவைகள்விதர்ப்ப நாட்டிற்குப்பறந்துசென்றன. இக்காட்சியை,

*திசைமுகந்த வெண்க*
*விதைத் தேர்வேந்தே!*
*உன்றன் இசைமுகந்த*
*தோளுக்கு இசைவாள்*
*-வசையில்தமயந்திஎன்றோதும்தைய*
*லாள்மென்றோள்அமையந்திஎன்றோர்*
*அணங்கு*

(நளவெண்பா சுயம்வர காண்டம், 36) என்றசெய்யுள்அழகுறஎடுத்தியம்புகிறது.

விதர்ப்ப நாட்டினைச் சென்றடைந்தஅன்னப்பட்சிகள், தமயந்தியிடம்சென்றன. தன்னருகில்வந்த அன்னப் பறவைகளைக் கண்டு மகிழ்ந்ததமயந்திஅவற்றைத்துரத்திப் பிடிக்க ஓடினாள். தமயந்தி துரத்தி ஓடிய போது அன்னப் பறவை ஒன்றுபின்வருமாறு கூறியது. "தமயந்தி, நிடதநாட்டில்நளன் என்ற பெயருள்ள அரசர் இருக்கிறார். அவர்அச்வினீகுமாரர்களைப் போன்ற அழகுடையவர். மனிதர்களில் அவருக்கு நிகரான அழகுடையவர் ஒருவமில்லை. அவர் அழகில்மன்மதன். நீஅவர்மனைவியாக ஆனால், உன் பிறவியும் அழகும் பயன்பெறும். நாங்கள் தேவர்கள், கந்தவர்கள், மனிதர்கள், நரகர்கள், அரக்கர்கள் இவர்களைக்கண்டிருக்கிறோம். ஆனால், நளனுக்கு நிகரான அழகுடைய ஆண்மகனை எங்குமே காணக் கிடைக்கவில்லை. நீஎப்படிப்பெண்களில் இரத்தினமோ, அவ்வாறே நளன்ஆண்களுக்குஅணிகலன். உங்கள்இருவரின்ஜோடிப்பொருத்தம் மிகவும் சிறந்ததாக இருக்கும்" என்றது. இதைக் கேட்ட தமயந்தி அன்னத்திடம், "அன்னமே நீ நளனிடமும் இவ்வாறே சொல்ல வேண்டுமே" என்றாள். இக்காட்சியை,

*செம்மனத்தான் தண்ணளியான்*
*செங்கோலான்மங்கையர்கள்தம்*
*மனத்தைவாங்கும்தடந்தோளான்*
*- மெய்ம்மை நளனென்பான்*
*மேனிலத்தும் நானிலத்தும் மிக்*
*கான் உளனென்பான் வேந்தன்*
*உனக்கு*

(நளவெண்பா சுயம்வர காண்டம், 53) என்ற செய்யுளில் புலவர் சித்திரமாக்கியுள்ளார்.

அன்னம் நிடத நாட்டிற்குத் திரும்பிச் சென்று நளனிடம் தமயந்தியின் செய்தியைக் கூறியது.

அன்னப்பறவை மூலம் நளனின் புகழைக் கேட்ட தமயந்தி அவனிடம் காதல் கொண்டாள். இரவும் பகலும் அவன் நினைவாகவேஇருக்குமளவிற்குஅவள் காதல்வளர்ந்துவிட்டது. தமயந்திமேனி கறுத்து, நிறம் மாறி வலிமை குன்றினாள். பொலிவிழந்துகாட்சிஅளித்தாள். தமயந்தியின்தோழிகள்அவளுடையஉள்ளுணர்வைஅறிந்து கொண்டு, விதர்ப்ப நாட்டு அரச





னிடம் பணிவுடன், தங்கள் மகள் உடல்நலம் குன்றிவிட்டாள் என்று கூறினர். அரசன் தன் மகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தான். இறுதியில், என் மகள் திருமண வயதை அடைந்துவிட்டாள். ஆகவே, அவளது சுயம்வரத்திற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான். எல்லா அரசர்களுக்கும் சுயம்வரத்திற்கான மடல் அனுப்பினான். அதில் அனைவரும் தமயந்தியின்சுயம்வரத்திற்கு வருகைதந்து, தாங்களும்பயனடைந்து, தம் விருப்பத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்றுஅறிவித்தான். எல்லா தேசத்து மன்னர்களும் தங்களை அலங்கரித்துக் கொண்டு யானை, குதிரை, தேர் போன்றனவற்றின் ஒலியால் பூமியை எதிரொலிக்கச் செய்து கொண்டு, விதர்ப்ப தேசத்திற்கு வரத் தொடங்கினர். வீமனும் அவர்களை வரவேற்றுஉபசரிக்கத்தகுந்த ஏற்பாடுகள் செய்திருந்தான். தமயந்தி லக்ஷ்மி தேவியை ஒத்த அழகு படைத்தவள். அகன்ற விழிகள் பெற்றவள். தான் அணியும் ஆபரணங்களுக்கே அழகைக் கொடுப்பவள். தேவர்களிலோ, ரிஷிகர்களிலோ அவள் போன்ற அழகான பெண்கள் இல்லை. இப்படிப்பட்ட அழகு படைத்தவளைத் தாங்கள் வரித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் தேவர்களும் சுயம்வரத்திற்கு வந்திருந்தனர். ஆனால், தமயந்திதன்மதிநுட்பத்தால்நளனை இனங்கண்டு அவனுக்கே மாலை சூட்டினாள்.

### இராமன் -சீதை

இராமனும் சீதையும் இல்லற வாழ்விலே இலட்சிய தம்பதிகளாய்த் திகழ்ந்துஎல்லோருக்கும்வழிகாட்டியவர்கள். இத்தகுசீதைக்குமிதிலை நாட்டில் பெரும் விழாவாக சுயம்வரம்நடைபெற்றது. சிவபெருமானிடம் இருந்து ஜனகருக்குக் கிடைக்கப்பெற்றசிவ தனுசில் எந்த மன்னர் நாண் பூட்டுகின்றாரே, அவருக்கேசீதைஎன்று அறிவித்தார் ஜனகர். அப்போது விஸ்வாமித்திரமுனிவருடன்இராமனும்இலக்குமணனும் அங்கு வந்தனர். சிவதனுசை நாண்பூட்டி உடைத்தான் இராமன். இராமன்வில்முறித்த செய்தியைசீதையின்உயிர்த்தோழி ஓடோடிச் சென்று அவளிடம் கூறினாள். சந்தோஷமடைந்தசீதை, வில் முறித்தது தன் நாயகன் தானா என்று சந்தேகம் கொள்கிறாள். அதேநேரம், தோழி கூறிய அங்க அடையாளங்களைக்கொண்டுதன்ஐயம்நீங்கினாள். இதனைக் கம்பன்,

*"கோமுனியுடன்வரு கொண்*
*டல்என்றபின்*
*தாமரைக்கண்ணினான்*
*என்றதன்மையால்*
*ஆம்அவனேகொல்என்ற*
*ஐயம்நீங்கினாள்"*

என்றுகம்பர்அழகாகக்கூறியுள்ளான். சீதையை இராமனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார் ஜனக மகாராஜா. இன்பத்திலும் துன்பத்திலும் இணை பிரியாது இந்தத் தம்பதியர் வாழ்ந்தனர். இன்றும் இலட்சியத் தம்பதிகளுக்கு வழிகாட்டிநிற்கின்றனர்.

> இராமனும் சீதையும் இல்லற வாழ்விலே இலட்சிய தம்பதிகளாய்த் திகழ்ந்து எல்லோருக்கும் வழிகாட்டியவர்கள். இத்தகு சீதைக்கு மிதிலை நாட்டில் பெரும் விழாவாக சுயம்வரம் நடைபெற்றது.

### பாண்டவர்- திரௌபதி

ஒகச் சக்கர நகரத்தில் பாண்டவர்கள் மற்றும் குந்திதேவியும் பிராமண வடிவிலேதங்கியிருந்துஅங்குஅட்டகாசம் செய்துவந்தபாகாசூரனைவதம்செய்கின்றார்கள். இதனால் அந்நகர மக்களின் அபிமானத்திற்கு ஆளாகின்றனர். இருந்தாலும் அவர்கள் பிச்சை எடுத்துகாலத்தினைக்கழித்துவந்தார்கள். ஏனையநேரங்களில்அங்கிருந்த ஏனையபிராமணர்களோடுவேதங்களையும் தர்ம சாஸ்திரங்களினையும் கற்று வருதலில் ஈடுபாடு கொண்டார்கள். இதனால் அவர்கள் மிகவும் மனவலிமையைப் பெற்றவர்களாக மாறினார். அச்சமயத்தில் அந்த நகரத்திற்குச்செய்தியொன்றுவந்தது. பாஞ்சால மன்னன் துருபதன் தனது ஒரே மகளான திரௌபதிக்கு சுயம்வர ஏற்பாடுகள் செய்துள்ளான் என்பதே அச்செய்தியாகும். இந்தச்சுயம்வரம்பாஞ்சால நாட்டின்தலைநகரமானகாம்பிலியாவில்நடப்பதாகச்செய்திஅறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சுயம்வரத்தில் பாஞ்சால தேசத்து ராஜாக்களும் கலந்துகொள்ளும்ஏற்பாடுகள்செய்யப்பட்டிருந்தன. இதனைக் காண அனைவரும் செல்கின்றனர் என்கிற செய்தியும் பாண்டவர்களுக்குக் கிடைத்தது. இந்த சுயம்வரமானது வில் வித்தையில் சிறந்து விளங்கக்கூடியஅர்ச்சுனனுக்காகவே செய்யப்பட்டுள்ளதுஎன்கிறசெய்தியும் பரவலாகப் பேசப்பட்டது. இதனால் பாண்டவர்களும்தமதுதாய் குந்திதேவியோடு காம்பிலியா நகரம் செல்ல முனைந்தனர். அங்குஒருகுயவனின் வீட்டில் குந்திதேவியைத் தங்க வைத்துவிட்டு பாண்டவர்கள் சுயம்வரத்தினைக் காண்பதற்காகத் தாம் மட்டும் நகரத்தின் உள்ளே சென்றார்கள்.

சுயம்வரத்தில்கலந்துகொள்வதற்காக எல்லாநாட்டுராஜகுமாரர்களும்சென்றனனர். துரியோதனன், கர்ணன், சல்லியன், பலராமன், கிருஷ்ணன், ஜராசந்தன் போன்றோரும் அங்கே சென்றனர். சுயம்வரஏற்பாடுகள்தடபுடலாகச்செய்யப்பட்டிருந்தன. பாண்டவர்கள் பிராமணக் கோலத்தில் இருந்ததால் பிராமணர்கள் தங்கியிருந்த இடத்திலே அமர்ந்திருந்தனர்.

இதுதான்சுயம்வரத்துக்கானபோட்டி. இங்கேஒருவில்வைக்கப்பட்டுள்ளது. கூடவேஐந்துஅம்புகளும்வைக்கப்பட்டுள்ளன. மேலே ஒரு கம்பத்தில் துவாரத்தோடுகூடியசக்கரம்ஒன்றுசுழன்று கொண்டுள்ளது. அந்தச்சக்கரத்திற்கும் மேலேமீன்வடிவில்இலக்கியொன்று பொருத்தப்பட்டுள்ளது. வில்லெடுத்து அம்பு பூட்டி துவாரத்தின் வழியாக அந்த இலக்கியை வீழ்த்துபவருக்கே திரௌபதி என்று அறிவிக்கப்பட்டது. அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வந்து முயற்சியில் தோற்றனர். இதனால்வருத்தப்பட்டதிருஷ்டத்யும்னன், "இப்போது இங்கு வந்த ராஜகுமாரர்கள் அனைவரும் இந்தப் போட்டியில் தோற்றுப் போய்விட்டார்கள். எனவே இப்போட்டி அனைவருக்கும் பொதுவானபோட்டியாக அறிவிக்கப்படுகின்றது. பிராமணர், சத்திரியர்யார்வேண்டுமானாலும் இந்தப் போட்டியிலே கலந்துகொள்ளலாம். வெற்றி பெறுபவர் யாராக இருந்தாலும் எனது சகோதரி திரௌபதியை மணந்து சீர்பெறலாம்"என்றுஅறிவித்தான். அப்போது பிராமணர் வேடத்தில் இருந்த அர்ச்சுனன் எழுந்து, நாராயணனை மனத்திலே நிறுத்திக்கொண்டுஒரே அம்பில் இலக்கியைக் கீழே வீழ்த்தினான். திரௌபதிதனதுகையிலுள்ளசுயம்வர மாலையை அவனுக்கு அணிவித்து மணாளனாக ஏற்றுக்கொண்டாள். அப்போது அங்கு சுற்றியிருந்த ராஜகுமாரர்கள் குழப்பம் விளைவித்தனர். ஆனால்,கண்ணனுக்குமட்டும்போட்டியில் வென்ற பிராமணன் அர்ச்சுனன் தான் என்பது புலப்பட்டது. இதனால் ராஜகுமாரர்கள் மேற்கொண்ட கலவரத்தினை ஒடுக்கி அவர்களைப் போகச்செய்தான் கண்ணன்.

திரௌபதியை அழைத்துக் கொண்டு தனது சகோதரர்களோடு குந்திதேவி தங்கியிருந்த குயவனின் வீட்டிற்குச் சென்றான் அர்ச்சுனன். "அம்மா உனக்கு ஒரு புதுமையான பிச்சை கொண்டுவந்துள்ளோம்"என அனைவரும் ஒரே குரலில் ஒலிக்கின்றனர். குந்திதேவிக்கு அவர்கள் திரௌபதியைக் கொண்டு வந்தது தெரியாது. உடனேஅவள்,"எதனைக்கொண்டு வந்தாலும் சரி. அதனை நீங்கள் ஐந்து பேரும் பகிர்ந்து மகிழுங்கள்" என்று ஆணையிடுகின்றாள். பின்புஅவர்கள் கொண்டு வந்தது திரௌபதி என்கிற கன்னிகை என்பதறிந்துமனம்குழம்புகின்றாள். இருந்தும் தாயின் சொல்லையே வேதவாக்காகக் கருதி ஐவரும் திரௌபதியை மணம் புரிகின்றனர்.

> பண்டைக் காலத்தில் தமக்கான வரன்களைப் பெண்கள் தாங்களே வரித்து, இல்லற வாழ்வில் இன்பத்திலும் துன்பத்திலும் சுகமாக வாழ்ந்தமைய்யை இலக்கியங்கள் அழகுற எடுத்தியம்புகின்றன்.

பாண்டவர்கள் உயிருடன் இருக்கும்செய்திஇந்தச்சுயம்வரம் மூலமாக பாஞ்சால மன்னன் துருபதனுக்கும்தெரியவருகின்றது. இதனால் அவன் தனது மகள் திரௌபதி யின் சுயம்வரத்தினை நினைத்து மனம் மகிழ்கின்றான். பாண்டவர்கலும் உண்மையை ஒப்புக் கொண்டு பிராமண வேடத்தினைக் கலைத்தனர். முறையாகத்திருமணஏற்பாடுகளைச் செய்தான் துருபதன். தாம் பெற்ற அருங்கனியான திரௌபதியை ஐவரும்பகிர்ந்து இன்புற்றனர்.

இவ்வாறு பண்டைக்காலத்தில் தமக்கான வரன்களைப் பெண்கள் தாங்களே வரித்து, இல்லற வாழ்வில் இன்பத்திலும்துன்பத்திலும்சுகமாகவாழ்ந்தமையை இலக்கியங்கள் அழகுற எடுத்தியம்புகின்றன. இவர்கள்வாழ்க்கையைப்பாடமாகக்கொள்வோருக்கு வாழ்வில்தோல்வியே இல்லை.



# முழுநிலா நாள் கலைவிழா

## முத்தமிழின் இன்பச் சுவை கூ(பெ)றல்



தென்னவன்

தமிழர் வரலாற்றின் அடிப்படைச் சித்தாந்தங்களை பாரம்பரியமாகவும், கலை கலாசாரப் பண்பியல்பாகவும் கதையாடுகின்ற இயல்,இசை,நாடகம் எனும் தனித்துவங்கள் கிடைத்தற்கரியவை.சங்க இலக்கிய காலப் படிமங்களில் இவை தனிச்சிறப்புடையவையாக மிளிர்ந்தன.அரச சபைகளில் அரங்கேற்றப்பட்டு பின்னர் அவை மக்கள் மயப்பட்டன.தனிமனித ஆளுமைகளாக உள்வாங்கப்பட்டும்,அனுபவ ரீதியில் உணரப்பட்டும், பல இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டும் வளம்படுத்தப்பட்டன.தற்காலத்திலும் அவை தனித்தன்மையோடு நோக்கப்படுகின்றன.கலைகளாக அரங்கேற்றம் காண்கின்றன.

அந்தவகையிலே கல்வி அறிவின் அடிப்படைக் கட்டுமானங்கள் திறம்பட வளம்படுத்தப்படுகின்ற பாடசலைகளிலும், சமூக ரீதியில் நிலைபெறுகின்ற அறிவூட்டக் களங்களிலும் இணைப்பாட விதான செயலாற்றுகையாக இவை ஒழுங்கமைவு பெறுகின்றன.இயல், இசை, நாடக ஸ்தானங்கள் மாணவர்களிடையே தனிமனித ஆளுமை பாவங்களாக வளம்படுத்தப்பட சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.அதனை எம்மத்தியில் கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது.



### கல்வியின் வழி கலை அம்சம் பேணல்

வடமாகாண கல்வித் திணைக்களம் முன்னெடுத்து வருகின்ற கலை மிளிர்வுச் செயற்பாடுகள் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.வடமாகணத்தில் உள்ள 12 கல்வி வலயங்;களையும் கலையின் வழி கூட்டிணைவாக்கி மாதமொரு கல்வி வலயத்தில் முழுநிலா நாள் கலை விழாவினை நடத்தி வருகின்றது.அங்கு பிரதேசம் சார்ந்த தனித்துவமான கலை அம்சங்கள் முதன்மையோடு ஆற்றுகை செய்யப்படுகின்றன.அழிவு நிலையில் உள்ள கலைவடிவங்களுக்கான புத்துயிரூட்டல் வழங்கப்படுவதனைக் காணலாம்.

### பூரணை நிகழ்வு

தென்மராட்சி கல்வி வலயத்தினர் ஏற்பாடு செய்திருந்த முழுநிலா கலைவிழா நிகழ்வுகள் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை சிறப்புற இடம்பெற்றன. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற கலைவிழா நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் க.சர்வேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார்,கலாநிதி வை.சிவராசா,ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.தவிர நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள்,சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்;கள்,ஏனைய கல்வி வலயங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

### கருப்பொருளின் சிறப்பும் கலை மிளிர்வும்

கலை விழாவில் பாடசாலைகள் உருவகித்த கலை அம்சங்கள் அற்புதமாக இருந்தன.அவற்றுள் ஊர்திகளும் அவை தாங்கிய கருப்பொருளும் சிறப்புற்றிருந்தன.குறிப்பாக வரணி கரம்பைக்குறிச்சி 'அ.த.க.பாடசாலை 'தொழில்மூலம் நாட்டைக் கட்டியெழுப்புதல் ' என்ற கருப்பொருளையும்,கல்வயல் சிறீ சண்முகானந்தா வித்தியாலயம் 'போதைப் பொருள் ஒழிப்பு' என்ற கருப்பொருளையும்,அல்லாரை அ.த.க.பாடசாலை 'டெங்கு ஒழிப்பு' என்ற கருப்பொருளையும், மந்துவில் றோ.க.த.க.பாடசாலை 'தொற்றாநோய்த்தடுப்பு' என்ற கருப்பொருளையும்,இடைக்குறிச்சி சிறீ சுப்பிரமணியம் வித்தியாலயம் 'விசமில்லா உணவு' (வீட்டுத் தோட்டம்) என்ற கருப்பொருளையும், இயற்றாலை அ.மி.க.த.பாடசாலை 'பொலித்தீன் பாவனை' என்ற கருப்பொருளையும் தாங்கியவாறு தங்களது ஊர்தி பவனியை மேற்கொண்டிருந்தன.

ஊர்திகளின் பவனியைத் தொடர்ந்து ஊர்வலமாக ஆடல் பாடல் கலைகளுடன் ஒன்றித்து ஒரு தொகுதியினர் கலை அலங்காரம் செய்தனர்.மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்கள் கோல உடையணிந்து விழாவின் பதாகை தாங்கி முன்னே வர கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்,நுணாவில் அ.த.க. பாடசாலை,மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் 'சர்வ மதக் கலாசார நடனத்தை' ஆற்றினர். சாவகச்சேரி இந்துக் கல்லூரி,மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி,சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி,வரணி மத்திய கல்லூரி,மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்கள் 'முகமூடிஆட்டம்'செய்தனர்.கைதடிகுருசாமிவித்தியாலயம்,மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்,மந்துவில் சிறீ பாரதி வித்தியாலயம,;



மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்,மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலயம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவம் செய்த மாணவர்கள் 'ஏந்தல் நடனம்' புரிந்தனர். இவை அனைத்தையும் ஒருங்கமைத்தவிதமாக பல் இசைக் கருவிகளை உள்ளடக்கிய 'இன்னியம் குழுவினர்' இசைநடனம் புரிந்தனர். இத்தனை சிறப்பம்சங்களின் மகுடமாக விருந்தினர்கள் அனைவரும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முகப்பில் இருந்து ஊர்வலமாகவிழா மண்டபம் நோக்கி அழைத்து வரப்பட்டனர்.

### நிகழ்வுகளின் ஒளி ஏற்றல்

மங்கல ஒளி ஏற்றல் நிகழ்வோடு ஆரம்பமான நிகழ்வில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்தையும், வரணி மத்திய கல்லூரி மாணவர்கள் பௌர்ணமி நிலவுப் பாடலையும் இசைத்தனர். தொடர்ந்து தென்மராட்சியின் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான் மு.பஞ்சாபிகேசனின் பேரர்களான பிரதித்தன் மற்றும் சித்தார்த்தன் குழுவினரின் மங்கல இசை நிகழ்வு இடம்பெற்றது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரனின் வரவேற்புரையும், அதனையடுத்து இடம்பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனமும் கலை விழாவுக்கு நல்ல ஆரம்பத்தைத் தந்தன.தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையுரை, முதன்மை விருந்தினரின் உரை என்பன நிகழ்வுக்கு வலுச்சேர்த்தன.கலை நிகழ்வுகளுக்கு அர்த்த ஊட்டமும் பார்வையாளர்களுக்கு சிந்தனை ஓட்டமும் நிறைவாகத் தந்தன.

### மழலை நிகழ்வும் இசை மகிழ்வும்

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் தரம் 4 மற்றும் தரம் 5 ஆகிய வகுப்புகளில் கல்வி கற்கும் 40 மாணவர்களின் பங்குபற்றலும் அவர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சியின் பயனும் 'பல் இன ஆடல்' என்ற நிகழ்வாக அரங்கை மழலை அலங்காரம் செய்தன.

தொடர்ந்து வலய மட்டத்தில் மாதாந்தம் நடத்தப்படும் 'சப்த ஸ்வரங்கள்' என்னும் ஏழிசைமாலை நிகழ்வின் தனித்துவ ஆளுமைகளாக விளங்கும் இசையாசிரியர்களின் 'ரஞ்சனிமாலை' என்னும் இசை நிகழ்வு பார்வையாளர்களை ஸ்ருதி லய ஞான நிலையில் அருள் அமுதூட்டி அமைதிகொள்ளச் செய்தன.அடுத்து இடம்பெற்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களின் 'முருக கீர்த்தனை' இசை நிகழ்வு தமிழ் கிழவு முருகனின் அழகினைச் சூடி நித்திய சுகந்தம் தனை எங்கும் வீசின.

### மாணவர் ஆளுமை தரும் விழிப்பு

கடந்த இரண்டு வருட காலமாக தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகள் தோறும் நடத்தப்படும் 'ஏழிசை மாலை' மற்றும் 'நாத நர்த்தன வர்ணம்' நிகழ்வுகளின் பிரதிபலிப்பை இந்த முழுநிலா நாள் கலை விழா பிரதி விம்பம் செய்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது. அதன் ஓர் அங்கமாக வலய ஆசிரியர்களின் வில்லிசை நிகழ்வு அமையப்பெற்றிருந்தது.வழமை போன்று கைதடி நவீல்ட் பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்வு பார்வையார்களின் மனக் கண்களைத் திறந்து ஒளி தந்தன.கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்களின் 'மெல்லிசை ஆடல்' நிகழ்வு முதன்முறையாக ஆற்றுகைப்படுத்தப்பட்டாலும் சிறப்பாக அமைந்து கண்ணயர்வற்ற செவி இன்பம் செய்தன.

மாகாணத்தில் உள்ள அனைத்து வலயங்களிலும் மாதாந்தம் நடத்தப்படும் முழுநிலா நாள் கலைவிழாவில் வலயத்திற்குட்பட்ட இசை மேதைகள் மற்றும் கல்வியியலாளர்கள் மதிப்பளிக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் தென்மராட்சி கல்வி வலயம் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணத்திற்கான கௌரவம் வழங்கப்பட்டது.'வலயத்தின் அறிஞர் மதிப்பளிப்பு' என்ற தெரிவு நிலையில் அவருக்கான மதிப்பளிப்பினை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் பொன்னாடை போர்த்தி வழங்கினார்.

முழுநிலா நாள் கலைவிழாவின் இறுதிக் களிப்பாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி,சாவகச்சேரி இந்துக் கல்லூரி,சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆகியவற்றின் மாணவிகள் ஒருமித்து வழங்கிய 'கும்மிப் பாட்டு' நிகழ்வும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள் ஆற்றுகை செய்த 'கிருஸ்ண வைபோகம்' என்னும் நாட்டிய நாடகமும் கிராமியக் கலை வடிவங்களுக்கு திலகமிட்டு நிகழ்வை முழுமை செய்யதன எனலாம்.


### வேண்டப்படும் பணி

ஆக, கலையின் வழியே நாம் ஒன்றுபட வேண்டும்.சமூகக் கட்டமைவுகளையும், அவை தனித்துவமாக கொண்டுள்ள கலை வடிவங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.அவற்றுக்கு புத்துயிர் அளித்து கலை அர்த்தங்களை அழிவின்றி நித்திய ஆத்ம சுவாசமாய் அழைத்து நடைபயில வேண்டும்.சமூக ஆளுமைகளின் அடித்தளங்களை வளம்படுத்தி முத்தமிழின் இன்பச் சுவை தனை ருசித்தும், இரசித்தும், இரட்சித்தும் காத்திருக்க வேண்டும்.இதுவே இன்றைய காலத்தின் தேவைப்பாடு என்பதை உணர்ந்துகொள்வோம்.



# தமிழருக்காக வாழ்ந்தவர் அருளானந்தம் டேவிட்

வன்னியான்



கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறையில் 1924ஆம் ஆண்டு பிறந்து 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி இறைபதமடைந்த சாலமன் அருளானந்தம் டேவிட்டின் இரண்டாவது ஆண்டு நிறைவுதினமான இன்று அவரைப் பற்றி நினைவில் கொள்ளுதல் எமது தலையாய கடமையாக அமைகின்றது.

**வறுமையில் கல்வி**

ஊர்காவற்றுறையில் வியாபாரி ஒருவரின் கடைசி மகனாகப் பிறந்தார் டேவிட். குடும்ப நிலைமை கல்விக்குத் தடையாக இருந்த போதிலும் டேவிற்றின் திறமையைக் கண்ட அதிபரின் அரவணைப்பினால் அவரது கல்வி இடையீடின்றி தொடரப்பட்டது. இதன்படி, ஆரம்ப, இடைநிலைக் கல்வியை சென். ஹென்றிஸ் கல்லூரியிலும் உயர் கல்வியை ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையிலும் பெற்றார்.

**தமிழீழ உணர்வுடன் செற்பட்டவர் டேவிட்**

கட்டட வரைபடத்துறையில் இலங்கையிலும், ஆஸ்திரேலியாவிலும் கல்விகற்று சிறந்து விளங்கிய டேவிட், தமிழீழ உணர்வுடன் செயற்படவும் தயங்கவில்லை. இவருடைய காலத்தில் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் நடந்து கொண்டிருந்ததன. தமிழர்களின் எதிர்காலம் நிச்சயமற்றிருந்ததை டேவிற் கண்டுகொண்டார். தந்தை செல்வாவின் பேச்சுக்களால் கவரப்பட்ட டேவிட் தமிழீழத்துக்கான போராட்டத்தில் தன்னையும் ஆழகமாக ஈடுபடுத்திக்கொண்டார்.

**காந்திய சிந்தனையின் வழி ஈழத்தவரை வழிப்படுத்தினார்**

கட்டடக் கலையில் பற்பல பட்டங்கள் பெற்று அறிவின் உச்சத்திலும் செயல்திறனிலும் சிறந்து விளங்கிய டேவிட் பிரிட்டன். நைஜீரியா. கென்யா போன்ற நாடுகளின் நகர அமைப்புக்கான வரைபடம் கீறும் வேலைக்காக அழைக்கப்பட்டார். குறிப்பாக கென்யாவின் மொம்பாஸா நகரை அமைப்பதற்காக அங்கு சென்ற போது மொம்பாஸா நூலகத்துக்கும் சென்று அங்கே இந்தியா பற்றிய ஏராளமான புத்தகங்களை வாசித்தார். அந்தப் புத்தகங்கள் காந்தியைப் பற்றியும் அவருடைய சிந்தனைகள் பற்றியும் டேவிற்றுக்கு உணர்த்தியது. காந்தியின் சிந்தனைகள் டேவிட்டின் சிந்தனையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி அதனைத் தமிழீழத்தில் புகுத்த வேண்டும் என்ற அவாவையும் ஏற்படுத்தியது. அதனால் இலங்கைக்கு வந்து வெளிநாடுகளில் பணியாற்றியவேளை அந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுப் பண்ணை விவசாய முறைமையை தமிழ் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்த முற்பட்டார். 1983ஆம் கலவரத்தின் போது மலையக மக்கள் ஓடோடி தமிழ்ப் பிரதேசங்களுக்கு வந்த போது அவர்களை வவுனியா, திருகோணமலை, வன்னி போன்ற எல்லாப் பிரதேசங்களில் குடியேற்றி ஆதரவு நல்கினார். அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் வறுமையை ஒழிப்பதற்காகவும் அவர்களுடன் அவர்களாக செயலாற்றினார்.

தமிழ் பல்கலைக்கழகத்தை நிறுவப்பாடுபட்ட டேவிட் அதற்கு அரசு செவிசாய்க்காதபோது தானே பல்கலைக்கழகத்திற்கான வரைபடத்தைக் கீறினார். டேவிட்டுக்கு சிறந்த நண்பராக டாக்டர் இராசசுந்தரம் கிடைக்கப்பெற்றார். இவரும் டேவிட் ஐயாவும் தமிழர் விடுதலை, வறுமை ஒழிப்பு, ஓயாத உழைப்பு ஆகிய கொள்கைகளில் இணைந்திருந்தனர். இதனால் இருவரும் சேர்ந்து கூட்டுப் பண்ணைத் திட்டத்தை ஆரம்பித்தனர்.

கூட்டுப் பண்ணைத் திட்டம் தமிழ் ஈழத் தமிழர்களின் தனிநாடு விடுதலைக்கு உதவுகின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக மேலோங்கின. இதனால் டேவிற் கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து கொழும்பு. மட்டக்களப்புச் சிறைகளில் அடைக்கப்பட்டார். மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருந்து தப்பித்து இந்தியா சென்ற டேவிட் தமிழ் இனவிடுதலைக்காக ஓயாது சிந்தித்தார்.

மீண்டும் இலங்கைக்கு வந்த டேவிட் ஐயாவுடன் பற்பல உயர் சிந்தனையாளர்கள் தொடர்புகொண்டு இன முரண்பாடுகள், மத அடக்கு முறைகள், மனிதம் அற்ற செயல்கள் விடுதலை பற்றிய எண்ணங்கள் போன்ற பல்வேறு விடயங்களை சிந்திப்பதும் செயல்வடிவத்துக்கான ஒத்துழைப்பு வழங்குவதையும் செயற்படுத்தி வந்தனர்.

இவர் மத இன வேறுபாடு அற்றவர். கல்வித் தாகம் மிக்கவர். தன் முயற்சி போல் அனைத்து மக்களும் முயற்சியாளராக இருந்து உழைக்க வேண்டும் என்ற விருப்புக் கொண்டவர். சுயநலம் அற்ற பொதுநலம் பேணும் மனிதம் மிக்கவர் என்று சொன்னால் அதில் மிகை ஒன்றுமில்லை.


# றோயல் மெடிக்கல் சென்ரர்

458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை பெற அழையுங்கள்.

**றோயல் வைத்திய ஆலோசனைகள் ...**

- ✔ காது, மூக்கு தொண்டை (ENT) சத்திரசிகிச்சை நிபுணர்
- ✔ நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்தியநிபுணர்
- ✔ சத்திரசிகிச்சை நிபுணர்
- ✔ மூட்டுவாத வைத்திய நிபுணர்
- ✔ தோல் வைத்திய நிபுணர்
- ✔ பொது வைத்திய நிபுணர்
- ✔ குழந்தை வைத்திய நிபுணர்
- ✔ மகப்பேற்று வைத்திய நிபுணர்
- ✔ நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- ✔ சிறுநீரக வைத்திய நிபுணர்
- ✔ மார்புநோய் வைத்திய நிபுணர்
- ✔ இதய வைத்திய நிபுணர்
- ✔ பிளாஸ்ரிக் (Plastic) சத்திரசிகிச்சை நிபுணர்
- ✔ பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்
- ✔ பல் முக சீராக்கல் வைத்திய நிபுணர்
- ✔ பல் தாடை சீராக்கல் சத்திரசிகிச்சை நிபுணர்
- ✔ பற்சிகிச்சை நிபுணர்



**தொடர்புகளுக்கு...**

021 720 1587, 021 320 2300, 021 221 3668, 077 045 7976
royalmedicalcentre458@gmail.com






தமிழ், சிங்களம், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய நான்கு மொழிகளில் வெளிவந்த ஆ. முல்லை திவ்யனின் நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தில் நடைபெற்றது. யாழ். பிரெஞ்சு நட்புறவுக்கழகத்தின் நிர்வாக இயக்குனர் ஜெயறாட் றொவுக்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் ஆ. முல்லைதிவ்யன் வெளியிட யாழ். ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் சிவலோகநாயகி பெற்றுக்கொண்டார்.

# செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' ஒரு மீள் வாசிப்பு

அ.றொனிராஜன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

**பாத்திரப் படைப்பு**

இந்நாவலில் இடம்பெறும் பாத்திரங்கள் யதார்த்தத் தன்மையுடன் படைக்கப்பட்டுள் ளன. உதாரணமாக பெண் பாத்திரங்கள் அவர்களுக்கேயுரிய நளினத்துடன் உரு வாக்கப்பட்டுள்ளன. இதேபோன்று மரிய தாஸ், சிமியோன் மற்றும் உதிரியான ஏனைய பாத்திரங்களும் அவற்றுக்குரிய தனித்தன்மைகளைக் கொண்டுள்ளன. ஆனால், "விருத்தாசலம்" என்ற பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ள தன்மையானது சினி மாக் கதாநாயகனின் சாயலைக் கொண்டு காணப்படுகிறது. இதில் முக்கியமாக இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டலாம். விருத்தா சலம் எப்போதும் குதிரையுடனும், தடியின் முனையில் செருகப்பட்ட கத்தி போன்ற ஓர் ஆயுதத்துடனும் காணப்படுகின்றான். அக் கத்தி போன்ற ஆயுதத்தைக் கொண்டு முயல், கூழைக்கடா போன்றன வற்றை வேட்டையாடுகின்றான். "அவனை ஏமாற்றிய அதே கூழைக்கடாக்கள் காடுமேடெல் லாம் அவனை அலைக்கழித்து, நாகம்மாவின் முன் வெறுங்கை யோடு செல்ல வைத்த அதே கூழைக்கடாக்கள், அவற்றை இன்று அவன் விடப்போவதில்லை விருத் தாசலத்தின் குறி தவறவில்லை. விர்ரென அவன் கரத்திலிருந்து புறப்பட்ட கூர்த்தடி சதக்கென கூழைக்கடாவின் மார்பில் பாய்ந் தது. அப்படியொரு மரண ஒலியை அவன் எப்போதும் கேட்கவில்லை." (வாடைக்காற்று பக்:104). இதே போன்று ஓடுகின்ற முயலையும் அதே கூர்த் தடி கொண்டு வேட்டையாடுகின்றான். நெடுந் தீவில் மழை காலங்களில் வேட்டை நாயின் துணையுடன் முயல் வேட்டையாடு வதும் கழிகளில் (நீர்நிலை) கண்ணி வைத்து கூழைக்கடா பிடிப்பதும் வழக்க மான செயல். கூர்த்தடி கொண்டு வேட்டை யாடுதல் என்பது நெடுந்தீவின் பயன்பாட்டில் இல்லாத ஒரு விடயமாகும்.

**போனிக் குதிரை**

நெடுந்தீவில் குதிரைகள் பற்றி ஆசிரியர் பின் வருமாறு குறிப்பிடுகின்றார். "தீவின் கரடு முரடான வண்டில் பாதைகளில் சிறுவர் முதல் வயோதிபர் வரை 'டக் டக்' என்ற ஒலி எழுப்பியவாறு குதிரைகளில் செல்வது இனிய காட்சிதான். ஒரு பழைய சாக்கினை மடித்துக் குதிரையின் முதுகில் போட்டிருப் பார்கள். ஒரு பலமான கம்பையோ, இரும் புக் கம்பியையோ குதிரையின் வாயில் கொடுத்து சேணமாக்கியிருப்பார்கள்." (வாடைக்காற்று பக்:18). இதன் மூலம் குதிரை என்பது பொதுமக்களின் போக்கு வரத்துச் சாதனமாக ஆக்கப்பட்டிருப்பதுடன், நெடுந்தீவு மக்கள் மேட்டுக்குடி மக்கள் என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். மேலும், இங்கு உள்ள குதிரைகள் வெளியி டங்களில் உள்ளவர்களுக்கு விற்கப்படு கின்றன என்ற கருத்தும் முன்வைக்கப்படு கிறது. "என்னுடைய குதிரையை யாழ்ப்பா ணத்து ஆள் ஒருவன் வந்து விலைக்குக் கேட்டான்....". "நல்ல விலை வந்தால் வித் திருக்கலாமே? காடெல்லாம் குதிரைதானே இருக்கு" என்றாள் அவள். விருட்டென விருத் தாசலம் திரும்பி அவளைப் பார்த்தான். "அதுக்கு நான் விசம் வைப்பேனே தவிர, பிறரிடம் விற்கமாட்டன்." (வாடைக்காற்று பக்:22) என்று கூறுகின்றான். நெடுந்தீவில் குதிரை விற்பனைப் பொருளாக ஒருபோதும் இருந்ததில்லை. அதுவும் சாதாரண ஒரு குடிமகன் குதிரையை விற்பது என்பது நடக் கின்ற காரியமில்லை என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயமாகும்.

**மொழிப்பிரயோகம்**

இப்பகுதி படைப்பு மொழி பற்றிய வாசிப்பாக அமையாது. மாறாக விவரிப்பு, பாத்திரங்க ளின் உரையாடல் என்பவற்றின் ஊடாக மொழி மண்வாசனை கொண்டதாக இருக் கின்றதா? என்பது பற்றிக் கவனம் செலுத்து கின்றது. பேச்சு மொழிதான் உயிர்த் துடிப் புள்ளது எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. பேச்சு மொழியின் தொனி, உச்சரிப்பு, மொழி வழக்குகள், இடக்கரடக் கல் என்பன பிரதேச அடிப்படையில் சாதிக் குழுமங்களின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படும். இந்த வேறுபாட்டை நெடுந்தீவு மக்கள் மத்தியில் தெளிவாகக் காணலாம். நெடுந்தீவின் மத்தி, மத்தி மேற்கு, மேற்கு, மத்தி வடக்கு இப்பகுதிகளில் வாழ்கின்ற மக் கள் பேசுகின்ற முறை, பேசும் தொனி, மொழி வழக்குகள் என்பனவற்றில் தெளி வான வேறுபாடு இருக்கின்றது. இந்த வேறு பாடு நாவலில் உன்னிப்பாக கவனிக்கப்பட வில்லை. நாவலில் இடம்பெறும் நெடுந்தீ வைச் சேர்ந்த பாத்திரங்கள் தமது இயல்பிலி ருந்து சில இடங்களில் அந்நியப்பட்டு நிற்கின் றன. உதாரணமாக: "ஒருநாள் நல்ல நிலையில் நான் திரும்பி வருவன் அப்பு.... பணம்.... பதவி.... செல்வாக்கு இவ்வளவை யும் சம்பாதித்துக் கொண்டுதான் நான் இனி இங்கு வருவன்....!" (வாடைக்காற்று பக்:99) இங்கு ஆசிரியர் திருத்தமான எழுத்து மொழியினைப் பயன்படுத்துவதனைக் காணலாம். சில இடங்களில் ஆசிரியர் தமக் குப் பரீட்சயமான பேச்சையே பயன்படுத்து கிறார். "என்ன தம்பி, ஏதோ கொழும்பாலே வந்ததுபோல ஊரப் புதினம் கேட்கிறீர்...." என்றான் கேலியாகச் சண்முகம். "உந்தக் கொழும்புக்கு ஒருக்கால் நான் போகாமல் விடவா போறன்..." (வாடைக்காற்று பக்:56) ஆசிரியர் பிரதேசத்தின் தனித்துவமான மொழிநடைக்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லையோ என்று எண்ணத் தோன்று கிறது.






**நாவலின் பின்னணி**

இதுவரை நாவல் பற்றி நோக்கிய விடயங்க ளிலிருந்து இந்நாவல் ஒரு இலக்கி யப் படைப்பை உருவாக்கத் தேவையான ஆழ்ந்த உழைப் பின் விளைவாக உருப்பெற வில்லை என்பது தெரிகிறது. இந்த நாவலில் இவ்வாறான தவறுகள் ஏன் ஏற்பட்டன என்பதை நாம் ஒரு வாறு ஊகித்துக்கொள்ள முடியும். தொடக்கத்தில் வெளியூர்களில் இருந்து வரும் மீனவர்கள் நெடுந் தீவின் மேற்குப் பகுதியில்தான் வாடியமைத்துத் தொழில் செய்த னர். வாடியமைப்பதில் இருந்து அவர்களின் சகல தேவைகளை யும் நெடுந்தீவின் உயர்சாதியி னரே மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில், நெடுந்தீவைச் சேர்ந்த உயர்சாதிப் பெண் மயிலிட் டியைச் சேர்ந்த சம்மாட்டியுடன் காதல் கொண்டு இருவரும் கள வில் தப்பிச் சென்று விடுகின்றனர். அதன் பிறகு நெடுந்தீவின் மேற்குப் பகுதியிலிருந்து துரத்தப் பட்ட மீன வர்கள் தீவின் தெற்குக் கரையில் தங்கியிருந்து தொழில் செய்ய ஆரம்பிக்கின்றனர். 1990 வரை இந்த நிலை தொடர்ந்து இருந்தது. செங்கை ஆழியான் இந்தக் காதல் கதையினைத்தான் தனது நாவ லின் கதையாகக் கொண்டுள்ளார். இங்கு அந்தச் சம்பவங்களை நேர டியாகக் கூறாது மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார். கதையில் சில மாற்றங்க ளைச் செய்கிறார். ஆனாலும், நாம் மேலே நோக்கிய விடயங்களை உற்று நோக்கும் போது நெடுந்தீவைக் களமாகக் கொண்டு ஒரு நாவலை உருவாக்கக்கூடிய ஆற்றல் அவரிடம் இல்லை என்று மனம் சந்தேகம் கொள்கிறது. அதேநேரம், இந்த நாவல் நெடுந்தீவுப் பெண்களை இழிவு செய்கிறது என "நெடுந்தீவு வாலிபர் இயக்கம்" மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கை யையும் நாம் இதற்கூடாகவே விளங் கிக்கொள்ள வேண்டும். இருந்தாலும் நெடுந்தீவின் புவியியல் அம்சங்கள், மொழிப் பிரயோகம், மரபு என்பவற் றினை உள்வாங்கிப் படைப்பை உரு வாக்க வேண்டும் என்ற ஆர்வம் ஆசிரி யருக்கு இல்லை என்பதும், சிமியோன் பிலோமினா காதல், மரியதாஸ்நாகம்மா காதல் இணைந்ததா அல்லது பிரிந்ததா என்ற புதிரை அவிழ்க்கும் முயற்சியில் தான் செங்கை ஆழியான் தனது ஆளு மையைப் பயன்படுத்தியிருக்கின்றார் என்பதும் வெளிப்படுகிறது.

**நாவல் பற்றிய மதிப்பீடுகள்**

இந்த நாவல் பற்றி உதிரியாக எழுதப்பட்ட சில கட்டுரைகள் கிடைத்துள்ளன. அவற்றில் இந்நாவல் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் சரியான மதிப்பீடாக அமைய வில்லை. அவை வெறும் வெற்றுப் புகழ்ச்சி யாகவே அமைந்துள்ளன. அதாவது, "யாழ்ப் பாணம் சார்ந்த தீவுப்பகுதிக் கிராமமொன் றின் (நெடுந்தீவு) வாழ்க்கை முறையை மண் மணமும், கடல் வளமும் கமழக் காட் டுவது வாடைக்காற்று" என்று நா.. சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார். (மல் லிகை1988 பக்:5.). ஆனால், அவர் குறிப் பிடும் இரண்டு வாசனையும் இந்நாவலில் வீசவில்லை என்பது, நாவலை வாசிக்கும் போது தெரிகின்றது. செங்கை ஆழியான் நெடுந்தீவின் மண் வாசனை பற்றிச் சொன்ன விடயங்களை விட சொல்லாது விட்ட விட யங்கள் தான் அதிகம். தெற்குக் கடற்கரை யில் ஒரு குறுகிய பிரதேசத்தில் நடக்கின்ற விடயமே நாவலில் உள்ளது. அதுவும் முழு மையாக இல்லை. இரசிகமணி கனக செந் திநாதன், "ஈழத்து இலக்கிய உலகில் ஈழத் துப் பூதந்தேவனார் தொடக்கம் செங்கை ஆழியான் வரை ஒரு இலக்கிய வரலாறு உண்டு. 'வாடைக்காற்று' என்ற அந்த நவீ னம் நாவல் துறையில் ஒரு மைல்கல்" என்று குறிப்பிடுகின்றார். (செங்கை ஆழியான் வாழ்வும் படைப்பும் 2007.பக்:65). இது எவ்வளவுக்கு உண்மை என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம். இந்நாவல் குறித்து செ.யோகராசா பின்வருமாறு குறிப்பிட்டுள் ளார். "வாடைக்காற்றில் நெடுந்தீவு மக்களது வாழ்வுக்கும் சுற்றாடலுக்குமிடையில் நெருங்கிய பிணைப்பைக் காணமுடிய வில்லை. குறிப்பிட்ட பிரதேச மொன்றில் பிறந்து வளர்ந்த ஒருவருக்கும் சுற்றுலா வுக்குச் சென்று சில வாரம் தங்கநேருமொ ருவருக்கும் இடையிலான வேறுபாடே இவ் விரு நாவல்கட்குமிடையிலான தாரதம்மிய மாகலாம். பல நாவலெழுதித் தேர்ந்த அனு பவமும், சரளமாகக் கதை பின்னும் திறமை யும், புவியியல் அறிவுமே வாடைக்காற்றாக வீசியுள்ளன. (அலை 1975.பக்:5) இவரு டைய கருத்தைத் தவிர ஏனைய கருத்துக் கள் காய்தல் உவத்தல் அற்ற வகையில் அமையவில்லை. படைப்பைக் கவனத்தில் எடுக்காமல் ஆசிரிய விம்பத்தை மையப்ப டுத்தி விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகவே படைப்பைப் போலவே விமர்சன மும் ஒரு வகையில் ஊனப்பட்டுள்ளது என்றே கூறத்தோன்றுகிறது.

செங்கை ஆழியானுடைய வாடைக்காற்று நாவல்பற்றி உதயன் பத்திரிகையின் புதன்பொய்கை பகுதியில் கடந்த வாரம் வெளிவந்தது. அதனை வாசித்த பின்னர், உதயன் பத்திரிகையின் ஆசிரியருக்கு அலைபேசியில் அழைப்பு எடுத்த கலாநிதி ச.குணராசாவின் துணைவியார் "சுமார் 40வருடங்களுக்குப் பின்னர் இவ்வாறு தனது கணவன் எழுதிய கதையை மீள்வாசிப்புச் செய் வதன் தேவை என்ன?" என்று கேள்வி எழுப்பினார். அத்தோடு அன்றைய காலச் சூழ்நிலை களச்சூழல் என்பன இன்று இருக்கக்கூடிய இளம் தலைமுறை எழுத்தாளர்களுக்கு தெரிவதற்கு வாய்ப்பில்லை எனவே அவர்கள் அதுபற்றி விமர்சிப்பது பொருத்தமற்றது என்றார்.
அத்தோடு செங்கை ஆழியான் மறைந்ததன் பின்னர் அவரது ஆக்கங்களை விமர்சனம் செய் வது தவறு என்றும் அவ்வாறு உதயன் விமர்சிக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். எல்லா வற்றுக்கும் மேலாக வாடைக்காற்று நாவல் மீதான மீள்வாசிப்பு அடுத்த வாரமும் (இந்த வாரம்) வெளிவரக்கூடாது. அப்படி வெளிவந்தால் உதயன் பத்திரிகை மீதும் அதன் நிர்வாகிகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்றும் அவர் எச்சரித்தார்.

**ஆசிரியர் குறிப்பு:**

1. எந்த ஒரு ஆக்கமும் நீண்ட காலத்துக்குப் பின்னர் மறு வாசிப்புக்கு உட்படுவது அதனை இளைய தலைமுறையினரிடம் எடுத்துச் செல்லும். அதிலும் இளையவர்களே அந்த நாவலை மறுவாசிப்புச் செய்யும்போது அதன்மீதான அவர்களின் ஆர்வம் மேலும் தூண்டப்படும் என் பதனாலேயே அந்த நாவலை மறுவாசிப்புக்கு உள்ளாக்க உதயன் இடமளித்தது. ஓர் இலக் கியவாதி, மறைந்த பின்னர் அவரது படைப்பை மறுவாசிப்புச் செய்வதோ விமர்சிப்பதோ கூடாது என்கிற வாதத்தை உதயன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.
2. இலக்கியப் பிரதிகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்தக் காலத்துக்கு ஏற்ப மறுவாசிப்புக்கு உள்ளாகிக்கொண்டே இருக்கின்றன. இது இலக்கியம் தோன்றிய காலம்தொட்டு இடம்பெற்று வரும் ஒரு தொடர்வினை. எனவே செங்கை ஆழியானின் வாடைக்காற்று நாவல் மீதான மீள்வாசிப்பையும் நிறுத்த வேண்டியது அவசியம் இல்லை என்று உதயன் கருதியதனால் அதன் தொடர்ச்சி இந்த வாரம் வெளியானது.
3. வாடைக்காற்று மீதான மீள்வாசிப்புக் குறித்து செங்கை ஆழியான் தரப்பில் இருந்தோ அல் லது வேறு எவரிடம் இருந்தோ விமர்சனங்கள் முன்வைக்கப்படும் இடத்து அவற்றையும் பரிசீலிக்க உதயன் தயாராகவே இருக்கிறான். கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்வ தும், விமர்சிப்பதும் நியாயமும் தர்மமும் எனவும் உதயன் எப்போதும் கருதுகிறான்.

## வரலாற்றில் இன்றைய தினம் 11.10.2017

1992- ஜே.வி.பி.யின் முக்கிய தளபதி கைதானார்.
1138- அலெப்போ நகரை மிகப்பெரிய நிலநடுக்கம் உலுக்கியது.
1727 - இரண்டாம்ஜோர்ஜ்மற்றும்கரோலின் ஆகியோர்பிரிட்டனின் அரசராகவும் அரசியாகவும் முடிசூடிக் கொண்டனர்.
1852 - ஆஸ்திரேலியாவின் மிகப் பழைமையான பல்கலைக்கழகமான சிட்னி பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
1910 - வானூர்தியில் பறந்த முதல் அமெரிக்க அரசதலைவரானார் ரூஸ்ட் வெல்ட்.
1984 - அமெரிக்க விண்வெளி வீராங்கனை கேத்லின் டி சுல்லிவன் விண்ணில் நடந்த முதல் பெண்மணியானார்.
1984 - ஏயரோ புளட் ருபெல்லோ யு-154 வானூர்தி ஓம்ஸ்க் வானூர்தி நிலையத்தில் தரையிறங்கும்போது விபத்துக்கு உள்ளானதில் 178 பேர் உயிரிழந்தனர்.
1992 - இலங்கையில் ஐந்திலொரு பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று யுனிசெப் அதிகாரி ஒருவர் தெரிவிப்பு.




# 'மலைத் தென்றல்'
## நூல் வெளியீடு

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்களால் 'மலைத்தென்றல்' எனும் நூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக மாணவர்களால் மலைத்தென்றல் எனும் தொனிப்பொருளில் கலைவிழா வருடாவருடம் வெகு கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இந்த வருடத்துக்கான விழா அண்மையில் நடைபெற்றது.

இதுவரை காலமும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்டமைந்து வெளிவந்த இந்த நூலானது இந்த வருடம் இலங்கையின் அனைத்துபல்கலைக்கழகதமிழ்மாணவர்களிடமிருந்தும் அவர்களது உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வண்ணமாக ஆக்கங்களை இணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்லாது மலைத்தென்றலை முன்னிட்டு முதன் முறையாக இலங்கை ரீதியான பாடசாலை மாணவர்களின் எழுத்து திறமையினை உலகறியச்செய்யும் நோக்குடன் 'கலைத்திரள்' எனும் கவிதை மற்றும் சிறுகதை போட்டிகள் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவற்றில் முதலிடம் பெற்ற ஆக்கங்களை மலைத்தென்றல் நூலுடன் இணைத்து வெளியிட்டிருந்தார்கள். இதன் மூலம் பாடசாலை மாணவர்களை அவர்களின் எதிர்கால பல்கலைக்கழக வாழ்க்கையுடன் ஒப்பிட்டு பார்க்கும் வண்ணம் இந்த முயற்சி அமைந்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அநேகமான ஆக்கங்கள் நூலின் பெயரிற்கு ஏற்றால் போல் மலையக மக்களின் வாழ்வியிலிலுள்ள நிறை குறைகளை கொண்டமைந்திருந்தமை மேலும் சிறப்பு.

இலக்கியச் சுவையும் கற்பனைத் திறனும் சமூக அக்கறையும் கொண்டமைந்த இந்த நூலானது மக்களின் வாழ்வைச் செம்மைப் படுத்தும் சீரிய தொண்டினை ஆற்றிச்செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# ஒரே ராசியில் பிறந்தவர்கள் திருமணம் செய்துகொள்ளலாமா?



பெற்றோர்கள், தங்களுடைய மகள் அல்லது மகனுக்குத் திருமணம் செய்ய எண்ணும்போது அவர்களின் மனதில் சில சந்தேகங்கள் தோன்றுகின்றன. அதாவது, எந்த நட்சத்திரத்தில் திருமணம் செய்யலாம்? எந்த எந்த நட்சத்திரம் திருமணத்துக்கு உகந்தது அல்ல.எந்த நட்சத்திரம் தம் பிள்ளைக்குப் பொருந்தும்? என்றெல்லாம் சந்தேகம் எழுவது இயற்கை.பொதுவாக ஜோதிட சாஸ்திரப்படி, எந்த நட்சத்திரங்கள் ஒரே நட்சத்திரமாக இருந்தால், திருமணம் செய்யலாம் என்றும் சில நட்சத்திரங்கள் திருமணம் செய்யக்கூடாது என்று பார்ப்போம்.

**இணைக்கக் கூடாத ஒரே நட்சத்திரங்கள்:**
பரணி, ஆயில்யம், ஸ்வாதி, கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள், மணமகள் மணமகன் ஆகிய இருவரினதும் நட்சத்திரங்களாக வந்தால், திருமணம் செய்யக்கூடாது. சிறிதுகூட பொருத்தம் இல்லை. இந்த நட்சத்திரக்காரர்களை இணைக்கக்கூடாது என்று நம்பப்படுகின்றது.

**இணைக்கக்கூடிய ஒரே நட்சத்திரங்கள்:**
ரோகிணி, திருவாதிரை.மகம், அஸ்தம், விசாகம், திருவோணம்,உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் மணமகன், மணமகளுக்கு ஒரே நட்சத்திரமாக வந்தால், திருமணம் செய்யலாம். இவை நல்ல பலன்களை கொடுக்கும்.

**மத்திம பலன்களை தரும் வகையில் இணைக்கக் கூடிய ஒரே நட்சத்திரங்கள்:**
அஸ்வினி, கிருத்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், பூரம், உத்திரம், சித்திரை, அனுஷம், பூராடம், உத்திராடம் ஆகிய நட்சத்திரங்களில் ஏதேனும் ஒன்று நட்சத்திரமாக வந்தால், திருமணம் செய்யலாம். ஆனால், மத்திமமான பொருத்தம்தான். மொத்தத்தில் திருமணம் செய்யலாம், பாதகம் இல்லை.

**பொருத்தம்**
பொருத்தமுள்ள ஒரே நட்சத்திரத்தை, சேர்ந்த மணமகள் மணமகன்களுக்கு திருமணம் செய்யும்போது நட்சத்திரத்தின் முந்தைய பாதம் ஆணுக்கும் அடுத்த பாதம் பெண்ணுக்கும் இருந்தால், திருமணம் செய்யலாம். உதாரணமாக, ரோகிணி நட்சத்திரம் என்றால், நட்சத்திரத்தின் முதல் பாதம் ஆணுக்கும் இரண்டு மூன்று நான்கு ஆகியவற்றில் ஏதாவதொரு பாதம் பெண்ணுக்கு இருப்பது நற்பலன்கள் கொடுக்கும்.

பெண் நட்சத்திரப் பாதம் முதலிலும் ஆண் நட்சத்திரப் பாதம் பிந்தியதாகவும் இருந்தால், திருமணம் செய்வது சிறப்பான பலன் இல்லை. உதாரணமாக, திருவாதிரை நட்சத்திரம் என்றால், திருவாதிரை நட்சத்திரத்தின் முதல் பாதம் பெண்ணுக்கும் இரண்டுமூன்றுநான்குபாதங்களில் ஏதாவதொரு பாதம் ஆணுக்கும் இருப்பது நற்பலன்களைக் கொடுக்காது.

**திருமணம்**
பொதுவாக, இருவரும் ஒரே நட்சத்திரமாக இருந்தாலும் சரி, ஒரே ராசியாக இருந்தாலும் சரி, மணமகன் மற்றும் மணமகள் இருவரையும் இணைப்பதைத் தவிர்ப்பது நல்லது. காரணம் என்னவென்றால், இவர்கள் இருவருக்கும் ஆயுளில் பாதகம் ஏற்படாது. பரஸ்பரம் அன்பு அதிகமாகவே இருக்கும்.


ஆனால், ஏனைய சௌகரியங்கள் குறையுடன் இருப்பதைக் காணலாம். ஒரே ராசியாகவோ ஒரே நட்சத்திரமாகவோ உள்ள தம்பதிக்கு, ஏழரைச் சனி, கண்டகச் சனி, அஷ்டமத்துச் சனி, அர்த்தாஷ்டமச்சனிவரும்போது இருவருக்கும் ஒன்றாகவே துன்பம் தரும். இதே போல குரு பகவானும் ஜென்ம குருவாகவும், அஷ்டம குருவாகவும் வரும்போதும் துன்பங்களையே தருவார்.

ஜாதகத்தில் நல்ல தசாபுக்தி நடைபெற்றால் பரவாயில்லை, மாறாக தசா புக்தியும் பாதகமாக வந்தால், அவர்களின் நிலை என்னவாகும் என்பதுதான் கேள்வி. ஆதலால், இருவரும் வேறு வேறு ராசிகளில் பிறந்திருந்தால் அவர்களை இணைத்தோமேயானால் அவர்களில் யாராவது ஒருவருக்கு ஏழரைச் சனி நடந்து மற்றவருக்கு ஏழரைச்சனி இல்லாமல் இருந்தால் நன்மையைத் தரும். அதாவது ஒருவருக்கு துன்பம் ஏற்பட்டு இருக்கும்போது மற்றவருக்கு இன்பம் இருக்குமாயின் துன்பம் ஏற்பட்டவருக்கு உறுதுணையாக உடன் இருந்து உதவிபுரிய உதவுகிறது. அப்படி இல்லாமல் இருவருக்கும் துன்பம் ஏற்பட்டு இருக்குமாயின் யார் யாருக்கு உதவ முடியும். மீண்டும் சோகத்தையே அந்த தம்பதி தழுவவேண்டியதுதான்.

## நாளை
## 12.10.2017
வியாழக்கிழமை

## புரட்டாதி 26

திதி: ஸப்தமி மு.ப. 10.35 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப. 01.02வரை
சுபநேரம்: 07.32–09.02 வரை
ராகுகாலம்: 01.32–03.02 வரை



# தாய்மை

## நல் வாழ்வுக்கான முதல்நிதி

செ.கயல்விழி

தமிழ்மொழி தொன்மை வாய்ந்த மொழி. திராவிட மொழிகளில் முதன்மையானதும் தமிழ்மொழியே. தமிழ்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் அந்தந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. தமிழில் முதன்மை இலக்கியமாக கருதப்படும் சங்க இலக்கியம் காதலையும் வீரத்தையும் இரண்டு கண்களாக கொண்டு இயற்றப்பட்டுள்ளன.

அது குறித்தும் பேசுகின்றன. அதற்கு அடுத்த காலக்கட்டத்தில் இயற்றப்பட்ட சங்க மருவிய கால இலக்கியங்கள் அறகருத்துகளை கூறும் நோக்கில் இயற்றப்பட்டுள்ளன. இந்நூல்கள் மனிதனை அறநெறியில் வாழ வழிகாட்டுகின்றன. இவை பதினெட்டு நூல்களைக் கொண்டவை. அவை அறநூல்கள் பதினொன்றும், அக நூல்கள் ஆறும், புறநூல் ஒன்றும் என அமைந்துள்ளன. அந்த வகையிலே அறநூல்களில் காணப்படும் தாய்மை எப்போதும் நோக்குதற்குரியது.

### அற நூல்கள்

திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக் காஞ்சி, சிறுபஞ்சமூலம், நான்மணிக்கடிகை, திரிகடும், ஏலாதி, ஆசாரக்கோவை எனத் தனித்துவம்பெறும் பதினொரு நூல்களும் அறநூல்கள் எனப்படுகின்றன.

### தாய்மை

தாய்மை என்பதற்கு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, "அருகுபோல் தழைத்து ஆல்போல் வேரூன்றி, பல்கிப் பெருகி வளவாழ்வு வாழ்வதற்கு மூலமாயுள்ள முதல்நிதி' என்று பொருள் தருகிறது. தாய் என்ற சொல்லுக்கு 'முதன்மை' என்று பொருள் தருகிறது கௌரா தமிழ் அகராதி. தமிழ் அகராதி அண்ணன்றேவி, 'அரசன்றேவி, ஊட்டுந்தாய், குருவிறேவி, கைத்தாய், செவிலித்தாய், தன்றேவயையின்றாள், நற்றாய், பாராட்டுந்தாய், மாதாவின் சகோதரி, முதல் முதற்றாம் முதன்மை' என்று பொருள் தருகிறது.

### தாய்மையின் சிறப்பு

மனித வாழ்வு உறவுகளால் சூழப்பட்ட நிலையில் அமைந்துள்ளது. இவற்றில் எல்லா உறவுகளும் சிறப்பு வாய்ந்தவையாக கருதப்படுகிறது. இருப்பினும் தாயின் உறவு என்பது தனிச் சிறப்பு வாய்ந்தது. அதனை அற இலக்கியம் பதிவுச் செய்துள்ளது.

**"என் செயினும்**
**தாயின் சிறந்த தமரில்லை"** ( நான். 35:12)

என்ற வரிகளின் ஊடே தவறு செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய தாயை விடச் சிறந்த உறவு வேறில்லை என நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது.

ஒரு தாய் தன் குழந்தையை நன்முறையில் வளர்க்க எண்ணுவதால் குழந்தை தவறு செய்யும் போது அடிக்கின்றாள். இருப்பினும் குழந்தை தாயை நோக்கியே செல்லும் இதுவும் தாய்மைக்கு இருக்கும் தனிச்சிறப்பாகும். இதனை,

**"குழவி அலைப்பினும்**
**அன்னே என்றோடும் சிலைப்பினும்"** (நான். 25.12)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

இக்கருத்தையை குறுந்தொகையும்,

**"நனைமுதிர்**
**தாய்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு**
**அன்னாய் என்னும் குழவி"** (குறுந்.397)

என்று குறிப்பிடுகிறது.

### தாய் குறிக்கும் சொற்கள்

ஒரு சொல் பல பொருள் குறிப்பதைப் போன்று, பல சொற்கள் ஒரு பொருளைக் குறிக்க கூடியதாக தமிழ்மொழியில் சொற்கள் அமைந்துள்ளன. தாயைக் குறிக்கக் கூடிய வகையில் தமிழில் பல சொற்கள் அமைந்துள்ளன. முதன்மை இலக்கியமாக கருதப்படும் சங்க இலக்கியத்தில் ஆய், ஞாய், அன்னை, நற்றாய், ஈன்றாள் என்ற பெயரில் தாய் அழைக்கப்பட்டிருக்கிறாள். அதே போல் அற இலக்கியங்களிலும் தாயானவள் ஈன்றாள், அன்னை என்ற பெயரில் அழைக்கப்பட்டிருக்கிறாள்.

### தாய்ப்பாலின் சிறப்பு

தாய்ப்பாலே ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு அடிப்படை தேவை என்றால் அது மிகையாகாது. குழந்தை உடல் அளவிலும், மன அளவிலும் சிறப்பானதொரு வளர்ச்சியை அடைவது தாய்ப்பாலின் மூலமே. தாய்ப்பால் இல்லாமல் வளரும் குழந்தைகள் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமல் வளர்கின்றன என்று ஆய்வுகள் வெளியாகி உள்ளன.

**"வயிறாத் தாய்முலை யுண்ணாக் குழவியும்**
**நல்குரவு சேரபட்டார்"** (திரி.84:12)

என்ற வரிகள் வயிறு நிரம்பப் பால் அருந்தாத குழந்தைகள் வறுமையில் வாடுவதாக குறிப்பிட்டுள்ளது. தாய் குழந்தையை அழைத்து பாலூட்டுவது தாயின் கடமையாக கூறப்பட்டுள்ளது. இதனைப் பழமொழி நானூறு கூறும்.

**"மலைத்தழு துண்ணாக் குழவியைத் தாயர்**
**அலைத்துப்பால் பெய்து விடல்"** (பழ.363)

என்னும் வரிகள் உணர்த்துகின்றது.

இக்கருத்திற்கு வலுசேர்க்கும் விதமாக,

**"உண்ண உண்ண தெவிட்டாதே - அம்மை**
**உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்''**

என்ற பாரதியாரின் பாடல் அமைகிறது.

### குழந்தைக்கு உணவூட்டல்

ஒரு குழந்தைக்கு உணவு ஊட்டுவதில் தாய்க்கு நிகரானவர் எவரும் இல்லை. அதுவே உண்மை. இதனை பழமொழி நானூறு, குழந்தை உணவு உண்ண மறுக்கும் போது சந்திரனை காட்டியும், விளையாட்டு காட்டியும் தாய் உணவு ஊட்டுவாள் என்பதை,

**"வறிதுரைத்துப்**
**ஒள்ளியகாட் டாளர்க் கரிது"** (பழ.264:24)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

### தாயின் துயரம் நீங்கல்

ஒரு பெண் தான் கருவுற்றிருக்கும் காலத்தில் உடலால் பல துன்பங்களை அடைகின்றாள். ஆனால் குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையின் மழலை முகம் பார்த்து தன் துன்பத்தை மறந்துவிடுகின்றாள் தாய் இதனை,

**"வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்**
**கவாஅன் மகற்கண்டுதாய்மறந்தா அங்கு"** (நாலடி.201:12)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

ஆக, குடும்ப வாழ்க்கை சிறக்க குழந்தைச் செல்வம் இன்றியமையாத பேறு. தாய்மையின் பண்பு தெய்வத்தின் அருள் நிலை தரும் கூறு. உணர்ந்து கொள்வோம். தாய்மையின் அழகைப் போற்றிக் களிப்போம்.

7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 21 . 01 . 1949
ஆண்டவன் அடியில் 30 . 09 . 2010

அமரர் Dr.K.V. துரைராஜா (அகஸ்தியர்)
(ஓய்வுபெற்ற சுகாதார முகாமைத்துவ உதவியாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை. ஸ்தாபகர் உரிமையாளர் (அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம்)
திதி: ஸப்தமி (11.10.2017)

எங்கள் குலவிளக்காய் விளங்கிய அன்புத் தெய்வமே!
அப்பா நீங்கள் இல்லாத இந்த உலகத்தில் எப்படி வாழ்வதென்றே
எங்களால் சொல்ல முடியவில்லை. நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டது. எத்தனை ஆண்டுகள் போனாலும்
உங்களை நாங்கள் ஒருபோதும் மறவோம் எப்பொழுதும் எந்நேரமும்
உங்கள் ஆத்மாவை கண்ணீரால் நானும்
உங்களது அன்புச் செல்வங்களும் துதிக்கின்றோம்
அப்பா உங்களுடைய ஆத்மா சாந்தியடையவேண்டும் என்று
சுட்டி வேரகத்து அம்பாளை மனதார வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 17 . 05 . 1983
ஆண்டவன் அடியில் 27 . 09 . 2014

அமரர் Dr.T. கோபிநாத் (J.P).
(உரிமையாளர் - அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம் - சித்த ஆயுள் வேத வைத்தியர்)
திதி: திருதியை (22.09.2017)

எங்கள் அன்பான குலவிளக்கே என் செல்வமே மகனே கோபி
எங்கள் அண்ணாவே என் தம்பியே எங்கள் பாசமான மாமாவே
உங்களை எங்களால் எப்படி மறக்கமுடியும் லக்சுமி கரமான நீங்கள் என்று எங்கள்
இல்லத்தில் இருந்து போனீர்களோஅன்றே எங்கள் இல்லமும் களையிழந்து விட்டது
உனது அன்பான பேச்சை இனிமேல் நாங்கள் எங்கே கேட்பது
உனது சிரித்த முகத்தை எப்போது பார்ப்பது என்ன வெல்லாம் கனவுகண்டாய்
உனது கனவுகள் நிறைவேறமுன்பே ஆண்டவன் இந்தப் பூமியை விட்டே
உன்னை அனுப்பிவிட்டானே எவ்வளவு வேதனை எத்தனை துன்பங்கள்
தாங்கமுடியாமல் தாங்குகின்றோம் ஐயா கோபி
உனது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று சுட்டிவேரகத்து அம்பாளை
மனதார வேண்டுகின்றோம் . உனது ஆத்மா சாந்தியடையட்டும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

பிராமனோடை
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
077 865 5539

குடும்பத்தினர்.

# இலக்கியங்கள் பேணும் மாதர் கண்கள்

இரா.நிஷாந்தன்

இலக்கியம்என்பதுமனிதன்வாழ வழி சமைப்பது. உள்ளத்தில் அமிர்தத்துக்கு இணையான இன்பத்தைக்கொடுப்பது இலக்கியம் கொண்டுள்ள தனிச்சிறப்பு. எனினும் காலத்தின் தேவைகள் மாற்றங்கள் என்பன இலக்கியங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதன் காரணமாக காலந்தோறும் இலக்கிய வடிவங்கள் மாற்றம் பெற்றுள்ளன. அந்த வகையில் சங்க இலக்கியங்களில் பெண்கள் போற்றப்பட்டிருக்க பின்வந்த சங்கமருவிய கால அற இலக்கியங்களில் பெண்கள் பெரிதும் பழித்துரைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவ்விலக்கியங்கள் பெண்களை, பெண்ணின் அழகை கீழ்மைப்படுத்தியுள்ளன.

எனினும் பொதுவாகப் பெண் சார்ந்த, உலகியல் சார்ந்த இலக்கியப் படைப்புக்களில்பெண்களின்கண்களேபெரிதும் இடம்பிடித்திருக்கின்றன.



### இலக்கிய வர்ணனைகளில் கண்பெறும் க(உ)ரு

இலக்கியத்தில் பெண்கள் பலவாறாக வர்ணிக்கப்படுகின்றனர். பெண்கள் பற்றிய வர்ணிப்பில் தனிச்சிறப்பு பெறுவது கண்கள். மனித உடலில் உள்ள அனைத்து உறுப்புக்களும் சிறப்பு வாய்ந்தவையே. ஆனாலும் கண்களுக்கான மதிப்பு அதிகமாகவே காணப்படுகின்றன. 'கண்ணில்சிறந்த உறுப்பில்லை' என்கிறது 'நான்மணிக்கடிகை' எனும் இலக்கியம். கண்களைப் புகழாத கவிஞனும் இல்லை, கண்களை புகழாத காதலனும் இல்லை. ஒரு குழந்தையைத் தாலாட்டும் தாய் கூட, 'கண்மணியே என் கண்ணே துயில் கொள்வாய்' எனப்பாடுகின்றாள். இதுவே ஓர் காதலன் காதலியை 'என் கண்ணே' என்றும்,காதலி காதலனை 'கண்ணாளனே' என்றும் அழைப்பார்.



குறிப்பாகக் காதலில் வாய் பேசுவதைக் காட்டிலும் கண் பேசும் வார்த்தைகள் அற்புதமானவை. காதலில் கண்களின் பங்கு அதிகமாகவே உள்ளது. ஆக கண்கள் அதிலும் மங்கையர் கண்கள் இலக்கிய சிறப்பு மிக்கவை என்பதில் ஐயமில்லை. அதுவும் புலவர்கள் சாதாரணமான கண்ணையே தம் கவியாற்றலால் நயம் மிக்கதாக மாற்றி விடுகின்றனர்.

மங்கையர் கண்களை இலக்கிய புலவர்கள் பலவாறு வர்ணிக்கின்றனர். வேல் போன்ற கண்கள், மலர் போன்ற கண்கள், வாள்போன்றகண்கள், மழைநீர்போன்ற கண்கள், மீன் போன்ற கண்கள், தூண்டில்போன்ற கண்கள், மான் விழி போன்ற கண்கள் என அந்த வர்ணனைகளின் பட்டியல் நீண்டு செல்லும். இவற்றில் உள்ள நயத்தை நோக்கும் போதே மங்கையர் கண்களின் சிறப்பு எவ்வாறானது என நாம் அறியலாம். கற்பனை எனும் போதும் எங்களுடைய மனதிற்கும், இரசனைக்கும் விருந்தளிப்பனவாக அவை அமைவுறுகின்றன என்பதில் ஐயமில்லையே. இலக்கியங்கள் காட்டும் காரிகையர் கண் அழகு பற்றி இனிக் காண்போம்.

### பால காண்டத்தில் சீதையின் விழி கொண்ட மேன்மை

கம்பராமாயணத்தில் பால காண்டத்தில் சீதைமாடத்தில்நிற்கும்அழகினைக்கம்பர் அழகுற கவி வடிக்கின்றான். அதில் சீதையின் விழி அழகு பற்றி நயம்படப் பாடுகின்றான்.

"வென்று அம் மானை தார்
அயில் வேலும் கொலை வாளும்
பின்ற மானப் பேர் கயல்
அஞ்ச பிறழ் கண்ணாள்
குன்றம் ஆட கோவின் அளிக்கும் கடல் அன்றி
அன்று அம் மாடத்து உம்பர் அளிக்கும்
அமுது ஒத்தாள்..!

என்கிறார்கம்பர். அதாவது, கண் அழகுக்கு புலவர்கள் உவமை காட்டும் மானைத் தன்பார்வையால்வென்று, கூரிய வேலும், கொலைக்களத்தில் சிறப்புற்ற வாளும் மின்னிடும் படியாக, பெண்களுக்கு உவமையாக வேறு சில புலவர்கள் கூறும் பெரியகயல்மீன்களும்அஞ்சிப்பின்நிற்க, பிறழும் அழகிய கண்களைக் கொண்ட சீதை அமுதத்தை ஒத்தவளாக மாடத்தில் நின்றாள் என்கிறார்.

இது மட்டுன்றி மற்றுமொரு பாட்லும் சீதையின் கண் அழகினைப் பறைசாற்றும் பாடலாக அமைவதைக் காணலாம்.

"கொல்லும் வேலும் கூற்றமும் என்னும்
இவை எல்லாம் வெல்லும் வெல்லும்
என்ன மதர்க்கும் விழி கொண்டாள்"

என அதாவது, கொலைக்களத்தில் பொலிவு பெற்ற கூரிய வேலும், கொடிய இயமனும் ஏனைய அனைத்தையும் வெற்றி கொள்ளக் கூடிய அழகிய கண்களைக் கொண்டவள் சீதை என வர்ணிக்கின்றார் கம்பர்.

### நாலடியாரில் கண் பெறும் அலங்காரம்

உயர்ந்த மாடமொன்றில் மங்கையொருத்தி நிற்கின்றாள். அவளது அழகிய கண்களை மீன் எனக் கருதிய மீன்கொத்திப் பறவையொன்று விரைவாகப் பறந்து அவள் அருகே சென்று அவளது வில் போன்ற புருவங்களைக் கண்டு பயம் கொள்கிறது. மீன் போன்ற அக் கண்களைக் கொத்தாது திரும்பி சென்று விடுகிறது. என்ன ஒரு கற்பனை.

"கண்கயல் என்னுங் கருத்தினால் காதலி
பின்சென்றது அம்ம சிறுசிரல்; பின்சென்றும்
ஊக்கி யெழுந்தும் எறிகல்லா ஒண்புருவங்
கோட்டிய வில்வாக் கறிந்து!

என்கிறது நாலடியார் பாடல்.

### சீதையின் கண் அலங்காரம் காணும் கம்பர்

கம்பர் காட்டும் காட்சி இது. இராமன் வில்லை முறித்ததும் சீதையை அலங்காரம் செய்து அழைத்து வரும்படி பணிப் பெண்களுக்கு ஜனகர் கட்டளையிடுகின்றார். அதன்படி பணிப்பெண்கள்சீதையை அழைத்துச்சென்று பலவிதமாக அலங்காரம் செய்கின்றனர். இறுதியில் சீதையின் அழகிய கண்களுக்கு மை இடுகின்றனர். அப்போது அக்கண்கள் நஞ்சை நடுவில் வைத்து சுற்றிலும் அமுதத்தை வைத்து ஆக்கப்பட்டவை போன்று காட்சியளித்தன என்கிறார் அவர். மேலும் மழை போலக் குளிர்ச்சி பொருந்திய சீதையின் கண்களில் தாம் இட்டது அஞ்சன வண்ணத்தையா..? அல்லது இராமனின்மேனிநிறத்தையா..? எனத் தெளிவாக கூறமுடியாது தோழியர் தடுமாற்றம் கொண்டனர்.

"நஞ்சினோடு அமுதம் கூட்டி
நாட்டங்கள்
ஆன என்ன
செஞ்செவே நீண்டு மீண்டு
சேயரி சிதறி தீய
வஞ்சமும் களவும் இன்றி மழை என
மதர்த்த கண்கள்
அஞ்சன நிறமோ? அண்ணல் வண்ணமோ?
அறிதல் தேற்றாம்!

இங்கு கம்பர் ஏன் கண்களை மழை நீருக்கு உவமித்தார் எனும் வினா எழலாம். கண்கள் குளிர்ச்சி பொருந்தியவை என்பதையே அவை காட்டி நிற்கின்றன. மழை நீரும்குளிர்ச்சிமிக்கதுஎனவேகண்களுக்கு அவை உவமையாவது பொருத்தமே.

### அசுரக் கண்ணில் அழகு காணல்

கம்பராமாயணத்தில் மற்றுமொரு இடத்தில் இராமனை அடையும் பொருட்டு அழகிய பெண் உருவம் ஏற்று வந்த சூர்ப்பனகையின் கண் அழகினை அழகுறக் காட்டுகின்றார்.

"கானில் உயர் கற்பகம் உயிர்த்த கதிர் வல்லி
மேனி நனி பெற்று விளை காமம் நிறை வாசத்
தேனின் மொழி உற்று இனிய
செவ்வி நனி பெற்று
ஓர் மானின் விழி பெற்று மயில் வந்தது! எனக் குறிப்பிடுகின்றார்.

இங்கு சூர்ப்பனகையின் விழி அழகினை நயமுறப் பாடுகின்றார் கம்பர். ஓர் மானின் இருகண்களைப்பெற்றுஓர்அழகியமயில் நடந்துவந்ததைப்போலசூர்ப்பனகையும் இராமனைநெருங்கிவந்தாள்எனக்குறிப்பிடுகின் றார். உலகிலே அழகிய கண்களைக் கொண்டிருப்பது மான் ஆகும். அது போல நடை அழகுக்கு பெயர் பெற்றன. அன்னமும் மயிலுமாகும். அத்தகைய மயில் ஒன்று மானின் கண்களை பெற்று நடந்து வந்தால் அவ் அழகை வர்ணிக்க முடியாது. இதனையே கம்பர் காட்டி நிற்கின்றார்.

### விவேகசிந்தாமணியில் சுடர்விடும் கண்ணழகு

பெண்களின்கண்கள்பற்றியவர்ணிப்பை விவேகசிந்தாமணி எனும்பல்சுவை இலக்கியம் பல பாடல்களில் குறிப்பிடுகின்றது. ஓர் மங்கையின் அழகிய கண்கள் காமதேவன் மன்மதனையே தடுமாறச் செய்கின்றனவாம். மன்மதன் காதலுக்கு அதிபதி. பெண்களை காதலில் விழ வைப்பதே அவன் வேலை. அவனை வெல்வதென்பதும் இயலாத காரியம். அவன் மலர் அம்புகளுக்கு இலக்கானால் மீட்சியில்லை. ஆனால் ஒரு பெண்ணின் கண்கள் குழப்பத்தை உண்டாக்கும் என்பதை அறிந்த மன்மதன் தன் மலரம்புகள் ஐந்தையும் அவள் முன் வைத்து அவளைப் பணிந்து வணங்கினானாம். அதுவும் அப் பெண்ணுடைய கண்கள் வாள் போன்ற ஒளிபொருந்திய கண்கள். அழகிய திலகம் தரித்த நெற்றியை உடையவள். அப்படியெனில் அக் கண்களை மன்மதனின் மலர் அம்பினால் சமாளிக்க முடியாது தான். அப் பாடல் பின்வருமாறு அமைகிறது.

"அலகு வாள்விழி
ஆயிழை நன் நுதல்
திலகம் கொண்டு எதிர்
செஞ்சிலை மாரனும்
கலகமே செய்யும் கண்
இதுவாம்..!

### வள்ளுவம் காணும் கண் இயல் உறவு

மங்கையின் கண்கள் உயிர் பறிக்கும் எமனோ, அல்லது பார்வை செலுத்தும் கண்களோ, அல்லது மிரளும் மானோ அல்லது இவை மூன்றும் ஒன்று சேர்ந்ததோஎனஒருதலைவன்வருந்துகின்றான். இதனையும் வள்ளுவர் தன் குறளில்,

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து" எனக் காட்டுகின்றார்.

மேலும், அவளின் மை இடப்பட்ட கண்களின் பார்வைக்கு இரு நோக்கங்கள் உள்ளன என்கிறார். ஒன்று என்னை நோய் வாய்ப்படுத்தும் பார்வை, மற்றையது அந்தநோய்க்கானமருந்துதரும்பார்வை. இதனை தன் குறட் பாக்களில் வள்ளுவர் குறிப்பிடும் போது

"இருநோக்கு இவளுண்கண்
உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

என்கிறார். இவ்வாறாக எம் தமிழ் இலக்கியங்களில் உயர்வு பெறும் பெண்களின் அழகு வர்ணிப்பில் முதன்மை பெறுவன அவர்களின்கண்கள்என்பதுபுலனாகிறது.



அத்தகைய மங்கையர் கண்களின் எழிலை நம் இலக்கியங்களில் அதிகமான இடங்களில் காணமுடிகிறது. அவற்றில் சிறு துளிகளை நாம் இங்கு பருகியுள்ளோம்.

இவற்றை நாம் நயத்துடனும் இரசனையுடனும் படிக்கும் போது மனதில் மகிழ்ச்சி அலைகள் வீசும். சிந்தனை உலைகள் அற்புதமாய் வார்த்தைகளைச் சமைக்கும். நல் இலக்கணமாய் என்றும் சுவை தரும்.

# கார்ட்டிகோடிராப்பின் சுரப்பு

## குடிப்பழக்கத்தை நீக்கும்

உலகம் முழுவதும் மதுசாரப்பாவனை மோசமான விளைவுகளை ஏற்படுத்திவருகிறது. இவ்விதம் மதுப்பாவனைக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்க விஞ்ஞான ரீதியாக பல்வேறு ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகின்றனர். அமெரிக்காவின் வடக்கு கரோலினா பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சியில், குடிப்பதற்கு காரணமானவை என்று மனித மூளையின் இரண்டு பகுதிக்கு இடையே செல்லும் நரம்பு பகுதியை கண்டறிந்துள்ளனர்.




மூளையின் நடுவில் நீட்டிக்கப்பட்ட 'அமிக்டாலா' மற்றும் கீழ்ப்புற 'tegmental' பகுதி கள் குடிப்பழக்கதை கட்டுப்படுத்தும் செயற்பாட்டுச் சுற்று (functional circuit) என கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளுக்கு இடையே செல்லும் நரம்பில் 'கார்ட்டிகோடிராப்பின்' சுரக்கிறது. அதன் சுரக்கும் அளவை சரி செய்வதன் மூலம் குடிப்பழக்கதை சரி செய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பாக ஆராய்ச்சியாளர் 'டொட் தைலே' (Todd Thiele) கூறுகையில், "இரண்டு மூளை பகுதிகளில் செல்லும் நரம்பு பகுதியே குடிப்பதை தூண்டுவதை கண்டுபிடித்துள்ளோ ம். அந்தப்பகுதியை கட்டுப்படுத்துவதன் மூலம் குடிப்பழக்கத்தை கட்டுப்படுத்த முடியும். இது ஒரு முக்கியமான கண்டுகொள்ளல்.இதன் மூலம் மதுசாரப் பயன்பாட்டு சீர்குலைவுகளை சீராக்க மாற்று வழிமுறைகளை கண்டறிவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறோம்" என்றுள்ளார்.

ஒரு எண்ணெய்! ஆரோக்கியமான பல நன்மைகள்!!!
✓ முடி உதிர்வு, பொடுகுத் தொல்லையா?
✓ கருமையான நீண்ட கூந்தல் வேண்டுமா?
✓ முகத்தில் கரும்புள்ளி, கருவளையமா?
✓ முகப்பருவா?
✓ தோல் சுருக்கமா?
✓ உதடு, குதிக்கால் வெடிப்பா?
✓ உடற்பருமன், Cholesterol Blood Sugar இதய நோய் பிரச்சினையா?
Royal
இன்றே பாவியுங்கள்!!!
"றோயல் ஓர்கானிக் வேர்ஜின் தேங்காய் எண்ணெய்"
- 100% Natural
- Cold Pressed
- No Refining
- No Bleaching
Re- Packed By: Royal Industry Colombo - 13
சந்தைப்படுத்துவோர்
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
021 222 2567

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
### மானிப்பாய் கிராம உப அலுவலகம் - ஆனைக்கோட்டை
### ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் : 14
ஆதன இல : 11
வீதி : கல்வளை 03 ஆம் ஒழுங்கை
கிராமசேவையாளர் பிரிவு : J/142 சண்டிலிப்பாய்.

வட்டாரம் 14, கல்வளை 03 ஆம் ஒழுங்கை, ஆதன இல 11 இல் அமைந்துள்ள ஆதனம். உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை "தவசிவளவு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 08 கொண்ட இவ்வாதனம் கல்வளை வீதி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த பொன்னர் கந்தையா பெண் பூமணி ஆகிய இவர்களால் தமது மகன் கந்தையா தேவராசா அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு. பொ.சுந்தரலிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 2606 ஆம் இலக்க 20.10.2009 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் எழுதப்பட்டுள்ளது. இவ் உறுதியின் 218 ஆம் இலக்க 1988.11.06 ஆம் திகதிய தாயுறுதி சண்டிலிப்பாயைச் சேர்ந்த முத்துக்குமாரு பரமானந்தம் பொன் வள்ளியம்மை அவர்களால் பிரசித்த நொத்தாரிஸ் திரு. இ.நடேசன் அவர்களால் எழுதப்பட்ட அறுதி உறுதி மூலம் 50 வருடங்களுக்கு மேற்பட்ட ஆட்சி என வெளிப்படுத்தி காணப்படுகின்றது. இவ்வாதனத்தினை எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.A.கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 2016/5/81 ஆம் இலக்க 2016.11.08 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "தவசிவளவு" நிலப்பரப்பு 01 குளி 09 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத்திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா தேவராசா என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். குறித்த பெயர்மாற்றம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படின் அதற்கு வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை பொறுப்பேற்காது என்பதை அறியத்தருகின்றேன்.



செயலாளர்,
வலி தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

### ஆதன பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வலிகாமம் தெற்கு பிரதேசசபை உப அலுவலகம், ஏழாலை வட்டாரம் - 06, புளியங்கிணற்றடி புன்னாலைக்கட்டுவன் வீதி, ஆதன இலக்கம் 105/19, ஏழாலை மத்தி, தோப்பு

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் - 06, புளியங்கிணற்றடி புன்னாலைக்கட்டுவன் வீதி, ஆதன இலக்கம் - 105/19 அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனவரிப்பதிவேட்டில் S.இராசகாரி எனும் பெயரில் உள்ளது.

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோயிற்பற்று ஏழாலை இறை, கிராமசேவகர் பிரிவு J/206 ஏழாலை மத்தி, தோப்பு எனும் முகவரியில் உள்ள சிங்களவன்சீமா எனும் பெயர் கொண்ட உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களால் 2003.09.15 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 775 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனச்சுட்டப்பட்ட நிலப்பரப்பு பூச்சியம் குழி 10.24 ஊம் வீடும் தென்கிழக்குப் பக்கமாகவுள்ள கிணற்றிலும் தூர்வையிலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும் கொண்ட ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு ஜெ.ஜெயரூபன் எழுதிய 2008.08.15 ஆம் திகதிய 119 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் குணரத்தினம் கைம்பெண் சறோஜினி தேவி என்பவரிற்குரியதென வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த வெளிப்படுத்தல் உறுதியில் குறிப்பிட்ட ஆதனமானது ஆதியில் எனது தந்தையார் செல்லப்பா இராசகாரியின் சொந்தமும் ஆட்சியுமாக இருந்தது என்றும் அவர் இவ்வாதனத்தை எனக்கும் கோப்பாயைச் சேர்ந்த செல்லத்துரை குணரத்தினத்திற்கும் இடையே 1973 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்ற போது எனக்கு வாய்மொழி சீதனமாக வழங்கியிருந்தார் என்றும் அன்று முதல் இன்றுவரை கடந்த முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக இவ்வாதனத்தை நானே தொடர்ச்சியாகவும் முறிவின்றியும் 'எவரது தலையீடுமின்றியும் ஆண்டு அனுபவித்து வருகின்றேன். இதனால் நானே இவ்வாதனத்தின் சொந்தக்காரியும், உரிமைக்காரியும் என்றும் குணரத்தினம் கைம்பெண் சரோஜினிதேவி என்பவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்தில் வரிமதிப்பீட்டுப் பதிவேட்டில் வட்டாரம் - 06, புளியங்கிணற்றடி புன்னாலைக்கட்டுவன் வீதி, ஆதன இலக்கம் 105/19 இல் S.இராசகாரி எனும் பெயரில் உள்ள ஆதனத்தினை குணரத்தினம் கைம்பெண் சறோஜினிதேவி எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு கு.சறோஜினிதேவி விண்ணப்பித்துள்ளார்.

எனவே மேற்குறித்த ஆதனத்தினை குணரத்தினம் கைம்பெண் சறோஜினி தேவி எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது குணரத்தினம் கைம்பெண் சறோஜினிதேவி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எப்பொறுப்புக்களிற்கும் விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

11.10.2017







## பூமிக்குச் சமமான கோள்கள் கண்டறிவு


பூமியைப் போலவே அளவு மற்றும் பாறைகள் நிறைந்த 550 கோள்களை நாசா நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. 'கெப்ளர்' என்னும் விண்வெளித் தொலைநோக்கியின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி இவ்வாறான கோள்கள் இனங்காணப் பட்டுள்ளன.



சூரிய மண்டலத்தை விட்டுத் தொலைவில் பயணிக்கும் ஆயிரத்து 284 புதிய கோள்களை தொலைநோக்கியின் உதவியுடன் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அதேவேளை பூமியை ஒத்த அளவுடையதும் மிக அருகில், உள்ளதுமான கோள்கள் பூமியை விட்டு 11 ஒளி ஆண்டுகள் தொலைவில் காணப்படும் தகவலும் தெரியவந்துள்ளது. அத்துடன் 9.5 ரில்லியன் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கோள்களின் பயணத்தை அவதானிக்கப் போதியளவு வசதியுடைய விண்கலங்கள் இதுவரை கண்டு பிடிக்கப்பட வில்லையெனவும் நாசா நிறுவனம் தெரிவித்துள்ளது.

# 'நடுமடிப்பு'

## உடலில் மறைந்திருக்கும் புதிய உறுப்பு



உடற்கூற்றியல் வரலாற்றில் அண்ணளவாக 100 ஆண்டுகளாக மனித உடலில் மறைந்திருந்த புதிய உறுப்பு ஒன்றை அயர்லாந்தைச் சேர்ந்த உடற்கூற்றியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மனித உடலின் குடல் பகுதியை வயிற்றுடன் இணைக்கும் "நடுமடிப்பு" (Mesentery) இத்தனை காலமாக பல்வேறு திசுக்கள் ஒன்றிணைந்த ஒரு அமைப்பாகவே கருதப்பட்டு வந்தது.

இந்தநிலையில் அயர்லாந்தை சேர்ந்த லிமெரிக் பல்கலைக்கழகத்தின் 'ஜெ.கேல்வின் காப்பே' என்ற ஆராய்ச்சியாளர் வயிற்றின் நடுமடிப்பு பகுதியானது தொடர்ச்சியான உள்கட்டமைப்பினை கொண்டதொரு தனிஉறுப்பு என கண்டுபிடித்து அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏனைய உறுப்புகளைப் போல் இதனை அணுகும் போது இந்த உறுப்புத் தொடர்பான நோய்களை வகைப்படுத்தி அவற்றை குணப்படுத்துவது எப்படி என்ற ரீதியில் அடுத்தகட்ட ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடலில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'நடுமடிப்பு' என்ற இந்த உறுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள தொடர்ச்சியான ஆய்வுகளின் முடிவுக்கேற்ப இந்தப் புதிய உறுப்பின் இயக்கம் குறித்து இன்னும் அதிகமான தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

இதன் இயக்கம் குறித்த தகவல்களை அறிந்து கொள்ளும்பட்சத்தில் வயிறு மற்றும் குடல் பகுதி சார்ந்து பல்வேறு நோய்களை எளிமையாகக் குணப்படுத்த முடியும் என ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# தவளைத் தோல்

## புற்றுநோய், இருதய நோய்களை குணப்படுத்தும் மருந்து

மனிதர்களுக்கு ஏற்படும் புற்றுநோய், இருதய நோய்களை குணப்படுத்துவதற்கான பொருளாக தவளையின் தோலை மருத்துவ ஆய்வுகளில் பயன்படுத்தி வருவதான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தவகையிலே அவை பற்றிய தேடல் முக்கியம் பெறுகிறது. மனித இனம் தோன்றுவதற்கு முன்பாகவே பூமியில் தவளைகள் தோன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தவளைகளில் மொத்தமாக ஆறாயிரத்திற்கும் அதிகமான இனங்கள் இருக்கின்றன. அத்துடன் இவை பூகம்பம் வருவதை முன் கூட்டியே அறிந்துகொள்ளும் திறமை கொண்டவை. இவைதவிர தவளைகள் நிலத்தில் அல்லது நீர் நிலைகளில் குழிகள் அமைத்து அல்லது பாறைகளின் இடுக்குகளில் வாழ்வதனை அவதானித்திருக்கிறோம். ஆனாலும் ஒரு

(27ஆம் பக்கம் பார்க்க)

**பணியாளர் தேவை**

கடைகளில் பில் போட்ட அனுபவம் உள்ளவர்களும், பொருள்கள் ஏற்றி, இறக்க கூடியவர்களும் தேவை.

தொடர்பு : 077 357 3095

**வேலைவாய்ப்பு**

பிரபல Hotel Restourant நிறுவனம் ஒன்றுக்குப் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

01. Room Boy
02. சமையல்காரர்

☑ யாழ்ப்பாணம் ☑ கிளிநொச்சி ☑ முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தங்குமிடம் இலவசம்

071 976 6672

## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**இராசரத்தினம் இரத்தினவேல்**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர். கச்சேரி - யாழ்ப்பாணம்)

தோற்றம் 05.09.1927

மறைவு 12.10.2006

திதி: அபரபக்கசஷ்டி (11.10.2017)

கற்பகப் பிள்ளையார் காலடியே சரணென்று
பொற்புதனை மறந்தே புகழுடலில் வாழ்பவரே
ஆண்டு பல கடந்தாலும் நீங்காதுநும் நினைவு
நேசமுடன் எமை வளர்த்த அப்பாவே. எம்உயிரே.
உங்கள் ஆன்மா சாந்திபெற ஐங்கரன் தாள் பணிகின்றோம்.

அரச வீதி,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 20. கலீபா அப்துல்காதர் வீதி. ஆதன இல.86 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் முகம்மது அப்துல்காதர் முகம்மது மீரான் மொகிதீன் பெண் முகம்மது சரீபா என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

01.05.2008 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு A.இராஜரட்ணம் முகதாவில் 4542 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியில் யாழ்ப்பாணம். நாவாந்துறை. நாவலர் வீதியைச் சேர்ந்த இல.44. திருமதி மொகமட் சரீபா மீரான் மொகதீன் என்பவர் இவ்வாதனமானது பிரசித்த நொத்தாரிசு M.M.M. மன்சூர் முகதாவில் 1898/ 1982.12.10 நிறைவேறிய அறுதியால் முகமட் மீராப்பிள்ளை ஹாஜியார் முகமட் அப்துல்லா ஆகியவருக்கு (குளி 17.5) சொந்தமும் ஆட்சியுமாயிருந்து இதனை அதே நொத்தாரிசு முகதாவில் 2073/1983.09.10 ஆம் இலக்க ஈட்டு உறுதியால் தனக்குக் கட்டுப்படுத்தியிருந்தாரென்றும். 1990ஆம் ஆண்டு மீள முடியாத நிலையில் தனக்கு குறித்த நொத்தாரிசு முகதாவில் 1899/1982.12.10 ஆம் இலக்க உறுதி மூலம் தனது மகள் முகமட் அப்துல் காதர் மீரான் மொகதீன் மகள் ஆரியாவுக்கு (குளி 14) நன்கொடையாக கையளித்திருந்தார் என்றும் குறித்த சித்தி ஆரிபா 1990ஆம் ஆண்டு குறித்த நொத்தாரிசு முன்பாக மீளவும் தமக்கு நன்கொடையாக கையளித்து நன்கொடை உறுதியும் நிறைவேற்றி இருந்தார் என்றும் உறுதிகள் யாவும் 1990ஆம் ஆண்டு இடப்பெயர்வு நிமித்தம் குறித்த நொத்தாரிசு மூலப்பிரதியோ இணைப்பிரதியோ சமர்ப்பிக்கப்படாத நிலைமையைத் தேடுதல் மூலம் அறிய முடிந்ததென்றும். குறித்த அறுதி. உறுதி. நன்கொடை உறுதிகள் மூலம் மொத்தமாக நில.பர.1.3/4 இற்கு தாம் சொந்தமும் இடையறா ஆட்சியுடையதுமாகுமென வெளிப்படுத்தியுள்ளதுடன் தனது மகள் தற்காலம் மதவாச்சி கட்டு வெல டெல் வெலவில் வசிக்கும் தனது மகள் மீரான் மொகதீன் ஜாஜிஸ் மொகமட்டுக்கு 4542 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நன்கொடையாக வழங்கியுள்ளார். 01.05.2008 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு A.இராஜரட்ணம் முகதாவில் 4543/2008.05.01 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப் படுத்திய அறுதி உறுதியால் மேற்குறித்த மீரான் மொகதீன் ஜாஜிஸ் முகமட். யாழ்ப்பாணம். நாவாந்துறை நாவலர் வீதி இல.71/16 ஐச் சேர்ந்த ஆனந்தராசா அன்ரன் ஜெய்கிஷனும். முத்துராசா ஆனந்தராசாவும் பெண் ஜெயசீலியும் ஆகியோருக்கு அறுதியாக விற்றுள்ளார். மேலும் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் நிறைவேறிய 7700/2017.08.17ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் நாவலர் வீதி 86ஐச் சேர்ந்த ஆனந்தராசா அன்ரன் ஜெய்கிஷனும் முத்துராசாவும் பெண் சிசிலியம்மாவும் சேர்ந்து 4543/2008.05.01 இலக்க உறுதியில் தங்களின் 3ஆம் பேரின் பெயர் "ஜெயசீலி" எனத் தவறுதலாக குறிப்பிட்டுள்ளதென்றும் "சிசிலியம்மா" என இருத்தல் வேண்டும் என்றும் திருத்தம் செய்து வெளிப்படுத்தியுள்ளார்கள்.

**ஆதன விவரம்** :- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணம் பகுதி. வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று. வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை புளியடி இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆ.செல்வராஜா அவர்களின் வரைபட இல. 325/2017.07.25 இல் துண்டு 01 எனக் காட்டப்பட்ட நில பர.01. குளி -14.26 ஆகும். இதற்கு எல்லை கிழக்கு - ஸ்ரீபன் கிறேஸ்மேரியின் ஆதனம். வடக்கு - கலீபா அப்துல்காதர் வீதி. மேற்கு - சேகு அப்துல்காதர் நாச்சியாவின் ஆதனம். தெற்கு - முகமட் சுல்தான் முகமட் யூசுப்பின் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை ஆனந்தராசா அன்ரன் ஜெய்கிஷனும். முத்துராசா ஆனந்தராசாவும் பெண் சிசிலியம்மாவும் தாங்களது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ் ஆதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்துக்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஆனந்தராசா அன்ரன் ஜெய்கிஷனும். முத்துராசா ஆனந்தராசாவும் பெண் சிசிலியம்மாவும் என்பவர்களது பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றது.

**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 19. மொகிடீன் பள்ளிவாசல் வீதி. ஆதன இல.50/1 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் யூசுப் முகமது இஸ்மயில் தர்ஸா உம்மா என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

மொகமட். இஸ்மயில் நபீசா. இல.28. மெகடீன் பள்ளிவாசல் வீதி. யாழ்ப்பாணத்தையும். தற்பொழுது இல.76/1 கொற்றாவத்தை வீதி. கொற்றாவத்தை. பாணாந்துறையைச் சேர்ந்தவரும் (2) உமர் முசாமில் 58/7 கமால் ஒழுங்கை. யாழ்ப்பாணம். தற்பொழுது அரபா நகர் தில்லையடி புத்தளத்தைச் சேர்ந்தவர்களாகிய இவர்களால் குறித்த ஆதனத்துக்கு 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரசித்த நொத்தாரிசு M.M மன்சூர் முகதாவிழல் அறுதி உறுதி நிறைவேற்றப்பட்டதென்றும் காணிப்பதிவகம் அக்காலப்பகுதியில் சரியாக இயங்காததால் பதியப்படவில்லை எனவும் 1990 இடப்பெயர்வில் சகல ஆவணங்களையும் இழந்துள்ளதாக வெளிப்படுத்திய பிரசித்த நொத்தாரிசு M.M.M ரமீஸ் முகதாவில் நிறைவேறிய 438/2003.12.16 இலக்க அறுதி உறுதியின் மூலம் நிலப்பரப்பு 1 குளி 14.75 இல் 2/3 பங்கையும் அதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி இல 442/2003.12.21 மூலம் மிகுதி 1/3 பங்கையும். 113 கலீபா அப்துல் காதர் வீதி. யாழ்ப்பாணம் தற்போது இலக்கம் 3 கிறகரி பிளேஸ் தெகிவளை கொழும்பைச் சேர்ந்த மமுனா லெப்பை செய்யது அமீருக்கு அறுதியாகவழங்கப்பட்டது. பிரசித்த நொத்தாரிசு A. இராஜரட்ணம் முகதாவில் நிறைவேறிய 3208/2005.07.12 இலக்க அறுதி உறுதி மூலம் மமுனா லெப்பை செய்யட் அமீரும் பெண் றபீக்காவும் யாழ்ப்பாணம் தென்மராட்சி மீசாலை தெற்கு கிட்டினன் இராஜேந்திரகுமாரும் பெண் சுரேக்காவுக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர்.

**ஆதன விவரம்** - வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி. வண்ணார் பண்ணை கோவிற்பற்று. வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "காரயன்கனி" இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் மு.திருஞானசம்பந்தர் அவர்களின் வரைபட இலக்கம் 1299/1989.04.22 இல் துண்டு - 1 எனக் காட்டப்பட்ட நில.பர.1 குளி 14.75 ஆகும். இதற்கு எல்லை

வடக்கு :- வரிமதிப்பு எண் 54 கலீபா அப்துல் காதர் வீதியில் உள்ள வீடும். கலீபா அப்துல் காதர் வீதியும்
கிழக்கு :- மொகதீன் பள்ளிவாசல் வீதி வரிமதிப்பு எண் -24ம். லைலா மொகதீனுக்கும் கரிமா அஸ்ரப்புக்கும் உரிய ஆதனம்.
தெற்கு - மொகதீன் பள்ளிவாசல் வீதி. வரிமதிப்பு எண் -24ம் , லைலா மொகதீனுக்கும் கரிமா அஸ்ரப்புக்கும் உரிய ஆதனமும் 7 1/2 அடி அகலமான தனிப்பட்ட பாதையும்
மேற்கு:- மொகதீன் பள்ளிவாசல் வீதி வரிமதிப்பு எண் - 24ம். லைலா மொகதீனுக்கும் கரிமா அஸ்ரப்புக்கும் உரிய ஆதனமும் மொகதீன் பள்ளிவாசல் வீதியும்.

தற்போது இவ்வாதனத்தை கிட்டினன் இராஜேந்திரகுமாரும் பெண் சுரேக்காவும் தங்களது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்துக்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கிட்டினன் இராஜேந்திரகுமாரும் பெண் சுரேக்காவும் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர், மாநகரசபை.**

**பதவி வெற்றிடம்**

அருள்மிகு ஆஞ்சநேயர் ஆலயம் புதிதாக நிர்ணயிக்கப்படவுள்ளதால் ஆலய கட்டட நிதி சேகரிப்பதற்காக பணியாளர்கள் வடமாகாணம் பூராகவும் தேவை. இவ் அறப்பணியில் இணைய விரும்புகின்றவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 478 0960

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

**சுப்பிரமணியம் இராமச்சந்திரன்**

(உரிமையாளர்- குட்டி பல்பொருள் வாணிபம் - நவற்கிரி)

மண்ணில் 07.03.1967

விண்ணில் 11.09.2017



அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமாய் வாழ்ந்து
எமை அவனியிலே வாழ்வாங்கு
வாழவைத்த தெய்வமே!
நித்தமும் உங்களது
ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 11.09.2017 இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (11.10.2017) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவக்கிரி, புத்தூர்.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 15 . 08 . 1948

மறைவு 12 . 09 . 2017



**மூத்தையா கனகசபை**

எமது அன்புத்தெய்வத்தின் மரணச்சடங்கில் பங்குபற்றி உதவிகள் புரிந்தவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (12.10.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பாட்டி,ஊர்காவற்றுறை. 078 356 7443 குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**திருமதி மனோன்மணி வைத்திலிங்கம்**

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி வைத்திலிங்கம் கடந்த (09.10.2017) திங்கட்கிழமை காமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான சங்கரப்பிள்ளை வைத்தியலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெயவீர் (MRICS, PQS, CBuildE கனடா), மனோகரி (லண்டன்), சுமதி (கனடா), சுகந்தி, சங்கர்ராஜ் (ஆசிரியர் யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், ஊரெழு கணேசா வித்தியாலயம் பகுதி நேரம்) காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுஜாத்தா, இந்துவர்மன், சபேசன், விஜயவதனி ஆகியோரின் அன்பு மாமியும் ஷசாந், தர்சி, சுதர்மன், கேர்மன், பிரவீனா, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2017) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

077 800 9661

## தவளைத் தோல்...

தவளை இனம் கூடு கட்டி வாழ்கிறது. தென் இந்தியாவிலே இவ்வகை தவளை இனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவை அதியசப்படும் விதமாக புற்களினாலான கூடுகளை அமைத்து வாழ்வதான தகவல்கள் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளன.

அதேவேளை தென் ஆப்பிரிக்கா காட்டுப் பகுதிகளில் வாழும் சில தவளை இனங்கள் எலியை விட மிக வேகமாக ஓடும் திறமை பெற்று இருப்பதாகவும் தொடர்ச்சியாக ஐந்து மாதங்கள் வரை உறங்கும் திறமை கொண்டவையாக இவை காணப்படும் என்ற தகவல்களும் ஆய்வின் மூலம் வெளிப்பட்டுள்ளன. மேலும் ஐந்து மாதங்கள் தொடர்ச்சியாக உறங்கு நிலையில் இருக்கும் போது தமக்கான உணவுத் தேவையை சுவாசிப்பதன் மூலம் சரி செய்து கொள்வதாகவும் மேற்படி ஆய்வுகள் தெரியப்படுத்தியுள்ளன.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த
திரு.திருமதி பாலேந்திரா சியாமளா தம்பதிகளின்
செல்வப்புதல்வர்களான
**பா. ஸ்ரீராம்–பா. ஸ்ரீஹரி** ஆகியோர்
யா/வல்வை அ.மி.த.க பாடசாலையில்
தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி
ஸ்ரீராம் 164, ஸ்ரீஹரி 166
புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளமையை
பாராட்டுவதோடு அவர்கள் மேன்மேலும் சிறந்த பெறுபேறு-
களைப் பெற்றுயர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர்: தாத்தா, அம்மம்மா, பெரியப்பா,
பெரியம்மா, ஆதிரன் (தம்பி), ஆதிரை (தங்கை)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி
வித்தியாசாலை மாணவச் செல்வன்
**கிருஷ்ணகுமார்**
**மதுசன்**
2017 தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் 165 புள்ளிகளைப்
பெற்று மாவட்ட நிலை 592 இல்
சித்தியடைந்துள்ளார். இவரையும்
இவரை
வழிப்படுத்திய அதிபர்
செ.இராமநாதன் அவர்களையும்
கற்பித்த ஆசிரியர் திருமதி வாசுகி
தயானந்தன்
அவர்களையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
பாடசாலை சமூகம்,
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ஜெரண்சன் ஜெமிஸ்ரன்**
குருநகர் சென்றோக்ஸ் முன்பள்ளியில்
பாலர் கல்வி கற்று குருநகர்
சென்ஜேம்ஸ் ஆண்கள்
பாசாலையில் கல்வி கற்று
2017 ஆம் ஆண்டு தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில் 155
புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டிய
மாணவன்
ஜெரண்சன் ஜெமிஸ்ரனை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அத்துடன் கற்பித்த ஆசிரியர்
செல்வி கௌசியா கைலாசபிள்ளை
அவர்களையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:-
சித்தியம்மா (முன்பள்ளி ஆசிரியர்)
மி.மரியநாயகி (செல்வி)
45, புதிய கடற்கரை வீதி, குருநகர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சி.சிறிஅபிராம்**
(ஹாட்லிக் கல்லூரி – தரம் 8)
யா/கரணவாய் தாமோதரா வித்தியாலயம்
2014 ஆம் ஆண்டு பெற்ற புள்ளி - 155



**சி.சிறிமதுராம்**
(ஹாட்லிக் கல்லூரி – தரம் 6)
யா/கரணவாய் தாமோதரா வித்தியாலயம்
2016 ஆம் ஆண்டு பெற்ற புள்ளி - 162



**சி.சிறிஅகில்ராம்**
(தரம் 5)
யா/கரணவாய் தாமோதரா வித்தியாலயம்
2017 ஆம் ஆண்டு பெற்ற புள்ளி - 160

யா/ கரணவாய் தாமோதரா வித்தியாலய மாணவன்
**செல்வன் சிறிகாந்தராசா சிறிஅகில்ராம்**
2017 ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததையிட்டும்
நாளை (12.10.2017) வியாழக்கிழமை பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுவதையிட்டும் அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்தும்
அப்பா - சிறிஸ்காந்தராசா (பிள்ளையார் பல்பொருள் வாணிபம்)
அம்மா மஞ்சுளா (ஓய்வு பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)
மாமா, அத்தை, சித்தப்பாமார், சித்திமார், அத்தான்மார்,
மச்சாள்மார், தாத்தா, அம்மம்மா
ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற எமது மூன்று முத்துக்களையும் மேலும் பல்கலையும் கற்றுப்பட்டங்கள்
பல பெற்று மென்மேலும் உயர இலந்தை சிவன் அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.
இவருக்கு கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்
அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இலந்தைக்காடு, வல்வெட்டித்துறை.

**சி.பி.ஐ. கேள்விக்குக் கூடப் பதில் சொல்லிடலாம் ஆனா...**




**பொண்டாட்டி கேட்கிற கேள்விக்கு சி.பி.ஐ.யா இருந்தாலும் பதில் சொல்ல முடியாது.**

**சலூன்ல விராட்கோக்லி மாதிரி வெட்டி விடுடான்னு சொல்லிட்டு தூங்கி எழுந்து பார்த்தா...**





**பிராய்லர் கோழி மாதிரி வெட்டி விட்டிருக்கான்....**




சினிமா

# மாரி-2 படத்தில் கிருஷ்ணா



பாலாஜி மோகன் இயக்கத்தில் தனுஷ் நடிக்க இருக்கும் 'மாரி 2' படத்தில் சாய் பல்லவியைத் தொடர்ந்து ஒப்பந்தமாகியுள்ளார் நடிகர் கிருஷ்ணா.

பாலாஜி மோகன் இயக்கத்தில் தனுஷ் நடித்த 'மாரி' படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்புப் பெற்றது. இதன் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாம் பாகத்தை எடுக்கவுள்ளார் இருக்கிறார் பாலாஜி மோகன். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு சமீபத்தில் வெளியானது.

மாரி-2 படத்தில், தனுஷ்க்கு ஜோடியாக சாய் பல்லவி ஒப்பந்தமாகியுள்ளார். வில்லனாக டோவினோ தோமஸ் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தின் இதர கதாபாத்திரங்கள் தெரிவு விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் நிலையில், கிருஷ்ணாவும் மாரி-2 படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். (ம)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தினர் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.

**இடபம்:** மதிநுட்பத்துடன் செயல்பட்டு சோதனைகளை வெல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் பெருகும். மக்கள் மத்தியில் அந்தஸ்து உயரும்.

**மிதுனம்:** திட்டமிட்டபடி செயல்கள் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கடகம்:** அடுத்தவர் விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். குடும்பத் தேவை ஓரளவு பூர்த்தியாகும். இலாபம் சுமாராக இருக்கும். நண்பரால் உதவி உண்டு.

**சிங்கம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். பெண்களுக்கு உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** கடந்த கால நற்செயலுக்கான நற்பலன் தேடிவரும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு அதிகரிக்கும். பணக்கடனில் பெரும்பகுதி அடைபடும்.

**துலாம்:** சிரமம் குறுக்கிட்டாலும் முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் போட்டியை எதிர்கொள்வீர்கள். இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். வருமானம் உயரும்.


**தனுசு:** யாருக்கும் தேவையற்ற வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது.

**மகரம்:** சமயோசிதமாக செயல்பட்டு முன்னேறுவீர்கள். குடும்பத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும்.

**கும்பம்:** குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சி கண்டு மற்றவர் வியப்படைவர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவர்.

**மீனம்:** பெருந்தன்மையுடன் நடந்து சுய கவுரவம் பாதுகாப்பீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் சீராக இருக்கும்.

## காலமாற்றம்






ஒரு பையன் அவன் வாயில் கதவில் எழுதினான்.

plz dont enter, I'm upset.

(உள்ளே வர வேண்டாம் நான் இயல்பு நிலையில் இல்லை.)

காதலி பார்த்துவிட்டு திரும்பிப் போனாள்.
பெற்றோர் பார்த்தாங்க. அவங்களும் திரும்பப் போனாங்க...
நண்பர்கள் பார்த்துட்டுச் சிரிச்ச முகத்தோட உள்ள போய் கேட்டாங்க...

"என்ன மச்சி என்னமோ இங்லீஷ்ல எழுதியிருக்க? எங்கள விட்டுட்டு ஸ்போக்கன் இங்கிலீஷ் கிளாஸ் போற போல...."

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 8 | | | |
| | 5 | | | 4 | | | 9 | |
| 6 | | 3 | | | | 5 | | 2 |
| | | 5 | | | | | | 8 |
| | 1 | | | 7 | | | 4 | |
| 2 | | | | | | 6 | | |
| 3 | | 8 | | | | 1 | | 6 |
| | 9 | | | 5 | | | 7 | |
| | | | 1 | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 6 | 5 | 3 | 1 | 4 | 9 | 7 |
| 1 | 9 | 3 | 7 | 4 | 2 | 8 | 6 | 5 |
| 5 | 7 | 4 | 8 | 6 | 9 | 2 | 3 | 1 |
| 6 | 5 | 8 | 3 | 2 | 7 | 9 | 1 | 4 |
| 7 | 1 | 9 | 4 | 8 | 5 | 6 | 2 | 3 |
| 3 | 4 | 2 | 9 | 1 | 6 | 7 | 5 | 8 |
| 8 | 6 | 5 | 1 | 9 | 4 | 3 | 7 | 2 |
| 4 | 2 | 7 | 6 | 5 | 3 | 1 | 8 | 9 |
| 9 | 3 | 1 | 2 | 7 | 8 | 5 | 4 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

## வெள்ளியன்று...

அனைத்து விடயங்களிலும் அரசுக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள். நாடாளுமன்றச் செயற்பாடுகள் அனைத்திலும் அரசை நியாயப்படுத்தி ஆதரிக்கின்றார்கள்.

ஆதரவுக்கான பிரதியீடாகத்தன்னும் உறுதியான தளம்பலற்ற வார்த்தைகளால் பேசி சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அவர்களால் முடியும். உறவுகள் சிறைகளில் வாடினாலும் பரவாயில்லை, தாம் அரசைச் சங்கடப்படுத்தக்கூடாது என்பதற்காகவும், அரசுடனான தமது உறவுகள் பாதிப்புறக் கூடாது என்பதற்காகவும், மென்மையாகப் பேசி எமது பிரதிநிதிகள் காலத்தைக் கடத்தி வருகின்றார்கள்.

தமது வழக்குகளை மீண்டும் தமிழ்ப் பகுதி நீதிமன்றங்களுக்கு மாற்றவேண்டும் என்ற உடனடிக் கோரிக்கையையும், அவ்வாறு மாற்றப்பட்டதன் பின்பு, தமது வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவு காணவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து, அநுராதபுரம் சிறையில் காலவரையறையற்ற உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் கோரிக்கைகளை இழுத்தடிப்பின்றி உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும், முழுத் தமிழ் அரசியற் கைதிகளையும் ஓர் அரசியற் தீர்மானத்தினூடாக விடுவிக்குமாறு அரசை வலியுறுத்தியும், அசமந்தப் போக்கைக் கைவிட்டும் மழுப்பல் பதில்களை வழங்காமலும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கான நேரடி அழுத்தத்தினை அரசுக்கு வழங்குமாறு எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளை வற்புறுத்தியும், எதிர்வரும் சனிக்கிழமை, யாழ்ப்பாணம் வருகைதரவிருக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, தாமதமற்றதீர்வு காண வேண்டிய இந்த விவகாரத்தின் தீவிரத் தன்மையை உணர்த்துவதற்குமாக, நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வடக்கு மாகாணம் முழுவதும் முழு அடைப்புப் போராட்டத்தை மேற்கொள்ள தமிழ் மக்களை உரிமையுடன் அழைக்கின்றோம்.

அவசர மருத்துவ சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துச் செயற்பாடுகளையும் முழுமனதோடு நிறுத்தி நியாயத்தோடும் சாவோடும் போராடுகின்ற தமிழ் அரசியற் கைதிகளுக்கு எமது ஆத்மபலத்தைக் கொடுப்போம்.

தமிழ் அரசியற் கைதிகளுக்கு நிரந்தர விடுதலை கிடைக்கும்வரை நாம் ஓயமாட்டோம் என்ற செய்தியை இந்த நாட்டின் அரசுக்கும், எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கும், இதன் பொறுப்புடைய ஒவ்வொரு தரப்புக்கும் உறுதியாகத் தெரிவிக்க நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு, வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக அணி திரள்வோம் என்றுள்ளது.

தமிழ் மக்கள் பேரவை, யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, வடமாகாண புதிய அதிபர் சங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம், சமூக விஞ்ஞாக ஆய்வு மையம், கிராமிய உழைப்பாளர் சங்கம், சமூக நீதிக்கான வெகுசன அமைப்பு, தமிழ் மக்கள் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழு, யாழ்ப்பாண பொருளியலாளர் சங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, புதிய சன்நாயக மாக்சிச லெனினிசக் கட்சி, சனநாயக மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் சிவில் சமூக அமையம், தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை சைவ மகா சபை ஆகிய 19 அமைப்புக்களுமே முழு அடைப்புப் போராட்டதுக்கான அழைப்பை விடுத்துள்ளன. (உ-5)

## புதிய...

தொடர்பில் மகிந்த அணியினர் கூறும் அனைத்துக் கருத்துக்களுமே பொய்யாகும். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு பொய்யைச் சொல்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி புதிய அரசமைப்புக்கு ஆதரவா அல்லது எதிர்ப்பா என்பது இப்போது முக்கியம் இல்லை. நாம் அனைவருமே புதிய அரசமைப்புக் குறித்து ஆராய்ந்துவிட்டோம்.

பன்னாட்டுத் தேவைக்காக அரசமைப்பு உருவாக்கப்படுவதாகவும், தனி நாடு கொடுக்கப்போவதாகவும் இவர்கள் கூறும் கதைகள் அனைத்துமே பொய்யானவையாகும்.

மகிந்த அணியினர் இனவாத அரசியலின் ஒரு துரும்பாக அரசமைப்பு விடயத்தை கையில் எடுத்துள்ளனர். புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதில் ஒரு சிலருக்கு மட்டுமே சிக்கல் எழுந்துள்ளது. அவர்களே குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

புதிய அரசமைப்புக் குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு தெரிவிக்கப்படும். நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்குவதாயின் நாம் புதிய அரசமைப்பை ஆதரிக்கத் தயார் - என்றார். (உ-5,31)

## அமைச்சர் மனோ...

தார் என அமைச்சர் மனோகணேசன் தனது ஊடக அறிக் கையில் கூறியுள்ளார்.

அநுராதபுரம் சிறையில் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத் துள்ள மூன்று தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் அரச தலைவருடன் நேற்று அவர் பேச்சு நடத்தினார் என்று தெரிவித்து, மனோகணேசன் இந்த ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் தொ[illegible]விக்கப்பட்டிருப்பதாவது:

இந்த விவகாரம் ப[illegible]றி அரச தலைவரிடம் விளக்கிக் கூறினேன். இந்த வழக்கின் சாட்சிகள், வவுனியாவில் த[illegible]ங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற காரண[illegible]தை காட்டியுள்ளனர். இதைக் காரணமாகக் கொண்டே வழக்குகள் வவுனியா நீதிமன்றத்தில் இருந்து அநுராதபுர நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிகிறேன். சட்டமா அதிபர் திணைக்களத்தின் இந்த முடிவு நியாயமானது அல்ல. சாட்சிகளின் தேவையைக் கருதி வழக்குகள் இடம் மாற்றப்படுவது ஏற்புடையதல்ல. இன்று போர் முடிந்த நிலையில் நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் எவரும் சென்று வரக்கூடிய நிலையில், சட்டமாஅதிபர் இத்தகைய முடிவை எடுத்திருப்பது தமிழ் மக்களுக்குத் தவறான செய்தியையே தருகிறது.

இதற்குப் பதில் வழங்கிய அரச தலைவர், இது பற்றி நான் அறியவில்லை. சாட்சிகளின் தேவையை கருதி வழக்குகள் இடம் மாற்றப்படுவது ஏற்புடையதல்ல என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். இதுபற்றி சட்டமாஅதிபரிடம் விளக்கம் கோரி தீர்வு காண்பார் என உறுதியளித்துள்ளார் என்று அமைச்சரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-5)

## இனிப்பு...

நிலைகொண்டுள்ள படையினரால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இதன்போது பேராட்டகாரரான ஆறுமுகம் படையினரிடம் கேள்விக் கணைகளைத் தொடுத்தார். " "எப்போது எங்கள் இடங்களை விடுவீர்கள்?" என்றார். பதிலளித்த படையினர், "மிகவும் கஷ்டப்பட்டு உங்கள் வாழ் இடங்களில் இருந்த எங்களது முகாம்களை அகற்றிவருகின்றோம். நாங்கள் மறு இடத்தில் முகாம்அமைத்துவருகின்றோம். அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதில் படையினர் அதிகளவில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார்கள்" என்றனர். ""எங்கள் வாழ்விடங்கள் அனைத்தையும் விடுவிப்பீர்களா?" என அவர் மீண்டும் படையினரைக் கேட்டார். இதற்கு பதிலளித்த படையினர் "கேப்பாபிலவுப் பாடசாலை படையினரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். உங்களுக்கான மாற்றுப் பாடசாலை மாதிரிகிராமத்தில் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் கோரியுள்ள 111 ஏக்கர் நிலப்பரப்பைத்தான் முதற்கட்டமாக விடுவதற்கு நாங்கள் முயற்சி எடுத்துவருகின்றோம்" என்றனர். படையினருடைய இந்தப் பதில் போராடும் மக்களிடத்தில் விசனத்தை ஏற்படுத்தியது. (உ-21,ரி3)

## வகுப்புக்கு...

அறிக்கையில் (வரவு செலவுத் திட்டம்) இந்த முன்மொழிவைச் சேர்த்துக்கொள்வதற்குத் திட்டமிடப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

"பாடசாலைக்கு சமூகமளிக்கும் நாள் ஒன்றுக்கு மாணவன் ஒருவனுக்கு100 ரூபா வீதம் மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவது குறித்து ஆராயப்படுகின்றது" என்று அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலைக்குச் செல்லாமல் 4 லட்சத்து 52 ஆயிரத்து 661 பேர் உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவர்களில் 51 ஆயிரத்து 249பேர் இதுவரை பாடசாலைக்கே சென்றதில்லை என்றும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இதனையடுத்தே மேற்படி யோசனை முன்மொழியப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

"இது தேர்தலை நோக்கிய யோசனை. மாணவர் வரவுக்கு நூறு ரூபா என்பது அவசியமற்றது" என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் குற்றம் சுமத்தினார். (உ-5)

## செஞ்சிலுவை...

உடல் நிலை குறித்து ஆராய்ந்த னர்.

தமிழ் அரசியல் கைதிகள் மூவர் கடந்த 16 நாள்களாக அநுராதபுரம் சிறைச்சாலை யில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் இருவர் சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், மூன்று அரசியல் கைதிகளையும் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மருத்துவர்கள் சந்தித்துள்ளனர். (உ-5)

## யாழ்ப்பாணத்துக்கும்...

இதன்போது நுளம்புக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அனோபினிஸ்செற்பினிஸ் வகை நுளம்புகளும் அதன் குடம்பிகளுமே அவை என்று உறுதி செய்யப்பட்டது.

அந்தச் சூழல் முழுமையாக மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதுவரை 19 கிணறுகள் இனங்காணப்பட்டுள்ளதனால் சிறப்பு வேலைத்திட்டத்துக்குத் திட்டமிடப்படுகின்றது. நகரின் மத்தியில் இருந்து 2 கிலோ மீற்றர் சுற்று வட்டத்தில் உள்ள அத்தனை கிணறுகளும் உடனடியாகப் பரிசோதிக்கப்படவுள்ளன. இந்த வகை நுளம்புகள் காணப்படும் கிணறுகளில், பாவனையில் உள்ள கிணறுகளாயின் மீன் குஞ்சுகளும் பாவனை அற்ற கிணறுகளாயின் மருந்துகளும் தெளிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (உ-5,101)

## மாவீரர்...

டாள்குளத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியின் மாவட்ட இளைஞர் அணி அலுவலகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பலர் அதில் கலந்து கொண்டனர்.

அந்தப் பிரதேசத்தில் உள்ள போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களில் வறுமைக்கோட்டுக்குபட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனநாயக போராளிகள் கட்சியினரால் பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் புதுக்குடியிருப்பு அலுவலக வளாகத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

கைவேலி பெண்கள் அமைப்பைச் சேர்ந்த எம்.பி.ராஜேஸ்வரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 2ஆம் லெப். மாலதியின் நினைவாக பொதுச் சுடரை தமிழ்த் தேசிய முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஏற்றினார். கேப்பாபிலவு, முள்ளிவாய்க்கால், கைவேலி பெண்கள் அமைப்பின் பிரநிதிகள் சுடரேற்றினர். தொடர்ந்து அகவணக்கமும், மலரஞ்சலியும் நடைபெற்றன. (ற-56-ரி1)

## முக்கிய...

நாம் அமைதியாக இருக்கின்றோம்.

இவ்வாறு பொதுபலசேனாவின் பொதுச் செயலர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபான்மை மக்கள் பேசாமல் இருக்கின்றனர். சிறுபான்மையின அரசியல்வாதிகளே நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்த முயல்கின்றனர். அவர்களே நாட்டில் இனவாதத்தைத் தூண்டுகின்றனர். நாம் இயலாமையினால் பேசாமல் இருக்கவில்லை. எல்லா நாடுகளினதும் புலனாய்வுப் பிரிவுகள் இங்கே நிலைகொண்டுள்ளன. எமது நடவடிக்கைகளால் நாட்டில் பெரிய விளைவுகள் வந்துவிடக்கூடாது என்பதால் அமைதியாக இருக்கின்றோம்- என்றார். (உ-5-31)

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கம்)

## ஆதரவு...

வெளி நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று மைத்திரிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெவிக்கின்றன.

புதிய அரசமைப்பின் முக்கியத்துவம் தொடர்பிலும், அதற்கு அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் வகையிலுமே சர்வகட்சிக் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகத் தெரிய வருகின்றது.

புதிய அரசமைப்பு தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், சிவில் அமைப்புகளுக்கும் இடையிலான சந்திப்பும் இன்று இரவு நடைபெறவுள்ளது. விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும் அரச தலைவரை இன்று சந்திக்கவுள்ளது. (உ-5)

## பிரபாகரனின்...

ளார் ராகுல் காந்தி. குஜராத்தின் வதோதராவில் நேற்றுமுன்தினம் தொழிலதிபர்களுடன் கலந்துரையாடினார். பங்கேற்பாளர்கள் ராகுல் காந்தியிடம் சில கேள்விகளை முன்வைத்தனர். இலங்கையில் இறுதிப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்ததை நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள் என்றும் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ராகுல் காந்தி, "பிரபாகரனின் சடலத்தைப் பார்த்து நானும் எனது சகோதரி பிரியங்காவும் மிகவும் வேதனையடைந்தோம். பிரபாகரனின் குடும்பத்தினர் கொல்லப்பட்டதால் துயரமடைந்தேன். மற்றவர்களின் துயரங்களில் பங்குகொள்வதுதான் காந்தி குடும்பத்தின் பாரம்பரியம்" என்று குறிப்பிட்டார். (உ-5)

## நாமல்...

யப்பட்டனர். மத்தள வானூர்தி நிலையம் இந்தியாவுக்கு வழங்கப்படுவதை எதிர்த்து மகிந்த அணி கடந்த வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தது. இந்தப் போராட்டத்துக்கு நீதிமன்று தடைவிதித்த பின்னரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைத்தமை தொடர்பில் விசாரணைக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. வாக்குமூலம் வழங்க நேற்று அவர் பொலிஸில் முன்னிலையானார். வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, டி.வி.சானக்க, பிரசன்ன ரணவீர உள்ளிட்ட 6பேர் கைது செய்யப்பட்டனர். இன்று அவர்கள்நீதிமன்றில்முற்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

## 54 கிலோ...

கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியில் இடம் பெற்றது.

மல்லாகம் மதுவரித்திணைக்களத்துக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கஞ்சா மீட்பு நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டனர். திணைக்களத்தின் பொறுப்பதிகாரி வசந்த தலைமையில் சென்ற குழுவினர் கஞ்சாவைக் கைப்பற்றினர்.

வீடு ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் கஞ்சா மீட்கப்பட்டது. இது தொடர்பாக 47 வயது நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டார். அவர் நேற்று இரவு மல்லாம் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார். அவரை 14 நாள்கள் விளக்கமறியல் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-21,23)

## மோ.சைக்கிள்...

பட்ட நிலையில் உயிரிழந்தார். ஆவரங்கால் வல்லை முதன்மைச் சாலையில் விபத்து இடம் பெற்றது. ஆவரங்கால் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து முதன்மைச்சாலையில் நடப்பட்டிருந்த மின்கம்பத்துடன் மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர். அதில் பயணித்த இளைஞருடைய முகம் சிதைவடைந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்தில் சிக்கிக் காயமடைந்தவர் அங்கு நின்ற இளைஞர்களால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது. விபத்துத் தொடர்பான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் முன்னெடுத்துள்ள னர். (உ-21,11)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கலைமதி - இந்து இளைஞர் இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 11
சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில், புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மற்றும் ஆவ ராங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

**ஆவரங்கால் மத்தி. - கலைமதி**
ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியில் ஆவரங்கால் மத்திய விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதி யது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி முதல் இரண்டு செற்களையும் 32:30, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படை யில்வெற்றிபெற்று 2:0 என்று முன்னிலையில் இருந்தது. அடுத்த இரண்டு செற்களையும் 25:21, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது ஆவரங் கால் மத்தி. ஐந்தாவதும் இறுதியானதுமான செற்றை 23:21 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் கைப்பற்றிய கலைமதி அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. வாகீசன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

**இந்து இளைஞர் - பாரதி**
தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரை யிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளை ஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:20, 25:17, 25:23 என்ற புள்ளி களின் அடிப்படையில் முதல் மூன்று செற்க ளையும் கைப்பற்றி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. நிதர்சன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.
சிறிமுருகன் விளையாட்டுக் கழக மைதானத் தில் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை இறுதியாட்டம் நடைபெறவுள்ளது.
(ம-23)

# வென்றது நியூவாரியர்ஸ்

யாழ்ப்பாணம், ஒக். 11
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நியூவாரியர்ஸ் அணி வெற்றிபெற்றது.
திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூவாரி யர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும் பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதி யது. 4:3 என்ற கோல் கணக்கில் நியூவாரியர்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இளைஞர் அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 11
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி அபார வெற்றிபெற்றது.
மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளை யாட்டுக் கழக அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக் கில் இளைஞர் அணி அபார வெற்றிபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

**கே.ஸி.ஸி.ஸி. வி.கழக கூடைப்பந்தாட்டம்**
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொட ரில் இன்று இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் விளை யாட்டுக் கழக அணி மோதவுள் ளது.

**மைக்கல் வி.கழக கால்பந்தாட்டம்**
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாச்சிக்குடா சென். மேரிஸ் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் ஊரெழு றோயல் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளை யாட்டு கழக அணி மோதவுள்ளது.



**வவு. மாவட்ட கால்பந்தாட்டம்**
வவுனியா மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழ கங்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங் கள் வவுனியா நகரசபை மைதா னத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்ஹிஜிரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்சையின் விளையாட்டுக் கழக அணி மோத வுள்ளது.

**மைலோ கிண்ண கால்பந்தாட்டம்**
மைலோ கிண்ணத்துக்காக நடத் தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரை யப்பா விளையாட்டு மைதானத் தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஒலிம்பியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனி யன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளை யாட்டுக் கழக அணி மோதவுள் ளது. மாலை 5 மணிக்கு இடம்பெ றும் ஆட்டத்தில் கொக்குவில் பொற் பதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்கும ரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# மைலோ கிண்ண முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 11
மைலோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில், மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள்.
உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன.
அருணோதயா விளையாட்டுக் கழக அணிக்கும், கணே சானந்தா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் கணேசானந்தா அணி வெற்றிபெற்றது.
சக்திவேல் விளையாட்டுக் கழக அணிக்கும், சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோலெதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது.
வெள்ளி நிலா அணிக்கும், சென். செபஸ்ரியன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:0 என்ற கோல் கணக்கில் செபஸ்ரியன் அணி வெற்றிபெற்றது.
பாரதி அணிக்கும் கணேசானந்தா அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பாரதி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
செந்தமிழ் அணிக்கும் உதயசூரியன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் செந்தமிழ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
செபஸ்ரியன் அணிக்கும் கட்டைக்காடு சென். மேரிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென். மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)

# உடுப்பிட்டி மகளிர் மாணவிகள் தேசிய கரப்பந்தாட்ட அணியில்

யாழ்ப்பாணம், ஒக். 11
இலங்கைக் கடற்கரை கரப்பந்தாட்டத் தேசிய பயிற்சி அணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் இருவர் தெரிவு செய்யப்பட்டனர்.
இலங்கைக் கடற்கரை கரப்பந்தாட்ட தேசிய பயிற்சி அணிக்கு உடுப் பிட்டி மகளிர் கல்லூரி யைப் பிரதிநிதித்துவம் செய்த ஜனுசல்யா, அபி நயா ஆகியோரே அவ் வாறு தெரிவு செய்யப் பட்டனர்.
(ம-422)



# குத்துச்சண்டையில் ஹாட்லிக்கு வெள்ளிப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 11
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான குத்துச் சண்டையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதிநிதித் துவம் செய்த பி.விஷ்ணு வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான குத்துச்சண்டை கண்டி வித்தியால யக் கல்லூரி உள்ளக விளையாட்ட ரங்கில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற 18-19 வயதுக்கு உட்பட்ட 60-64 கிலோ எடைப் பிரி வில் பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த



பி.விஷ்ணு வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)



மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் நடப்பு வருடத்துக்கான தொடர் தொடர்பான அறிமுக நிகழ்வு யூ.எஸ்.விருந்தினர் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது. இதில் நெஸ்லே லங்கா பி.எல். சி.நிறுவனத்தின் விற்பனை முகமையாளர் எஸ்.ரவிந்திரன் நடப்பாண்டுக்கான வெற்றிக் கிண்ணத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் என்.வேதநாயகனிடம் கையளித்தார். (ம-23)

**ஐஸ்லாந்து சாதனை**
காலபந்தாட்ட உலகக்கிண் ணத் தொடருக்குத் தகுதி பெற்ற குறைந்த மக்கள் தொகை உடைய நாடு என்ற சாதனையைப் படைத்தது ஐஸ்லாந்து.
இதற்கு முன்னர் ரிடினிடாட் அன்ட் ரொபாக்கோ கடந்த 2006ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றிருந்தது. ஆனால் அடுத்த வருடம் ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலகக்கிண் ணத் தொடருக்குத் தகுதிபெற் றதன் மூலம் அயர்லாந்து அந்தச் சாதனையைப் படைத் தது. ரிடினிடாட் அன்ட் ரொபாக்கோவின் மக்கள் தொகை 13 லட்சம். ஐஸ்லாந் தின் மக்கள் தொகை 3 லட் சத்து 50ஆயிரம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## ஆப்கானின் பயிற்சியாளராக டீன் ஜோன்ஸ்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும், தற்போதைய பிரபல வர்ணனையாளருமானடீன்ஜோன்ஸ்ஆப்கானிஸ்தான் அணியின் இடைக் காலப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.
ஆப்கானிஸ்தான் அணி கடந்த ஜூன் மாதம் முதல் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடுவதற்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை ஒப்புதல் வழங்கியது. இதன்மூலம் இந்தியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 12 அணிகளில் ஒன்றாக ஆப்கானிஸ்தான் இடம்பிடித்துள்ளது.
ஆப்கானிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளராக இந்தியாவின் லால்சந்த் ராஜ்புட் இருந்து வந்தார். இவரது பதவிக் காலம் நீடிக்கப்படவில்லை. இதனால் கடந்த ஒகஸ்ட் மாதத்தில் இருந்து பயிற்சியாளர் இல்லாமல் ஆப்கானிஸ்தான் அணி விளையாடி வருகிறது. இந்த நிலையில் ஜோன்ஸ் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். (ம)



# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்; வழித்துத் துடைத்தது இலங்கை



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 2:0 என்று வழித்துத் துடைத்தது இலங்கை அணி.
ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த 6ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 482 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கருணாரத்ன 196 ஓட்டங்களையும், சந்திமல் 62 ஓட்டங்களையும், பெரேரா 58 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் யாசிர் ஷா 6 இலக்குகளையும், அப்பாஸ் 2 இலக்குகளையும், ஆமிர், ரியாஸ் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 262 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அசார் அலி 59 ஓட்டங்களையும், சொகைல் 56 ஓட்டங்களையும், அஸ்லாம் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பெரேரா, கேரத் இருவரும் தலா 3 இலக்குகளையும், லக்மல், ஹமகே இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
220 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி, வெறும் 96 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. குசல் மெண்டிஸ் 29 ஓட்டங்களையும், டிக்வெல்ல 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் ரியாஸ் 4 இலக்குகளையும், சொகைல் 3 இலக்குகளையும், யாசிர் 2 இலக்குகளையும், அப்பாஸ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
முதல் இன்னிங்ஸில் அடைந்த பின்னடைவால் பாகிஸ்தானுக்கு 317 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இரண்டாவது இன்னிங்ஸிலும் பாகிஸ்தான் பின்னடைவை எதிர்கொண்ட போதிலும், ஆசாத் சபிக், சர்பிராஸ் அகமட் இருவரும் நிதானத்தை வெளிப்படுத்தினர். நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவில் பாகிஸ்தான் அணி 5 இலக்குகள் இழப்புக்கு 198 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சபிக் 86 ஓட்டங்களுடனும், அகமட் 57 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 68 ஓட்டங்களுடன் அகமட்டை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்துவைத்தார் டில்ருவான் பெரேரா. 4 ஓட்டங்களுடன் வந்த வேகத்தில் திரும்பினார் ஆமிர். சபிக் சதம் கடந்தார். அவர் 112 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 248 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பாகிஸ்தான். 68 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இலங்கை.
ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் கருணாரத்ன தெரிவாகினார். (ம)



## இல்லை தோல்வி

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்களில் ஜேர்மனி அணி ஒரு ஆட்டத்திலேனும் தோல்வியைச் சந்திக்காமல் சாதித்துள்ளது.
2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறும் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஜேர்மனி அணி நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் நடை பெற்று முடிந்த 10 தகுதிச் சுற்று ஆட் டங்களிலும் வெற்றிபெற்ற பெருமை ஜேர்மனிக்குக் கிடைத்தது.
தகுதிச் சுற்று ஆட்டங்களில் தோல்வியைச் சந்திக்காமல் முக்கிய சுற்றுக்குள் முன்னேறிய இரண்டாவது அணியாக ஜேர்மனி தன்னைப் பதிவுசெய்தது. இதற்கு முன்னர் கடந்த 2010ஆம் ஆண்டு ஸ்பெய்ன் இவ்வாறான அடைவைப் படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


# 28 வருடங்களின் பின்னர் உலகக் கிண்ணத்தில் எகிப்து



கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் முக்கிய சுற்றுக்கு 28 வருடங்களின் பின்னர் தகுதி பெற்றுள்ளது எகிப்து.
ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆபிரிக்க நாடுகளின் பிரிவில் எகிப்து, காங்கோ அணிகள் கெய்ரோவில் நேற்றுமுன்தினம் மோதின. 2:1 என்ற கோல் கணக்கில் எகிப்து வெற்றி பெற்றது.
'இ' பிரிவில் இடம் பிடித்துள்ள எகிப்து அணிக்கு இது 4 ஆவது வெற்றியாக அமைந்தது. 5 ஆட்டங்களில் விளையாடி உள்ள அந்த அணி 4 வெற்றிகளுடன் 12 புள்ளிகள் பெற்று தனது பிரிவில் முதலிடத்தைத் தக்கவைத்துள்ளதுடன் உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளது. கடைசியாக அந்த அணி 1990ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் விளையாடத் தகுதி பெற்றிருந்தது.
எகிப்தின் நட்சத்திர வீரரான முகமது சலாஹ் 63ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். ஆட்டம் முடிவடைய 2 நிமிடங்களே எஞ்சியிருந்த நிலையில் காங்கோ அணி பதிலடி கொடுத்து 1:1 என சமநிலையை ஏற்படுத்தியது. கடைசி நிடத்தில் எகிப்து அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதை பயன்படுத்தி முகமது சலாஹ் மற்றொரு கோலைப் பதிவு செய்ய எகிப்து வெற்றிபெற்றது.
எகிப்தின் இந்த வெற்றி அந்த நாட்டின் பல நகரங்களில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. (ம)

## தங்கப் பந்துக்கான பரிந்துரைப் பட்டியல் நேற்று அறிவிப்பு

கால்பந்தாட்ட உலகின் உயரிய தனிநபர் விருதான தங்கப்பந்து விருதுக்காக 30 வீரர்களைச் கொண்ட பரிந்துரைப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. ரொனால்டோ, மெஸ்ஸி, நெய்மர் உள்ளிட்ட வீரர்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.
மெஸ்சி ஐந்து முறை இந்த விருதைப் பெற்றுள்ளார். ரொனால்டோ நான்குமுறை இந்த விருதைப் பெற்றுள்ளார். ரியல் மட்ரிட் அணி இந்த வருடம் லா லிகா, சம்பியன்ஸ் லீக் கிண்ணங்களை வெல்வதற்கு ரொனால்டோ முக்கிய காரணமாக இருந்தார். இதனால் நடப்பு வருட விருதை ரொனால்டோ கைப்பற்றி மெஸ்ஸியைச் சமன்செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# இந்திய அணிக்கு முறையான கவனிப்பு



இந்தியாவுக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி மிக இலகுவான வெற்றிபெற்று, முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுத்தது. இதன்மூலம் எதிர் வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் கிண்ணம் தீர்மானமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர் ரோகித் வெறும் 8 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். கோக்லி ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்க முதலாவது பந்துப்பரிமாற்றத்திலேயே இந்திய அணி இரண்டு இலக்குகளை இழந்தது. இந்த இலக்குச் சரிவுகளால் அளவுக்கு அதிகமான நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நெருக்கடிக்கு இந்திய அணி தள்ளப்பட்டது. டோனியாலும் நேற்று அணியை மீட்டெடுக்க இயலவில்லை. கேதர் யாதவ் பெற்ற 27 ஓட்டங்களும், பாண்டியா பெற்ற 25 ஓட்டங்களுமே இந்திய அணி 100 ஓட்டங்களைத் தாண்டுவதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. முடிவில் 118 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இந்திய அணி. பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 13 ஓட்டங்களில் அதன் ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்தது. எனினும் அதன் பின்னர் இலக்குச் சரிவு ஏற்படவில்லை. ஹென்றிக்ஸ், ஹெட் இருவரும் இணைந்து இந்தியப் பந்துவீச்சாளர்களை ஓரங்கட்டினர். அரைச்சதம் கடந்தார் ஹென்றிக்ஸ். முடிவில் 27 பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது ஆஸ்திரேலிய அணி. (ம)

## காயங்கள் வேண்டாம்; என்கிறார் கிறிஸ் லின்

"எனக்கு இன்னொரு முறை தோள்பட்டையில் காயம் ஏற்பட்டால், கிரிக்கெட் வாழ்க்கையே முடிவுக்கு வந்துவிடும்" என்று ஆஸ்திரேலிய அணியின் அதிரடி வீரர் கிறிஸ் லின் தெரிவித்தார்.

சில வீரர்கள் அடிக்கடி காயம் உள்ளிட்ட உபாதைகளுக்கு உள்ளாவார்கள். கிறிஸ் லின்னும் அவ்வாறான ஒரு வீரரே. முன்னதாக முடிவடைந்த ஐ.பி.எல். தொடரிலும்கூட காயம் காரணமாக ஏராளமான ஆட்டங்களை லின் தவறவிட்டிருந்தார். எனவே தொடர்ச்சியாக காயமடையும் வீரரை அணியில் வைத்திருக்க இயலாது என்று தெரிவித்து, மேற்கு ஆஸ்திரேலிய அணி லின்னை தனது ஒப்பந்தத்தில் இருந்து நீக்கியுள்ளது. இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே லின் இவ்வாறு தெரிவித்தார். "ஏமாற்றமாகத் தான் இருக்கிறது ஆனால் சரியாகத்தான் நடக்கும். சில தொடர்களில் விளையாட வேண்டும். அடுத்த 12 மாதத்துக்கு உடல்தகுதியோடு இருக்க வேண்டும். நான் காயத்தில் இருந்து மீண்டு, மீண்டும் கிரிக்கெட் விளையாட வேண்டும்" என்று மேலும் தெரிவித்துள்ளார். (ம)

திறமைக்கான திறவுகோல் நாங்கள் தருகின்றோம்.
எமது புதிய நிறுவனத்திற்கு உடனடி வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இது சம்பந்தமான நேர்முகத்தேர்வுகள் யாழ்ப்பாணத்தில் உள்ள Everest Pvt Ltd நிறுவனத்தில் காலை 09 மணிமுதல் மாலை 02 மணிவரை நடைபெறவுள்ளது.
O/L தகைமை உள்ளவர்களும் விண்ணப்பிக்கமுடியும்.
◆Distributer ◆Supervisor ◆Stock Keeper
A/L தகைமை உள்ளவர்கள்
◆Sales Accountant ◆Manager ◆Acting Manager
உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
Pirapa - 077 227 2681, Pavithira - 077 304 3993, Arsath - 071 161 0014
வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L, A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், வீட்டுப்பெண்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
2வது சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 14.10.2017
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 16.10.2017
1.காலை 08-10 2.காலை 10-12
பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

வட இந்திய காசி யாத்திரை
நாள்கள்: 10 ஆரம்பம்: 19.10.2017
செல்லும் இடங்கள்: டெல்லி, நாராயணசுவாமி கோயில், ஆக்ரா, தாஜ் மஹால், செங்கோட்டை, மதுரா, கிருஸ்ணஜென்மபூமி, பிரேம்மந்திர் பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், காசியில் 2நாள் (வாரணாசி), கயா காலமானவர்களுக்கு பிதிர்க்கடன் செய்யுமிடம், புத்தகயா (புத்தாலயங் கள்), அலகாபாத் (கங்கா, யமுனா, சரஸ்வதி), திருவேணி சங்கமம், சீத்தாமடி (சீதை தாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம்) வேறு இடங்களும் காணலாம். அத்துடன் இராமேஸ்வரம், நவபாஷாணம், உத்திரகோஷமங்கை, திருப்புலானி, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரத் தரிசனம், அப்துல்கலாமின் மணிமண்டபமும் காணலாம். ஒரு நாள் சொப்பிங்.
பெற்றுக் கொள்ளும் ரூபாய்க்கு எமது சேவைகள்
4 விமான பயண டிக்கெட், மடப்பள்ளி ஆள்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு (மூன்று வேளை), கோப்பி, ரீ, குடிநீர் (மினரல் வோட்டர்) 2பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி மேலும் கொழும்பிலிருந்து எயார் போட் போக வர வாகன வசதி.
குறிப்பு : மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரவும் திரும்ப கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லவும் எமது செலவில் வாகன வசதி செய்து தரப்படும். மடப்பள்ளி ஆள்கள் சமைப்பதால் பிராமண சமூகத்தினரும் எவ்வித தயக்கமுமின்றி கலந்து கொள்ளலாம். விவரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.
விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No: 59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
T.P : 077 768 0102, 077 736 2154

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்
தோற்றம் 25 . 05 . 1944
மறைவு 12 . 09 . 2017



அமரர் சின்னப்பு விஜயரட்ணம்
(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்)
கடந்த 12.09.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் சின்னப்பு விஜயரட்ணம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (12.10.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
எமது குடும்பத்தலைவரது மறைவுச்செய்தி கேட்டு ஆறுதல் கூறியோருக்கும் நேரில்வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி வழியில் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.
குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.
இராஜவீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய். 077 962 4067
குடும்பத்தினர்.

Win Repair
சகல விதமான குளிர்சாதனப்பெட்டிகளும் A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
-077 964 8942

வீட்டுடன் காணி விற்பனைக்கு
நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு.
காணி விற்பனைக்கு உண்டு.
இடம் :- கொழும்புத்துறை வீதி.
பாண்டியன்தாழ்வு. யாழ்ப்பாணம்.
076 785 1067

மணப்பெண் தேவை
சர்வதேச தரத்தில் மென்பொருள் (Apple...) தயாரிப்பாளரான, கிறீஸ்தவ பிரபல கவிஞர் மகன் (38+) இற்கு அழகிய படித்த Dr BEng BSc BIT BK (6-12) வித்தியாசத்தில் மணப்பெண் தேவை.
( மதம்மாறும் இந்துக்களும் ஏற்கப்படுவர் )
Photo ➡ www.seaaav.com/ME/
Call 0772420337

KBK Accounting Centre
★ கந்தர்மடச்சந்தி (Tue, Fri → 3-6 pm)
★ கொழும்புத்துறை (Sat, Sun → 2-6 pm)
A/L 2018 உயர்தரக்கணக்கீடு A/L 2019
MR.BALAKAJEN
B.com (Jaf), H.N.Dip-in-ACC (ATI), Dip-in-Edu (ousc), M.com
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
(O/L Grade-10 - வணிகக்கல்வியும் கணக்கீடும்)
உங்கள் அனுமதிகளுக்கு : 076 565 5956

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இறுதி சந்தர்ப்பம்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
அமெரிக்கா செல்லும் 51 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
0768226243
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240
சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

வேலையாள்கள் தேவை
213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் "லிங்கன் கிறீம் ஹவுஸ்" நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.
1. கேக் தயாரிப்பாளர்கள்: ஐசிங் கேக் உட்பட சகல விதமான கேக், பணிஸ் தயாரிக்கக்கூடியவர்கள்.
2. கிளீனர்ஸ்: சகல விதமான கிளீனிங் வேலைகளும் தெரிந்த வர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
நிறுவனர் - லிங்கன் கிறீம் ஹவுஸ்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## சிறப்பாகச் செயற்பட்ட பொலிஸாருக்குப் பாராட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக் கான பாராட்டுவிழா நேற்று ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. முல் லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு, புதுக் குடியிருப்பு, முள்ளியவளை, ஒட்டுசுட் டான்,மல்லாவி, வெலிஓயா பிரதேசங்களில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்க ளில் சிறப்பாகச் செயற்பட்ட 75 பொலிஸ் உத்தி யோகத்தர்களுக்கே இந்தப் பாராட்டு விழா இடம்பெற்றது.

(21.ரி3.500)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் 5 இற்கான புலமைப்பரிசில்
பரீட்சையில்
**யா/ இணுவில் மத்திய கல்லூரி**
மாணவன்
**செந்தில்குமரன் செகராஜன்**
**187 புள்ளிகளை**
பெற்று பாடசாலையில முதலாம் நிலையிலும்
யாழ் மாவட்டத்தில் 9 ஆம் நிலையிலும்
தடம்பதித்து கல்லூரிச் சமூகத்திற்குப் பெருமை
சேர்த்தமையை இட்டுப் பாராட்டுகின்றோம்.
தொடர்ந்து ஒளிர்ந்தே மேலோங்க
உருத்துணர்வுடன் வ.ழ்த்துக்கள் உருத்தாக
கடமையின் கண்டே ண வழிகாட்டிய
அதிபர். ஆசிரியர்களுக்கும் அகமகிழ்ந்தே ஊட்டும் நல.றிகள்.

Best Wishes

Congratulations

**வாழ்த்துவோர்:**
**செகராசபிள்ளை செந்தில்வேல் (பழையமாணவன் - ஆசிரியர்)**
**(பெரியப்பா குடும்பம்) ,அப்பம்மா - திலகவதி**

## CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online form filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
**செல்ல வழிகாட்டல்**

## Royal Visa Consultants & Education Service

No.128, Jampettah Street,
Colombo -13
Haarini : **011 232 3975**
Email: rvces_consultants@yahoo.com Office : **077 721 6291**


## விதை உருளைக்கிழங்கிற்கான கூறுவிலை கோரல்

யாழ் மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சங்கங்க-ளின் சமாசம் (வ.து) 2017- 2018 பெரும்போக செய்கைக்கான விதை உரு ளைக்கிழங்குக்கான கேள்விகளைக் கோருகின்றது.

| இல. பொருளின் விவரம் | இனம் | அளவு |
|---|---|---|
| 1. விதை உருளைக்கிழங்கு | றெட்லசோடா(அமெரிக்கன்) | 2745-137 மெ. தொன் |
| 2. விதை உருளைக்கிழங்கு | சசி (பிரான்ஸ்) | 2746-138 மெ.தொன் |

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் உள்ளடங்கிய தங்களால் வழங்கக்கூடிய இனம், அளவு , காலம் , ஏனைய சலுகைகள் உள்ளடங்கிய மூடிய கூறு விலையை தலைவர் - இ.தெய்வேந்திரம் யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சங்கங்களின் சமாசம் ,இலகடி ,கோப்பாய் வடக்கு ,கோப்பாய் என்னும் முகவரிக்கு 23.10.2017 அன்று பி.ப 2.00 மணிக்கு ம்ன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறும், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விதை உருளைக்கிழங்கு கெள்வனவு எனக் குறிப்பிடுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**இ.தெய்வேந்திரன்**
தலைவர் .
யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
**முத்துராசா கனகராசா** (மெக்கானிக் குட்டி)



கடந்த 11.09.2017 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியை நிகழ்வுகள் இன்று (11.10.2017) புதன்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அனன்ாறின் ஆத்மாசாந்திப்பிரார்த்னையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 47/1 , யமுனா வீதி,
நல்லூர் ,யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.
077 129 6170, 077 867 9735

மண்ணில் 21 . 10 . 1943
விண்ணில் 11 . 09 . 2017

திறந்தமற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2016/2017 (வெளிவாரி)

## Bachelor of Business Management Degree Programme – 2016/2017 (External)

### புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை–2016

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருடகால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்குப் புதிய மாணவர் களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**அனுமதிக்கானதகைமைகள்:**

* க.பொ.த. (உ/த) பரீட்சை– 2015 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதியானவர்கள்

அல்லது

*பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடியக.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமானவேறுதகைமையைக் கொண்டவர்கள்.

**வியாபார முகாமைத்துவமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

*பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட. 1ஆம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவமாணி இரண்டாம் வருடகற்கை நெறிக்கு. உரிய தகைமைகளைக் குறிப் பிட்டுவிண்ணப்பிக்கமுடியும்.

**முக்கியகுறிப்பு :-** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காகப் பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர்தெரிவு:**
விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவுசெய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

1. விண்ணப்பப் படிவத்தினை நேரடியாக பெறவிரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில்,விண்ணப்பமற்றும் பரீட்சைக் கட்டண மாகரூபா1000 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், மற்றும் திறந்தமற்றும் தொலைக்கல்வி நிலை யத்தில் இருந்துஅலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்பு வோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, ரூபா 1000இற்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா40.00 பெறுமதியுடைய முத்திரைஒட்டப்பட்ட25 X 20செ.மீ அளவுடையதபால் உறையுடன், பிரதிப் பதிவாளர், திறந்தமற்றும் தொலைக்கல்விநிலையம்,யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலிஎன்ற முகவரிக்குஅனுப்பிப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் பிரதிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்கமேல் **மூலையில் "வியாபார முகாமைத்துவ-மாணி பட்டப்படிப்பு"** எனதெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்பமுடிவுத்திகதி :** 17.11.2017. (விண்ணப்பமுடிவுத் திகதிக்குபின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**மேலதிகவிபரங்களுக்கு:** 021 222 3612, 021 222 3610, 021 222 1106 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
**10.10.2017**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## மரண அறிவித்தல்



*பிறப்பு* *02.12.1938*
*இறப்பு* *10.10.2017*

## நடராசா வடிவேலு
### (ராசுகுஞ்சியய்யா)

சரவணையைப் பிறப்பிடமாகவும் நாரந் தனை மத்தியை வசிப்பிடமாகவும் தற் போது வண்ணார்பண்ணையை வசிப்பி டமாகவும் கொண்ட நடராசா வடிவேலு நேற்று (˚0.10.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நட ராசா - தெய்வானைப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசமணிதம்பதியரின் அன்புமருமகனும் பாக்கியவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி பூமணி, முத்துராசா, சரஸ் வதி, மகாலக்ஷ்மி, சிவசுப்பிரமணியம்மற்றும்ருக்குமணிதேவி, தாரணதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்க ளான மலர், பாலசுந்தரம், ஜெயந்தி, வில்வராசாமற்றும்திருச்செல்வம், சரோஜா தேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2017) வியாழக்கிழமை பிற பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 520 4833,**
**077 130 2559**

**51, கேசாவில் வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் பகிரங்க பிஸ்கால் ஏலவிற்பனை

ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி
இல. 479, ரி பி ஜயா மாவத்தை
கொழும்பு - 10
கிளை அலுவலகம்
இல. 146, பிரதான வீதி, சங்கானை
வழக்காளி

வழக்கு இல. கா.சு 11.2016
(கடன் அறவிடுதல்)

எதிராக
1. இராஜநாயகம் ஸ்ரீரங்கன்
2. மனோகரி ஸ்ரீரங்கன் இருவரும்
காரைநகர் வீதி (பிரதான வீதி)
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
எதிராளிகள்

2017 ஆம் ஆண்டு தைமாதம் 03 ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய திருமதி ஆ. நந்தினிதேவி ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக் கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட இவ் விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ் விற்பனையை நடாத்த மன்று நியமித் துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த தொல்புரத்தில் உள்ள இலந்தைசிட்டி என்னும் நில பர 08 குளி 05.10 விஸ்தீரணமுள்ள ஆதனத்தில் நின்று 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன். எதிராளிகள் வழக்காளிக்கு ரூபா 2, 259, 415. 01 தொகையும் முழுத்தொகையும் செலுத்தப்படும் வரை சட்டவட்டியும் வழக்குச் செலவும் கொடுக்க வேண்டியுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாண யாழ்ப்பாண மாவட்ட வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று தொல்புரம் இறையில் தொல்புரம் மேற்கு (ஜே - 169) கிராம சேவகர் பிரிவு வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் 02 ஆம் வட்டாரத்தினுள் காரைநகர் வீதி இல. 253 இல் அமைந்த "இலந்தைசிட்டி" என்றழைக்கப்படும் ஆதனமும் வீடும் கிணறும் பயிர்வகைகளும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். கனகராசனினால் 07.03.2010 இல் 1314A இலக்கத்தில் வரையப்பட்ட நில அளவைப் படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளதன்படி அளவு நிலப்பரப்பு எட்டும் குளி ஐந்து தசம் ஒன்றும் (நில பர 08 குளி 05.10) இதற்கு எல்லைகள் கிழக்கு ஒழுங்கை வடக்கு வெற்றிவேல் சூரியகுமாரினதும் பெண் வேல்விழி யினதும் ஆதனமும் எஸ். சிற்றம்பலத்தின் உரித்தாளரின் ஆதனமும் மேற்கு பொன்னாலை வீதி தெற்கு ஆறுப்பிள்ளை இராசநாயகத்தின் உரித்தாளரின் ஆதனமும் சேச் ஆதனமும் இடங்கலும் வடக்கெல்லை ஆதனத்திலுள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இது யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் புத்தகம் பக்கம் S25 /58 இல் பதியப்பட்டுள்ளது.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலில் ஒரு பங்கை (1 /4) உடன் அவ்விடத்தில் செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்தல் வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்) 1%
பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக் கோவையின்படி
விளம்பரச் செலவும் பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்துச் செலவுகள்
விற்பனைக் கமிசன் 2 1/2%
விற்பனை ஒப்பந்தக்கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)
**2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 ஆந் திகதி**

நீதிமன்ற கட்டளைப்படி
பதிவாளர்.

## மரண அறிவித்தல்



### திருமதி பிலோமினா செபஸ்தியாம்பிள்ளை

புதுமைமாதா கோயில் கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா செபஸ்தியாம்பிள்ளை (10.10.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம் ,கிறிஸ்தீனம்மா, மத்தீனா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற ஆரோக்கியம் அவர்களின் அன்புமைத்துனியும் ராஜேஸ்வரி, ராஜகுமார் (நோர்வே), SVE ஜெயக்குமார் (Lanka Cement) , ராஜபாலன் (ஓய்வூதியர் யாழ் மாநகரசபை) ,ராஜகுமாரி, மைக்கேல் ஆஞ்சலோ (ஓய்வூதியர் யாழ் அஞ்சலகம்) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற ஜோசவ், ரஜனி (நோர்வே) ,மேரிராணி, கீதாபொன்கலன் (ஓய்வூதியர் யாழ். பல்கலைக்கழகம்), ஸ்ரெலா ஆகியோரின் அன்புமாமியும் ராஜா (PHI யாழ். சுகாதாரத்திணைக்களம்),ராஜி (நோர்வே), செலினா (நோர்வே), பிரியதர்சினி, அருணோதயன் (ஆஸ்திரேலியா), ஞானோதயன் (CECB Colombo), சந்திரோதயன், நோயல் (Ceylon Theatres - Jaffna), நித்தியானந்தா (நூலகர் நானாட்டான் பிரதேசசபை), தயாளினி, அமலன், கிறேசியன் (யாழ். கல்வியற் கல்லூரி) ,செபஸ்ரியன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.10.2017) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு பரிசுத்த புதுமை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 6955 286**

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இராசையா கார்த்திகேசு

(இளைப்பாறிய வடமாகாண வருமான வரிப் பொறுப்பதிகாரி)



தோற்றம் 01.02.1939 — மறைவு 15.11.2010

எங்கள் குடும்பத்தலைவர்
எம்மை விட்டுப் பிரிந்து ஏழு
ஆண்டுகள் கழிந்தாலும்
உங்கள் நினைவுகளுடன் என்றும்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**39/2, சோமசுந்தரம் லேன்,யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்கள்

### டானியல் ஜேம்ஸ்



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் ஜேம்ஸ் நேற்று (10.10.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியல் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஜேம்ஸ் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான யோசுவா, அருணோதயம் மற்றும் டேவிற் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கமலதாஸ் மற்றும் செபமாலைநாயகி, ஜெயதாஸ், பேரின்பநாயகி (பிரான்ஸ்), ரெம்சிடொரின், அன்ரனிக்கா, யூட்றஜிதா (யாழ்.ஸ்ரீபுத்தூர் சோமஸ்கந்தா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கொலஸ்ரிக்கா, தபேந்திரராசா, கொலஸ்ரீனா (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), பிரான்சிஸ் (பிரான்ஸ்), கொன்சேகா, யூட்தவராசா (படப்பிடிப்பாளர்), சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் ராயு, கஜன், யாழினி, சரோன், திபோனிகா, தியோபின், புளோரியன், பெல்சியா, இனிஜா, தூயவன் ஆகியோரின்பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (12.10.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோப்பாய், புனித மரியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கோப்பாய் மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் தெற்கு.**
**கோப்பாய்.**
**தகவல்: குடும்பத்தினர்.**



### தம்பையா அருணகிரிநாதர்

பருத்தித்துறை வியாபாரமூலையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா அருணகிரிநாதர் நேற்று (10.10.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா பொன்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மா தம்பதியரின் அன்புமருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் விக்கினேஸ்வரநாதன் (கனடா), குகனேஸ்வரநாதன் (லண்டன்), சிவநேசநாதன் (கனடா),கிருஸ்ணநேசநாதன் (கனடா), ரஞ்சநேசநாதன் (ஜேர்மனி) ,ரவீந்திரநாதன் (இராமநாதபுரம்), திருநாதன் (லண்டன்), தவநாதன் (இந்தியா), கலியாணி (வட்டக்கச்சி), கலைநாதன் (வட்டக்கச்சி) ,அருள்வதனி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவகௌரி (லண்டன்), தர்சினி (கனடா), சாந்தி (கனடா), பிறேமசீலி (இராமநாதபுரம்) ,சுபாஜினி (லண்டன்), தேனுஜா (இந்தியா), சிவசீலன் (வட்டக்கச்சி) ,செந்தில்குமரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2017) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டக்கச்சி மம்மில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விநாயகர் வீதி,**
**வட்டக்கச்சி.**
**தகவல்: குடும்பத்தினர்.**
**077 8011 479**

## மருத்துவமனையின் வளர்ச்சியில் அனைவரும் பங்களிக்கவேண்டும்

*போராட்டம் தொடர்பில் பணிப்பாளர் அறிக்கை*

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை. ஒரு சில குறைபாடுகள் தொடர்பில் எம்மால் பரிசீலனைசெய்து நிவர்த்தி செய்யப்படும். வைத்தியசாலை அனைவருக்கும் சொந்தமானது. அதன் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் அனைவரும் பங்களிக்க வேண்டும். தனிப்பட்டவர்களின் நலன்கருதியே இந்தப் போராட்டம் இடம்பெற்றதாகக் கருதவேண்டியுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பாக பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் செய்திக்குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள். சொல்லும் குறைபாடுகள் எதுவும் எமது மருத்துவமனையில் இல்லை. ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின் பொதுமக்கள் நேரடியாக அல்லது எழுத்து மூலமாக எமக்கு அறியத்தரும்போது விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்வுகள் வழங்கப்படும்.

ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்களில் முக்கியமானவர் திடீர். இறப்பு விசாரணை அதிகாரி. இவர் மீதான முறைப்பாடுகளைப் பதிவு செய்து சுகாதார அமைச்சின் செயலாளருக்கு உரிய விசாரணை மேற்கொள்ளும்படி அனுப்பியிருந்தோம். இப்போது அந்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. நீதி அமைச்சுக்கும் இவர் இந்த கடமைக்கு பொருத்தமற்றவர். அவரை மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை களுக்காக அனுப்பவேண்டாம் என்றும்கோரி கடிதம் மூலமாக அறிவித்திருந்தோம். அதற்கான விசாரணைகளும் நடைபெற்று வருவதாக அறிந்திருந்தோம்.

தன்மீது இருக்கும் குற்றச்சாட்டுக்களை மூடி மறைப்பதற்கு என்றே அவர் இந்த ஆர்ப்பாட்டத்தைச் செய்துள்ளார். சுகாதார அமைச்சின் செயலரின் விசாரணைக் குழு இங்கு வந்த போது விசாரணையில் கலந்து கொள்ள மாட்டேன் என்று அறிவித்திருந்தார். விசாரணையில் இருந்து விடுபடுவதற்கு போலியாக இந்த ஆர்ப்பாட்டத்தைச் செய்திருந்தார் என்றே நம்பப்படுகின்றது - என்றுள்ளது. (4)

### வீடு வாடகைக்குண்டு

4 அறைகள் கொண்ட நாச்சார் வீடு கொக்குவில் மேற்கில் வாடகைக்குண்டு.
தொடர்பு - 077 386 7458

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தைக்கு அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு-077283 6963

### விற்பனைக்கு

5 மாதம் நிரம்பிய டோமன் ஆண் நாய்க்குட்டி தடுப்பூசி போட்டபடி விற்பனைக்குண்டு
தொடர்பு - 077 869 1461

### விற்பனைக்கு

நல்ல தரமான பழைய ஓடுகள், தீராந்திகள், பனைமரங்கள், கட்ட இடிபாடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 723 2535

### கார்,வான் வாடகைக்கு தேவை

நிறுவனத்திற்கு கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்கு தேவை.
தொடர்பு- 076 448 1101

### விற்பனைக்கு

யாழ்நகரில் வர்த்தக மையப்பகுதியான ஆஸ்பத்திரி வீதியில் குகன் ஸ்டோர்ஸ் அருகில் 22 அடி அகலமும் 202 அடி நீளம் கொண்ட காணித்துண்டும் இரட்ணம் பாமசிக்கருகில் 32 அடி அகலம் 202 அடி நீளம் கொண்ட இருமாடியுடன் கூடிய கடையும் யாழ்.Brown வீதியில் 2 பரப்பில் அமைந்த வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 0777232535